தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத்திங்களிதழ்

அடிமைக் கூட்டம்!

நாயடிமை செய்பவராய்த் தமிழரெல்லாம்
நலிகையிலே, அமைச்ச ரெல்லாம்
போயடிமை செய்கின்றார் வடவர்க்கே;
அவர் வாய்ச்சொல் தலைமேற் கொண்டே!
வாயடிமை கொண்டதமிழ்த் தலைவரெல்லாம்
முழங்கிடுவார்; வளர்ச்சி காணார்!
தாயடிமை யுறக்கண்டும் அவள் மானம்
விலைபோக்கும் தகைமை யோரே!

—*—

ஆனி. தி. பி. 1995.

ரூ0
50 காசு



தென்மொழி

தனித் தமிழ் இலக்கியத் திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 2. | ஆனி – தி. பி. 1995 (1964 சூன்) | ஓலை 5.

நேருவுக்குப்பின் இந்தி(ய) ஆட்சி!

முன்னாள் தலைமையமைச்சர் நேருவின் மறைவு இந்தியாவிற்கும் உலகத்திற்கும் குறிப்பாகத் தமிழகத்திற்கும் ஓரளவு பெரிய இழப்பாகும். பல்வேறு இனங்களையும், பண்பாடுகளையும், மொழிகளையும் கொண்ட இந்தியாவின் உள்துறை நடவடிக்கைகளும் வேறுபாடுகளும் எவ்வாறிருப்பினும், அவற்றின் மெலிவாலும் வலிவாலும் வெளிநாட்டார் இந்தியாவின் மேல்கொண்ட இரக்கமும், உதவியும் மாறுபாடில்லாமல் பதினேழு ஆண்டுகளாக இயங்கிவந்தன என்றால், அது நேருவின் வலிந்த அரசியல் கொள்கைகளாலும், ஆட்சி விரகாலுமே என்பதில் ஐயமில்லை. அண்டை நாடுகளான பாக்கித்தானும், சீனவும் அடிக்கடி எழுப்பிவந்த எல்லைப்பூசல்களில், பெரும்பாலான உலகநாடுகள் இந்தியாவின்பால் ஓரளவு பரிவும் துணையும் காட்டியமைக்கு நேருவே முதற் காரணம். 'நேருவே இந்தியா, அவர் கொள்கையே இந்தியாவின் கொள்கை' என்று உலக அரசியல் நோக்காளர்கள் கருதுமளவுக்கு நேரு உலக நாடுகளிடையே செல்வாக்குப் பெற்றிருந்தார். இனி எவர் தலைமையமைச்சராக வரினும் நம் வெளிநாட்டுத் தொடர்பு தளர்வுற்றே இருக்கும் என்பதில் எவர்க்கும் எள்ளத்துணையும் ஐயப்பாடு வேண்டா. இந்தியாவின் புறவியக்கம் இவ்வாறு தளர்வுறும்படி யிருக்க, இதன் அகவியக்கம் எவ்வாறு இருக்கும் என்பதுபற்றிச் சிறிது எண்ணிப் பார்ப்போம்.

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு சாத்தையா, செம்பியன்.

உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.

அச்சகம்: மித்திரா, கடலூர்-2.

ஏறத்தாழ இருபது இருபத்தைந்து ஆண்டுகளாக நடை பெற்று வரும் இந்தி மொழித் திணிப்புப் போராட்டத்தின் தோல்வியே தமிழர்களின் நன்மையாகவும், சீன, பாக்கித்தானியரின் எல்லைத் தொல்லைகள்போல் அகக்காழ்ப்பு இல்லாமல், ஓரளவுக்குக் குடும்பப் பூசல் போலவே இருந்தமையால் இந்திய ஒற்றுமைக்குப் பெருங் கேடின்மையாகவும் இருந்தது. வட நாட்டில் உள்ள இந்திவெறியர்கள், தென்னாட்டார்மேல் வலிந்து இந்தியைப் புகுத்த வேண்டும் என்று முனைந்தெழுந்த பொழுதெல்லாம், நேருவே அவர்கள் எழுச்சிக்குத் தணிவு கூறி ஒருவாறு நிலைமையை வளர விடாமலும், ஆட்சியில் கசப்புணர்வு பரவவிடாமலும் தடுத்து வந்தார். இந்தியரின் அரசியல், அறிவியல், இணக்கத் தொடர்பாக உள்ள ஆங்கிலத்தை உடனே அகற்றிவிட்டு, அவ்வயன் மொழி இயங்கும் முறைப்படியே இந்தியை இயங்க வைத்தல் வேண்டும் என்று தேசாய்களும், சாத்திரிகளும் அடிக்கடி பொங்கிய பொழுதெல்லாம், நேரு ஒற்றுமை நன்னீர் விட்டு ஆற்றியிருந்தார் இனி, இத் தணிவுகளுக்கெல்லாம் இடமின்றி, வட நாட்டு மொழி வெறியரின் கைகள் ஓங்கியிருக்குமாகையால், நேரு மறைந்த இந்தியாவின் ஆட்சி நிலை பெரும்பாலும் தமிழர்க்கு அஞ்சத்தக்கதாகவே இருக்கும் என்பதில் உண்மைத் தமிழர்க்குள் வேறுபாடான கருத்து இருக்க முடியாது. அதுவும் திரு. இலால்பகதூர் சாத்திரி தலைமையமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின், நடுவணரசின் இந்திக் கொள்கை வலிவாக இருக்குமென்றும், இது தமிழக மக்களிடையே மாறுத கசப்புணர்வு வளர்ந்து வருவதற்குத் தலையாய காரணமாக இருக்குமென்றும் கணித்துக் கூறலாம். ஒரு வேளை, 'தமிழகத்தில இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகாமல் இருத்தல் வேண்டி, நேரு இருந்த பொழுது தாம் கொண்ட வலிவான இந்திக் கொள்கைகளில் சில மாற்றங்களைச் செய்து கொள்வதும் அவற்றில் தணிந்து போவதும், இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குத் துணைசெய்யும்' என்ற அடிப்படையில் திரு. சாத்திரியாரின் அரசியல் மூளை வேலை செய்ய முற்படாதா, என்று எவரும் எண்ணி ஏமாற வேண்டியதில்லை அத்தகைய தொல்லை தரா (அகிம்சை)க் கொள்கை காந்தியாரோடு எழுபத்தைந்து விழுக்காடும், நேருவோடு எஞ்சிய இருபத்தைந்து விழுக்காடும் போன பின், பேராயக் கட்சியிடம் எஞ்சியிருப்பது அதன் முன்னைய மணமே! அது பெருங்காயம் இருந்த பண்டத்தின் மணம்போலக் கறிக்கு உதவாது. ஒரு வேளை சாத்திரியார் இக் கொள்கையை வெளிநாட்டாரிடம் (வேறு வழியில்லாமையால்) காட்டுதற்கு மட்டும் வைத்திருக்கலாம். இனி, சாத்திரியாரின் இந்தி மொழிக் கொள்கையின் சூடு, திரு. காமராசரால் ஒருவாறு தணியலாம் என்று தென்னாட்டுப் பேராயக் கட்சியின் சட்டைமாட்டிகள் எண்ணித் தலை கிறுகிறுத்துப் போக வேண்டா என்று எச்சரிக்கின்றோம்.

திரு. சாத்திரி உண்மையிலேயே தமிழர்களின்மேல் பரிவும் அவர்தம் வாழ்க்கையில் அக்கறையும் கொண்டவர் என்பதற்கு எவ்வகையான நடத்தைச் சான்றும் இல்லை. முன்பு இல்லாத பரிவும், அக்கறையும் இனிமேல் வந்துவிடும் என்று எதிர்பார்ப்பது, வழுக்கைத் தலையில் கரிய, சுருண்ட மயிர்க் கற்றையை எதிர்பார்ப்பதைப் போன்றதே! இந்தியாவின் முதல் அமைச்சராக இனி எந்த வடநாட்டுக்காரர் வந்தாலும் இந்தி மொழிக் கொள்கையில் கட்டாயமாகத்துளியும் மாற்றமிருக்காது; மாற்றம் ஏமாற்றந்தான்! ஒருவேளை தமிழனில் எவனாவது, அல்லது எந்தத் தென்னிந்தியனாவது தலைமையமைச்சனாக அடுத்த தேர்தலில் வர முடியாதா எனில், அவன் ஒரு வேளை (ஆ! எப்படிப் பட்ட கனவு ..!) வந்தால், அவன் வடநாட்டுக்காரர்கள் தன்னை வெறுத்துவிடக் கூடாதே என்பதற்காகவும், தன்மேல் இன்னும் நம்பிக்கை வைப்பதற்காகவும், திரு. சாத்திரியாரை விடப், பத்துப் படிகள் மேலே ஏறிப் பாய்வானேயொழிய இறங்கிப் போகமாட்டான்! ஆகையால் மொழிக்கொள்கையைப் பொறுத்த மட்டில், இனித் தமிழர்கள் இந்தி படித்துத்தான் தீர வேண்டும் என்ற அரசியல் சங்கொலி, திரு. பக்தவத்சலனார் முதல், பேராயக் கட்சியின் இன்றைய உறுப்பினர் வரை உள்ள அத்தனை பெயரும் எழுப்பக் கூடிய ஒரே சாவொலியாகத்தான் இருக்கும் என்பதில் தினையத்துணை மாற்றமும் இருக்காது! ''மொழிக் கொள்கையில் மட்டுந்தானே தமிழர்களுக்கும், பிற தென்னிந்தியக் குடிகட்கும் தீங்கு நேரும்; மொழிப்பற்று என்பது புலவர்கள் ஒரு சிலரிடம் உள்ள வெறிதானே! இந்த வெறி ஒழிக்கப்படக் கூடாது என்பதற்காகவா கோடிக் கணக்கான ஏழைத் தமிழர்களுக்கு நல்லது நேர்தல் வேண்டா என்று தடுப்பது?'' என்று இங்குள்ள முடிதாங்கிகளும், அவர்தம் அடிதாங்கிகளும் கூறலாம். இவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகின்றோம். 'மொழி என்பது புலவர்களுக்கே சொந்தமானதன்று; அது புலவர்கள் சிலரிடம் உள்ள வெறியுணர்வுக் கடிப்படையானதும் அன்று; அஃது எந்த இன மக்கட்கும் அடிப்படை அரசியல், பொருளியல் உரிமைகளைப்பெற்றுக்கொள்ள இயற்கைதரும் ஒப்போலை (வாக்கு)ச் சீட்டு! அதன் வலிவு குறைக்கப் பெற்றால், அதனைக் கைக்கொண்டுள்ள மக்களின் வலிவும் வீழ்த்தப்படும். மக்கள் அமைப்பு, ஒரு சிலர்க்கு ஒரு சில நேரங்களில் கிடைக்கும் ஒரு சில சோற்று உருண்டைகளைக் கொண்டு நிலைநிறுத்தப் பெறுவதன்று! அவ்வமைப்புக்கு வழங்கப்பெறும் உரிமைப் பட்டயமே மொழியாகும்! தமிழர்களைப் பொறுத்த அளவு மொழியென்பது வெறும் அரசியல் உரிமைப் பட்டயமாக மட்டுமிராமல், அறிவுப் பட்டயம், வாழ்வுப் பட்டயம், குமுகாய அமைப்புப் பட்டயமாகவும் இருக்கின்றது. ஒரு மொழியின் இயற்கை உணர்வையும், உரிமையையும் கெடுக்கவோ, எடுக்கவோ வேறு எந்த மொழிக்கும் உரிமை இல்லை அரசியல் என்பது மொழியாட்சி

தான் என்றால், தமிழ் மொழியைச் சாகடித்து விட்டுத் தமிழர் கட்குமட்டும் பயன்படும் அரசியல் ஆட்சி எப்படி நேர்மையான அரசியல் ஆகும்? திருடன் வாயில் துணியைத் திணித்து வாயைக் கட்டிவிட்டுத் திருடுவதைப் போன்றதுதான், ஓரின மக்களின் உயர்ந்து, செம்மாந்து, வளர்ந்து, விரிந்துள்ள ஒரு மொழியுரிமையைப் பறித்து, தம் மொழியைத் திணித்து அதன் வழி ஆளப்பெறுகின்ற ஆட்சியும்இருக்கும் என்பதை இங்குள்ள மரப்பாவை இயக்கத்தினர் புரிந்து கொள்ளல் வேண்டும்.

இறுதியாக உண்மைத் தமிழர்கட்கு ஒன்றைக் கூறிக்கொள் கின்றோம். வாழ்வியல் முறைப்படி தமிழர்களுக்கோ பிறர்க்கோ எத்தகைய அரசியல் நலன்கள் வாய்த்தாலும், அத்தனை நலன் களும் களிமண் பாவைமேல் பூசப்பெறும் வண்ணப் பூச்சுக் கிணையாகவே கருதப்பெறும். வண்ணங்கள் தொடக்கத்தில் பளபளப்பாகவும், கவர்ச்சியாகவும் தோன்றலாம். நாளடைவில் மட்பாவையின் களிமண் பூச்சே வெளிப்பட்டுத் தோன்றும் அளவுக்கு வண்ணங்கள் மாறலாம்! மொழியுரிமை வழிபெறும் அரசியல் நன்மைகள், இயற்கை ஒளியுடைய சங்கின் வண் ணங்கள் போலவும், மணிகளின் நிறச் சுடர்கள் போன்றும் என்றும் நிலைத்து நிற்கக் கூடியவை. தமிழுரிமையை வீழ்த்தும் எந்தத் தலைமையமைச்சர் வந்தாலும் காமராசுகளும், பக்தவத் சலங்களும் பலவகையான நன்மைகளையும் தவறாமல் சுவைக்க லாம்; ஆனால் தமிழர்கட்கு அவ்வமைச்சின் நன்மை வெட்டப் பெறும் ஆட்டுக்குக் காட்டப் பெறும் தழைபோன்றதே! ○

நேருவின் மறைவு.

முன்னாள் இந்தியத் தலைமை யமைச்சர் திரு. பண்டித சவகர்லால் நேருவின் மறைவு கேட்டு உண்மையிலேயே வருந் தினோம். அவரின் மறைவு ஈடு செய்யவியலாத பேரிழப்பாகும். இந்தியாவின் பதினேழு ஆண்டுக்கால ஆட்சியின் அமைதிக்கும் உலகின் நடுவு நிலைக் கொள்கைக்கும் நேரு ஆற்றிய தொண்டு உலக வரலாற்றில் தனியிடம் பெறத்தக்கது. அசை யாத மன உறுதியும், தளராத உழைப்பும், உயர்ந்த பண்பும், நேர்மையான உண்மையும், நடுவு நிலைமையும், மேனோக்கிச் செல்லும் சீர்திருத்த உள்ளமும் சேர்ந்த நல்லுருவமே நேரு எனலாம். அவர் மறைவுக்குப்பின் அவருக்கு நினைவுப் படிமம் நிறுவுவதற்குப் பல கோடிக் கணக்கான உருபாக்களைச் செல விடத் திட்டமிட்டிருக்கும் ஆரவாரச் செயலாளர்கள், மேற் கூறிய அவரின் தனிப் பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதை விடச் செயத்தக்க சிறந்த செயல் வேறொன்றும் இல்லை என உணர்தல் வேண்டும்.

நடு கல்!

துரை-மாணிக்கம்

(சிறையிலிருக்கும் முத்தன் தன் காதலிக்கு
மடல் எழுதுகின்றான்)

''முத்தழகி! உன்அத்தான் முத்தன் எழுதுவது;
பித்தாகிப் போகாதே! பேதைமனம் நோகாதே!
இங்குநான் சென்னைச் சிறையில் இருக்கின்றேன்!
(அங்கு நீ விம்முவதும் அப்படியே பொத்தென்று
கீழே விழுவதுவும் உள்ளத்தில் காண்கின்றேன்)
தாழம்பூ வே! நீ தனித்திருக்க விட்டுநான்
துன்பச் சிறையில் கிடந்து துவளுவதை
இன்பமென்று எண்ணுவேன்? இன்னுங்கேள்! நீமகிழ்வாய்!
கம்பிச் சிறைபுகுந்தேன் என்று கழறியதும்,
வம்பு வழக்குகளில் வந்தனென எண்ணாதே!
அந்தப் படிநான் அணுவளவும் வாழ்ந்ததில்லை;
வந்து புகுந்த வகையை உரைப்பேன் கேள்:

பாழான இந்தி படரிருள்போல் பைந்தமிழை
வாழாமல் செய்யும் வகையைத் துணிந்தெதிர்த்தேன்;
நாம்பிறந்த நாட்டிற்கும் செந்தமிழ்க்கும் கேடுவந்தால்
தாம்பறுந்த காளையென உள்ளம் தழலாதோ?
கொஞ்சும் தமிழின் குரல்வளைக்குத் தீதென்றால்
நெஞ்சம் துடிக்காதோ கூனும் நிமிராதோ?
போக்கற்ற இந்தி, தமிழைப் புதைப்பதெனில்
தாக்குற்ற செந்தமிழர் தக்கைகளா, பார்த்திருக்க?
உள்ளந்தீப் பற்றி உடலெரிந்து சாகையிலே,
வெள்ளத் தமிழுணர்வு வீறிட்டுப் பொங்காதோ?

ஆகையினால் வெஞ்சிறைக்கே ஆளானேன் ஆருயிரே!
வாகைப்பூச் சூடி வருகின்றேன்; காத்திருப்பாய்!
என்னைத் தவறாக எண்ணாதே! என்னுள்ளம்
பொன்னைப் பழித்தொதுக்கும்! பூவே, நீ என்றனுயிர்!
மூவிரண்டு திங்கள்! முடிந்தவுடன் நான்வருவேன்;
பூவிரண்டு காம்பொன்றாய் வாழ்க்கை புதுக்கிடுவோம்!
பெற்றோர் இசைந்தபின்னே பேச்சென்ன? நம்மணத்தைக்
கற்றோர் குழுமிக் களிப்போடு வாழ்த்துரைக்க
நன்றே முடிப்போம்;இந் நம்பிக்கை மாறாதே!
குன்றேறும் மான்போல் குடிவருவாய் என்தோளில்!
நெஞ்சம் நலியாதே! நின்னுடலை வாட்டாதே!
அஞ்சாதே! இங்குன் அழியா நினைவினிலே
செந்தமிழ்க்கு வந்த சிறுமை அழித்திடுவேன்!
சிந்துமிழும் வாயே, சிரி!''

(சிறையில் வாடும் முத்தனுக்கு முத்தழகி எழுதும்
விடை மடல்)

''அன்புள்ள அத்தான்! அருமை மடல் நான் பெற்றேன்;
பின்புதான் உங்கள் பெருங்கடமை நெஞ்சுணர்ந்தேன்.
நீங்கள் நினைத்ததுபோல் விம்மிற்று நெஞ்செனினும்
ஏங்கியுடல் வீழவில்லை; ஏற்றமொடு நின்றிருந்தேன்!
'காத்திருப்பாய்' என்பதுங்கள் கையெழுத்தா?
நெஞ்செழுத்தா?
பூத்திருக்கும் முல்லைப் பொலிவழித்தீர் என்றாலும்,
'தக்கையன்று உங்கள் தடந்தோள்கள்' என்றறிந்து
திக்கறியா இன்பில் திளைத்திருந்தேன்; பொன் அத்தான்!

மண்ணன்றே உங்களுளம்; மானுந் தமிழ்மரபின்
விண்ணென்று கண்டு வியந்து மகிழ்ந்திருந்தேன்!

உள்ளம், உயிர், உடலம் எல்லாம் உவகையினால்
துள்ளியதை என்சொல்வேன்? தொல்தமிழ்மேல் வந்தபகை
போக்கச் சிறைபுகுந்தீர்! உள்ளம் புடைக்காதோ?
காக்கும் பெரும்படையில் காதலரும் சேர்ந்திருக்கும்
வெற்றி நினைவென்னை வீழாமல் காத்ததென்பேன்;
நெற்றி குளிர நினைவிழந்து நின்றிருந்தேன்.

அத்தான்! நான் ஒன்றுரைப்பேன்; அன்னை தமிழ்க்குடலம்
செத்துமடிந் தீரெனினும் செம்மாந்து நான்சாவேன்.
ஆனாலும் அத்தான்! அடியவளும் தாழ்ச்சியில்லை.
தேனான செய்தி! தெரிவிக்கப் போகின்றேன்!
மூவிரண்டு திங்களும் நாளுக்கு மூவேளை,
ஆவின்நெய் ஊற்றி அமிழ்தம் படைத்தாலும்,
எட்டிக் கசப்பாய் எனக்கிருக்கும்; நீங்களங்கு
கட்டிக் களியுருண்டை காத்திருந்து வாங்கியுண்ண,
எவ்வாறு நானிங்கே ஏங்கித் துயர்ப்படுவேன்!
ஒவ்வாது நெஞ்சம்! எனவே நான் ஒன்றுரைப்பேன்:

செந்தமிழ்க்கு நானும், எனக்குத் தமிழ் அமிழ்தும்
சொந்தமத்தான் சொந்தம்! உலகளவு சொந்தமென்பேன்!
நானும் தமிழச்சி! என்குடியும் தொல்குடியே!
ஈனும் புலிக்குடும்பம் பெண்குட்டி ஈன்றாலும்
பூனையென் றாய்விடுமோ? பூந்தமிழும் என்னுயிரே!
தேனும் புளிக்காதோ, செந்தமிழை மாந்தியபின்?

அத்தான்,இவ் வூரில் அணிவகுத்த போர்ப்படையில்
'முத்தழகி' என்றென் பெயரை முதல்கொடுத்தேன்!
செந்தமிழும் பேசாத ஊரில் உயிர்வாழேன்;
செந்தமிழும் பேசாத் தெருவில் குடியிருக்கேன்!
இந்திவரின் நந்தமிழர் ஏற்றம்போம்! மானம்போம்!
முந்தி யதனை முறியடிக்க நானும்,என்
சிற்றுயிரைத் தந்தேன்! திரும்பி வரின்மணத்தைக்
கற்றவரைக் கொண்டு கடிதில் முடித்திடலாம்!

நேற்றுவரை உங்கள் நினைவால் துயருற்றேன்.
ஆற்றுவா ரின்றி அணுவணுவாய்த் தேய்ந்திருந்தேன்!
இன்றே மடல்பெற்றேன்; என்றன் உயிர்பெற்றேன்!
நன்றுதான்! இவ்வுடலம் செந்தமிழ்மண் நல்கியதாம்!
இந்திக் கொடுமையிலே எந்தமிழ்த்தாய் மாள்கையிலே
குந்தி யிருக்கவா? தாளேன்; கொலைவாளைத்
தூக்குவேன்; இந்தி உடலைத் துணித்திடுவேன்!
யாக்கை இனிப்பில்லை! நீர்மேல் எழுத்தென்றார்!

நல்லுயிர்க்கு மானம்உயிர்! நங்கையர்க்கோ அஃதியற்கை!
வல்லுடலும் மானமதில் வாழ்ந்திருந்தால் தான்வாழும்!

''உங்கள் துணைவி ஒருத்தி! தமிழ்மறத்தி!
பொங்குணர்வுக் காரி! தமிழைப் புறம்பழித்த
இந்திதனைச் சாகடித்தாள்; ஆகையினால்
செத்தொழிந்தாள்!''

இந்த உரையுங்கட் கின்பத்தைச் சேர்க்கட்டும்!
என்னருமை அத்தான்! எனக்கு விடைகொடுங்கள்!
பின்னிருந்தால் வாழ்வோம் பிணைந்து!

(முத்தழகியும் இந்தி எதிர்ப்பில் சிறை சென்றாள்; ஓராண்டுக் கடுங்காவலில் இவள் மெல்லுடல் நலிந்தது; நோய் வாய்ப்பட்டு சிறையிலேயே இறந்தாள். இவளிறந்தாள் எனக் கேட்டு முத்தனும் இறந்தான். ஒரே கல்லறையில் இருவரும் துஞ்சினர். அக் கல்லறையின் முன் உள்ள நடுகல்லில் பொறித்திருக்கும் வரிகள் இவை: -)

''தங்காதல் மேலாய்த் தனித்தமிழைக் காதலித்தோம்!
பொங்குணர்வால் வன்மைச் சிறைபுகுந்தோம்;
வெஞ்சிறையில்
நோயின்வாய்ப் பட்டோம், உடலம் நொடிந்திறந்தோம்!
நாயின்வாய்ப் பட்டார்ப்போல் நந்தமிழும் இந்தியினால்
நாளும் சிதைந்தொழியும்! நற்றமிழர் பார்த்திருப்பார்!
வாளும் மழுங்கியதோ? வன்மறமும் சாம்பியதோ?
அற்றைக் குடியும் அடியோடு வீழ்ந்ததுவோ?
ஒற்றைத் தமிழனும் இல்லா தொழிந்தானோ?

மாய்க்கின்ற செந்தமிழை மாளாமல் காத்தற்கே
வாய்க்கின்ற ஆளன் ஒருவன் வருவானோ?

வெட்டுண்டு சாயும் விறல்சேர் தமிழ்க்குடியை
முட்டுண்டு தாங்க ஒருவன் முளைப்பானோ?

இந்தி வெறியர் தமிழை இடர்ப்படுத்தும்
மந்தித் தனத்தை மறிக்கொருவன் வாரானோ?

ஆர்க்குந் தமிழ்நா டரசமைத்தே, இந்தியினைத்
தீர்க்கின்ற வல்லான் திருவுருவம் காணேமோ?

பொய்யாத் தமிழ்மரபின் தாழ்வைப் புதுப்பிப்பான்
எய்யாமல் எய்தும் புகழ்!''

4-ஆம் தொடர்



ஆந்தைப் பாட்டு.

ம. இலெ. தங்கப்பா.

“சீரார் தமிழகத்தில், செய்யதொரு சிற்றூரில்,
ஏரார் உழவின் இசைந்த பழங்குடியில்
பேதை ஒருத்தி பிறந்து வளர்ந்திட்டாள்.
மோதும் வறுமையினில் மூழ்கியதாம் அக்குடும்பம்.
பாடுபல பட்டும் பயனைப் பிறர்கொள்வார்;
காடெல்லாம் சென்றுழைத்தும் கால்வயிறு மேவுகிலார்.
பேதை இளஞ்சிறுமி பீழை மிகவுற்றாள்;
ஏதம் பலவும் இளமையிலே துய்த்துவிட்டாள்.
ஏழ்மையாம் துன்பம் எரியுமிழ்ந்து சூழ்ந்தாலும்
வாழ்விற் பருவநலம் வந்தமையும் காலத்தே
கண்முன் இருள்கிழித்துக் காலைஎழில் மீறுதல்போல்
பெண்மை நலம்திகழ்ந்து பெட்பவிழக் கண்டிருப்பீர்.
நீரின்றி வாட்டமுற்று நின்ற தினைப்பயிரும்
கூரும் பருவத்தே கோலம் புதிதாகிப்
பால்கொண்டு விம்மிப் பசுமைப் பொதிவளர்ந்து
சூல்கொண்ட பெண்போற் சுடர்விடுதல் பார்த்திருப்பீர்.
மாமயிற்குக் கொண்டல்; மலருக் கிளவேனில்
தேமருவுஞ் சோலைக்குச் செஞ்சுடர்சேர் மாலை;
அருவிக்குத் தண்கார்; அளிகட்குக் காலை;
தறுகண் மறவர்க்குச் சாற்றும் தலைநாட்போர்;
பாடும் புலவர்க்குப் பாட்டுணர்வார்; சொல்லற்று
வாடும் தமிழர்க்கு வாய்க்கும் தனியாட்சி;

பொங்கொலிநீர் வேலைக்குப் பூத்த முழுமதியம்;
திங்கட்கு முன்பனிநாள் சேர இனிதாம்போல்

மங்கைப் பருவம் மகளிர்க் கினிதென்பார்.
மங்கைப் பருவ மதர்ப்பை அறியார் யார்?

செங்கதிரைத் தேரூர்ந்து, விண்மீனைத் தார்புனைந்து,
திங்களினைப் பந்தாடிச் சீரார் முகில்புடைத்து,

வானத்தை வில்லா வளைத்தங் கெழுவதுபோல்
ஆறாத கற்பனையில் ஆழும் பருவமாம்!

உள்ளக் களிமதர்ப்பால் ஒள்ளுலகை ஆளஎணும்
கள்ளக் கடைவிழியின் காதற் பருவமாம்;

காணாமற் காணும் கடைவிழியில் புன்னகையும்,
நாணூர்ந்த செவ்விதழ்மேல் நாலா யிரந்துடிப்பும்,

கோணற் குழைவினிலே கொள்ளைபோம் பேரழகும்,
மாணத் திகழும் மகிழ்வின் பருவமாம்;

மூச்செலாம் இன்பமா மூரலெலாம் வேட்கையாப்
பேச்செலாம் அன்பைப் பெருக்கும் பருவமாம்;

இந்தப் பருவத்தும் ஏழைமகட் கின்பில்லை;
வெந்து புழுங்கி வெறிதாய்க் கழிகின்றாள்!

சின்னஞ் சிறியராச் சேர்ந்தவளோ டாடிநின்ற
கன்னல் மொழியினையார் கட்டவிழ்ந்த செம்மலர்போல்

மேனி இடைநுடங்க, மின்னல் விழிசுழலத்,
தேனிதழோ காதல் திறமுரைக்க, ஆடவர்தம்

நெஞ்சிழுக்கும் பார்வை, நிறைகெடுக்குஞ் சாயலுடன்
கொஞ்சுமொழி பேசிக் குளக்கரையில் ஆடுகின்றார்;

ஈரத் துகில்சொட்ட, ஏந்தும் குழல்விரிந்து
நேரும் இளங்காற்றில் நீந்தி அலைபாயக்

கையிற் சிறுகுடமும், கண்ணில் குறும்பு,மெழில்
மெய்யில் ஒளியும் விளைய நகைபுரிந்து

பாவைகளாய்த் தோப்பினிலே பாடி நடக்கின்றார்;
பூவைபோல் பைங்கிளிபோல் பேசிக் குழைகின்றார்;

முன்னங்கால் தூக்கி முறியுண்ணும் மானினம்போல்
புன்னைக் கிளைவளைத்துப் பூக்கொய் துவக்கின்றார்;

வண்ணத் துகில்புனைந்து, வானவில்போல் வட்டமிட்டுப்,
பண்ணினிதாக் கும்மிகொட்டிப் பம்பரம்போல் ஆடுகின்றார்;

வட்டநிலாக் காலத்தே வாயில்தொறுஞ் சென்றுசென்று
மெட்டி குலுங்க மிளிர்குரவை ஆடுகின்றார்;

நங்கையோ துன்பாம் நடுத்தழலில் வேகின்றாள்;
பொங்கும் உணர்வால் பொருமிக் கிடந்திடுவாள்;

காரணமும் யாதென்பீர் காளையீர், மண்ணிலவள்
சீருயரும் பெண்மைநலஞ் சேரப் பிறந்திருந்தும்,

நாணம் மடமுதலா நாலியல்பும் வாய்ந்திருந்தும்,
பேணும் அழகென்னும் பெற்றியற்றுப் போய்விட்டாள்!

நல்ல மணமும் நறவும் நிறைந்திருந்தும்
மெல்லிதழிற் கீறல் விழுந்த மலர்போன்றாள்.

நங்கை நிறம்கரியள்; நன்றென் றுரைப்பாரோ?
அங்கவட்கு மேலும் அழகின்மை யாதுரைப்பேன்!

பிள்ளைப் பருவத்தே பேதை விளையாட்டில்
கொள்ளியொன்றில் கால்சருக்கிக் குப்புறவே வீழ்ந்தமையால்

கண்ணொன் றொளிகுறையக், கன்னம் கரிந்துபடப்
பெண்ணென் றழைக்கப் பிறர்தயங்கும் தோற்றமுற்றாள்.

இன்னா நறுந்தேனாய் இன்பளிக்கா நல்லிசையாய்த்
தென்பொதிகைச் சாரலினும் வீசாத தென்றலாய்

நங்கை புழுங்கினாள்; நாணச் சிறைக்குள்ளே
தங்குமொரு புள்ளாய்த் தனிமை நிலைப்புற்றாள்.

பெண்ணின் மணக்கவலை பெற்றோர் மனக்கவலை;
மண்ணுலகில் பல்லார்க்கும் மாறா நிலையன்றோ!

இந்தக் கவலை எழுமடங்காச் சூழ்ந்ததுவே
நந்தம் துயர்மகளின் நற்றாய்க்குந் தந்தைக்கும்.

ஊரெல்லாம் ஓர்மகனைத் தேடிச் சலிப்புற்றார்;
யாரும் மணக்க இசைவார் இலையானார்.

பெண்தேட வந்தார் பிறர்;அவ் விளமகளைக்
கண்டளவே தாமுங் கவிழ்ந்தபடி போய்விட்டார்.

ஓரிளைஞன் வந்தான்; உடலழகு சற்றுமிலான்
கூரியபல் நீண்டிருக்கும்; கோணல்வாய் பன்றியொக்கும்;

நெற்றி குரங்கொக்கும்; நீள்கழுத்துக் கொக்கொக்கும்;
முற்ற வடுக்கள் முகத்திற் படர்ந்திருக்கும்;

ஆங்கவனும் நங்கைக் கழகில்லை என்றுரைத்து
நீங்கினான், பெண்ணின் நிலையுரைத்தல் ஆகுமோ?

"தீவினையேன்" என்பாள்; திகைப்பாள்; சினமிகுந்து
கோவையாய் ஆண்குலத்தைக் கொய்தழிக்க எண்ணுவாள்.

என்னவிந்த ஆணுலகம்! எள்ளளவும் நன்றியிலார்;
மின்னால் உடல்சமைந்த மெல்லியலார் எத்தனைப்பேர்

கன்னங் கரியவுடல் கட்கினா வன்முகத்துக்
கொன்னல் மிகுநாவின் கோழை ஒழுகிடும்வாய்,

முற்றும் உளஞ்சிறவா மூடரையும் தாமணந்து
சற்றும் நிறைபிறழாச் சால்புடனே வாழ்கின்றார்!

கூசுகிலார்? உள்ளம் குறுகுகிலார் ஆண்மக்கள்?
தூசென்றும் தும்பென்றும் தூற்றிஉயர் பெண்குலத்தை
ஏதோ கடைச்சரக்காய் எண்ணி விலைபேசுகின்றார்!
பேதையர்! என்னிவர்தாம் பேரழகைக் கண்டுவிட்டார்!
உள்ளத் தழகிருக்க, உண்மை அழகிருக்க,
வெள்ளம்போல் பாய்ந்தழியும் மேலழகைப் போற்றுகின்றார்;
பண்பிருக்க, நெஞ்சிற் பரிவிருக்க, அன்பிருக்கக்
கண்பறித்துச் செல்வதுதான் கட்டழகாம் கூறுகின்றார்!
அந்தோ, குருடரீர்! ஆய்ந்தாய்ந்திங் கென்கண்டீர்?
முந்தும் கலைஎன்று மொய்த்துக் கிடக்கின்றீர்;
மாந்தன் அழகுணர்வால் மாண்புற்றான் என்கின்றீர்;
நீந்திக் கலைக்கடலை நேர்கடந்தான் என்கின்றீர்;
போலி யுரைஇவைகாண்! பொய்மை, பசப்பென்பேன்!
கோலமிகு பேரழகின் கொள்ளையிலே உள்ளம்
பறிகொடுத்தோம் என்று பசப்பலெலாம் நெஞ்சின்
வெறியை மறைத்தாங்கு வேற்றுருவம் காட்டுதல்காண்!
மெய்யா அழகை விழைகின்றார் மாந்தரெனில்
மெய்யின் அழகோ மிகவிழைவார்? மெய்யதினும்
உள்ளத்தின் மேன்மை உயர்ந்த அழகன்றோ!
அல்லல் விளைக்கும் அழகுப் புறத்தினிலும்
நல்ல அமைதி, நடுநிலைமை, பேரன்பு
வல்லார் பொறை,குடிமை, வண்மை, ஒழுக்கமிவை
வாழ்வுக் கழகலவோ? வந்தே விழிமயங்கச்
சூழும் அழகதினும், சோர்வறுத்து நெஞ்சுணர்வால்
இன்பந் தரும்அழகின் எல்லை பெரிதன்றோ!
தன்பெருமை குன்றாத் தலைநிற்ப தஃதன்றோ!
அந்த அழகை அறியாதீர், நீவிரிவண்
எந்த அழகுகண்டீர்? ஏய்க்கின்றீர்; அந்தோ!
உடையழகு பார்ப்பீர்; உகிரழகு பார்ப்பீர்;
புடைஅழகா இல்லம் புனைந்து மகிழ்வுறுவீர்;
பொய்யுஞ் சினமும் பொறைக்கேடும், தீப்படிறும்
எய்தியுந்தம் வாழ்வின் எழிலழித்தல் காணுகிலீர்;
யாங்கோ அழகுணர்ச்சி? யாதுபயன் நும்கலையால்?
வீங்கும் வெறிவிடுத்து மெய்ப்பொருளைக் காணீரோ?
காண்டற் கினிதாமேல் காண்பதெலாம் நன்றாமோ?
வேண்டும் அடிப்படையை விட்டு நழுவொணுமோ?
வாய்ந்த புறஅழகை மட்டுமே ஆய்ந்திடினும்
மாந்தர் பெரும்பாலார் என்ன தெரிந்துள்ளார்?

காலைக் கதிரழகைக் கண்விழித்துக் காணுகிலார்;
மாலைச் செழுவானின் மாணழகை நோக்குகிலார்;
காடும், மலையும், கவின்பொழிலும் பொற்பொளிரும்
நீடார் எழில்நலத்தை நெல்முனையும் காண்பதிலார்;
வானக் குடைப்பந்தல் வைத்திழைத்த பொன்மணிபோல்
மீனச் சுடர்பிறங்கும் மேலாம் அழகறியார்;
நீலக் களிற்றேற்றை நீள்கொம் பசைப்பதுபோல்
கோலப் பிறைவிசும்பின் கொள்ளை அழகறியார்;
ஆற்றின் அழகுணரார்; சிற்றூர் வனப்பறியார்;
தூற்றும் மழைத்துளியில் தூய கவின்காணார்;
பொன்மாலைப் போழ்தில் புகையுண்ணும் கார்குழல்போல்
குன்றில் முகில்தவழும் கோலம் நுகர்ந்தறியார்;
மானின் மருள்விழியில், புள்ளின் ஒளிச்சிறகில்,
தேனை நகையாக்குஞ் சேயின் சுடர்முகத்தில்,
பச்சைப் பசும்பயிரில், தெங்கின் கொழுங்குலையில்,
நச்சும் பொருளெல்லாம் ஓவியமாத் தான்விரிந்தே
எங்கும் கிடக்கும் இயற்கை அழகறியார்;
மங்கை முகத்தழகு மட்டும் அறிந்திடுவார்!
என்ன கலை! அடடா! என்னகலை அடடா!
இந்நிலையே வாழ்வதெனில் என்றைக் கிவர்உய்வார்?
தோழீர், மன்னிப்பீர்; தொட்ட கதைமறந்தேன்
கோழையர்மேல் சீற்றத்தால்; கூறல் இனிக்கேளீர்:-
முன்பொருநாள் வந்து முகஞ்சுளித்துச் சென்றவன்தான்
பின்பொருநாள் வந்தான்; ''பெருங்குறைதான்; ஆனாலும்
பெண்ணுக் கிருகாணி சொத்துரிமை ஆக்குவிரேல்
பண்ணுவேன் மன்ற''லென்று பைய உரைசெய்தான்.
என்ன உலகிதுகாண்! என்ன இழிவிதுகாண்!
இன்னே பிறர்தம் எளிமை பயன்படுத்திச்
சொத்தடையச் சூழ்கின்ற தீயவரும் வாழ்கின்றார்!
இத்தகைய மாந்தர்பால் ஏந்திழையார் வாழ்தலுண்டோ?
கையில்லா ஊமைபோல் கையற்றாள் பேதைப்பெண்!
வெய்துயிர்க்கும் மூச்சால் வெதும்பும் அவளிதழ்தான்;
கக்கும் விழிநீர்க் கறைபடியும் பாழ்முகந்தான்;
விக்கும் துயரால் விதிர்விதிர்க்கும் நெஞ்சந்தான்;
பெற்றோர் முயற்சியெலாம் வீணென் றடங்கிவிட்டார்;
உற்றாரும் பெண்ணவளின் ஊழென் றயல்போனார்.
வாழ்வே துயரா வளர்மங்கை நாளடைவில்
மாழ்குதலும் அற்றாள்; மரப்பாவை போலானாள்.

(தொடரும்)

தமிழ் உரைநடை வளர்ச்சி.

பா. வளன் அரசு, எம். ஏ.

தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை.

அருமை சான்ற நறுந்தமிழில் அன்று தொட்டு இன்றுவரை உரை நடைத் தோற்றமும் ஏற்றமும் எழிலுற இலங்கக் காண்கிறோம். பழம்பெரு மொழியாம் கிரேக்கத்தில் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலும், மறைமொழியாம் இலத்தீனில் கி. மு. எழுபதாம் ஆண்டிலும், செர்மானிய மொழியில் கி பி. 842 ஆம் ஆண்டிலும், உலக மொழியாம் ஆங்கிலத்தில் கி. பி 887 ஆம் ஆண்டிலும் உரை நடை எழுச்சியுற்றதாக ஆங்கில அறிஞர் அட்கின்சு பெருமகனார் தம் [1] இலக்கியத் திறனாய்வு நூலில் குறிப்பிடுகிறார். உலகம் ஊமையாய் உள்ள அக்காலையே பல்கலைப் பயன் பராங்குறத் தாங்கிய உயர்தனிச் செம்மொழியாம் செந்தமிழ்க்கண் முது பனுவலாம் தொல்காப்பியம் தொடங்கி இவ்விருபதாம் நூற்றாண்டு வரை உரை நடை பல்வேறு வடிவுகளுடன் வளர்ச்சியுற்றிருப்பது வியந்து போற்றற்குரியது.

தொல்காப்பியர் நான்கு வகை உரை நடைகளைச் சுட்டுகிறார். பாவியம் எழுதுங்கால் இடையிடையே குறிப்பு வரைதல், அரும் பனுவல்கட்கு விளக்கமாக உரை எழுதுதல், பொய்ப் புதினமாகக் கதை கூறுதல், நகை விளைக்கும் சுவை நிறை நாடகம்—சிறுகதை தீட்டுதல் என அவை இருந்த நிலையை,

> "பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
> பாவின் றெழுந்த கிளவி யானும்
> பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
> பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
> உரைவகை நடையே நான்கென மொழிப"
>
> (செய்யுளியல் 173)

என வரும் நூற்பா விரித்துரைக்கிறது. பிறிதொரு நூற்பா [2] "தொன்மை தானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" என விளம்பும். இதற்கு விளக்கம் கூறும் இளம்பூரணர், "நிறுத்த முறையானே தொன்மைச் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று தொன்மையாவது உரையொடு பொருந்திப் போந்த பழமைத்தாகிய பொருண்மேல்வருவன. அவை இராம சரிதமும் பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின் மேல்வருஞ் செய்யுள்"

1 Literary Criticism in Antiquity —ATKINS

2 தொல்காப்பியம் செய்யுளியல் 237

என்று உரைக்கிருர். ''தொன்மை என்பது உரைவிராய்ப் பழமையவாகிய கதை பொருளவாகச் சொல்லப்படுவது. அவை பெருந்தேவனுராற் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன'' என்பது பேராசிரியர் தரும் விளக்கம். எனவே, பழங்காலத்தே உரைநடை வழக்கு இருந்தது என்பது தெளிவு. அச்சுக்கலை தோன்ருத அக்காலத்து உரைநடை பெருக்கமாக இருக்கவில்லை என்றுமட்டுமே ஏற்கவியலும் மாருக, எழுத்தாணி கொண்டு ஓலைச் சுவடிகளில் பெருமளவில் எழுதவியலாது வாளாவிருந்ததாகக் கூறல் உண்மையன்று. பன்னீராயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களைக் கதை வடிவில் யாத்துத் தந்த 'கம்பர் ஓலைச் சுவடியில் தான் எழுதினர் என்பதை ஓர்க.

கல்வியின் பயன் பிறர்கேட்கச் சொல்வது; பாட்டின் பயன் பிறர் வேட்க உரைப்பது என்க. இதனுலன்ரே பாட்டும் உரையும் பயிலாத செவிகளை ''ஓட்டைச் செவிகள்'' என்று பழித்துரைத்தனர்! மன்னன் நலங்கிள்ளியைப் பாராட்டுங்கால் புலவர் முதுகண்ணன் சாத்தனர் ''வண்ணத் தாமரை போன்று வையத்துள் புகழ்பெற்று வாழ்வார் உரையும் பாட்டும் உடையோரே'' என மொழிந்ததாகப் புறநானூறு (27) கூறுகிறது. ''உரைநடை யென்பது செய்யுள் விதிகளுக்கு விலக்காய்நின்று இலக்கிய நயம் கெடா வகையில் மக்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை உலகுக்கு எடுத்துக்காட்டப் பயன்படுவது என்று கொள்ளல் பொருந்தும்'' என்பது ஆன்ரேர் [1] வகுக்கும் விளக்கமாகும்.

சிலப்பதிகாரம் என்னும் நெஞ்சையள்ளும் பாவியத்திற்குப் பல்வேறு பெயர்கள் சூட்டப்பட்டன. அவற்றுள் ''நாடகக் காப்பியம்'', ''உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்'' என்பன கருதத்தக்கன. சிலம்பில் பாட்டு வரி ஐயாயிரத் தொன்றுடன் உரைநடையும் இடையிடையே மிடைந்து வருகிறது. ''குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன்மக ளீன்ற மைந்தன் கொங்கர் செங்களம் வேட்டுக் கங்கைப் பேர்யாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன் சினஞ் செருக்கி வஞ்சியுள் வந்திருந்த காலை''...... என வாழ்த்துக்காதையுள் தொடங்கும் உரைப்பாட்டு மடை நெடுஞ் சொற்ருெடராய் நின்றிலங்கக் காண்கிரேும்.

எட்டாம் நூற்ருண்டினதாகக் கருதப்படும் இறையனுர் களவியலுரை நக்கீரர் நல்கிய உரைநடையாகும். உக்கிரப் பெருவழுதியின் அவைக்களத்தில் உப்பூரிகுடிகிழார் மகன் மூங்கைப்

1 Encyclopedia Britanica Vol. 18 Page 592

பிள்ளை உருத்திரசன்மனால் சிறந்த உரையென ஒப்பப்பட்ட இவ்வுரை நக்கீரர் வழி வழியினர் வாய்மொழியாக விளங்கி எட்டாம் நூற்றாண்டில் முசிறியாசிரியர் நீலகண்டரால் ஏட்டில் எழுதப்பெற்றது. கடல்போல் பரந்த அகப்பொருள் விரிவை அங்கை நெல்லிக் கனியெனச் சுருக்கி அறுபது நூற்பாக்களில் அமைத்த களவியலுக்கு நக்கீரர் யாத்துள்ள உரை ஆற்றொழுக்கு நடையில் அறிஞர்க்கு நவில் தொறும் நயங்காட்டித் திகழ்கிறது. அதில் வரும் பொழில் வண்ணனை புகழ் சான்றது. ''சந்தனமும் சண்பகமும், தேமாவும் தீம்பலவும், ஆசினியும் அசோகமும், கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும், நறவும் நந்தியும், மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங் கமழ்ந்து, பாதிரியும் பாவைஞாழலும் பைங்கொன்றையும் பிணி யவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னைகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டறைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் இசைபாட, தண் தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண்......'' எனச் செல்லும் சொற்றொடர் பக்க அளவில் நீள்கின்றது. இறுவாய்த் தொடையும் எதுகை மோனைச் சிறப்பும் இலக்கிய மேற்கோள்முறையும் அமைந்த இவ்வுரையில் உவமை நயம் ஊற்றெடுத்துப் பரவக் காணலாம். ''தாரகை நடுவண் தண்மதி போல'', ''புனல் ஓடுவழிப் புற்சாய்ந்தாற் போல'', ''குடத்துள் விளக்கும் தடத்துள் வாளும் போல'', ''வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற்போல'' என்பன செம்மை சான்ற எடுத்துக்காட்டுகள்.

உரையாசிரியர்தாம் உயர்ந்த உரை நடைக்கு வித்திட்டனர் என்பர் அறிஞர் [1] பூரணலிங்கனார். பேராசிரியர் எனப் புகழப் பெறும் மதுரையாசிரியர் தொல்காப்பியப் பொருளுக்கும் திருக் கோவையாருக்கும் குறுந்தொகையுள் முந்நூற்றுஎண்பது பாடல் களுக்கும் உரை எழுதியவர் தெளிவும் விரிவும் இவர் உரைச் சிறப்பென்ப. 'போகந் துய்க்கப்பெறாத பற்றுள்ளம்' தான் வறுமை என்னும் விளக்கம் எண்ணத்தைத் தூண்டுவது. [2] நன்னூல் நூற்பாக்களும் கருத்துகளும் இவர் உரையுள் கையாளப்பட்டுள்ளன.

பேராசிரியர் மாணவராய இளம்பூரணர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதி 'உரையாசிரியர்' என்றே ஏத்தப்படு கிறார். எளிமையும் தெளிவும் சான்ற உரையை முதலில் முழுமை யாக வழங்கிய இவரைப் பிற்காலத்தார் 'புலவுத் துறந்த பெரி யோர்' எனப் போற்றுகின்றனர்.

---

1 ''Tamil India'' – M. S. Purnalingam Pillai

2 நன்னூல் நூற்பா 1375, 1386 & 1489 (பதவியல்)

'வடநூற் கடலை நிலை கண்டுணர்ந்த' சேனாவரையர் தொல்காப்பியச் சொல்லுக்கு உரையெழுதிய தெய்வச் சிலையார், கல்லாடர், இளம்பூரணர் ஆகியோரைக் காட்டிலும் சிறந்த உரை செய்ததாக மொழிகுவர்; வடநூற் கருத்துக்களைத் தழுவி நுண்ணிய உரை செய்தவர் இவர் எனலாம்.

நெஞ்சையள்ளும் விழுமிய பாவியமான 'பழுதற்ற முத்தமிழின் பாடற்'குரை செய்த அடியார்க்கு நல்லார் பருந்தும் நிழலுமென நூலையொட்டிச் செம்மையாக எழுதியுள்ளார். இவர் முத்தமிழ்க் கல்வியுடைய நற்றிறப் புலமையாளர் என்பது இவர் உரையுள் ஐம்பத்தாறு நூற்களிலிருந்து மேற்கோள் காட்டும் முறையால் புலனாகிறது. ஊர்சூழ் வரிவரை இவர் உரை கிடைத்துள்ளது. காதை, காப்பியம், போற்றி, முந்நீர் போன்ற சொற்களைச் சுவைபட ஆராய்கிறார். சிலம்பும் மேகலையும் இரட்டைப் பாவியங்கள் என்பதை நிறுவும் இவர் உரையால் முத்தமிழ் புத்தொளியுடன் மிளிருகிறது. அரும்பத உரையாசிரியரும் நாவலர் வேங்கடசாமியாரும் சிலம்பிற்கு உரை செய்துள்ளனர்.

இளம்பூரணரை ஆசிரியராகக் கொண்ட நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற்கும் பத்துப்பாட்டு, சீவக சிந்தாமணி, கலித்தொகை முதலியவற்றுக்கும் குறுந்தொகையுள் இருபது பாடல்களுக்கும் உரை வரைந்தவர். பொருள்பற்றி விரிவான விளக்கம் எழுதும் இவர் எடுத்த பொருளை வரம்பறுத்துச் சொல்வதோடு, மேற்கோளைக் கையாளுங்கால் அஃது யாண்டிருந்து எடுக்கப் பெற்றது என்பதையும் சுட்டுவார் 'உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்' எனவும் 'நச்சினார்க்கினியர் எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்' எனவும் பெருஞ் சிறப்புப் பெற்றவர் இவர்.

காஞ்சியில் முப்பால் உரையை அரங்கேற்றுங்கால் வெண்கலப் பரியைப் பழுக்கக் காய்ச்சி அதன் மீதிருந்து தம் உரை மெய்யுரை என்று பரிமேலழகர் உறுதி செய்ததாகக் கதையொன்று கூறுவர். பரிபாடலுக்கும் திருக்குறளுக்கும் உரை செய்தவர் அழகர். தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதியார், திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் எனும் ஒன்பதின்மர் உரையினும் உயர்வுடையதாக இவர் உரையைப் பலரும் பாராட்டுகின்றனர். செய்யுளடிகளை உரைநடைப் படுத்துவதும் வடமொழிப் பயிற்சியை வகையாக வெளிப்படுத்துவதும் இவர் பெற்றியாம். இவர் வட சொற்களை வருணத்தார், பிரம்மசரியம்,போகராசன் என்று தமிழ்மைசெய்வது காணலாம். தமிழ்ப் பனுவலுக்கு உரையெழுதுங்கால் ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் எனும் வடநூல் வகுப்பை நினைந்து அறத்தினுக்கு விளக்கம் தருவது மாறுபாடாக இருக்கிறது!: ''அறமாவது மநு

முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம்; அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம்என மூவகைப்படும்". அழகர் கொள்கையை மறுத்து, இனியர் திருமுருகாற்றுப்படை உரையுள் [1] "வசிந்து" என்பதற்குப் பொருள் கூறுவது உணரற்பாலது.

பல்லவர் காலத்தும் சோழர் காலத்தும் செப்புப் பட்டயங்களும் கல்வெட்டுகளும் உரைநடையில் எழுதப்பெற்றன. ஆறும் நூற்றுண்டினவாகக் கருதப்படும் தென் ஆர்க்காட்டுச் செஞ்சித் திருநாதர் குன்றத்துக் கல்வெட்டுகள் உரைநடையாக அமைந்துள்ளமை காண்க. மணியும் பவளமும் கலந்த மாலை கண்ணுக்கு இனிதாகத் தோன்றுதல் போன்று, அருந் தமிழும் ஆரியமும் விரவிய நடை விருப்பிற்குரியதாகும் எனக் கருதப் பட்டதால் "மணிப்பிரவாள" நடை எழுந்தது. சீர்புராணம், கத்திய சிந்தாமணி எனும் நூல்களும் செம்பியன் மாதேவிக் கல்வெட்டு ஒன்றும் இந்நடையில் இருக்கின்றன. வடவெழுத்தைச் சேர்த்தெழுவது குற்றமன்று என 'வீரசோழியம்' கூறியது இந்நடையை வளர்ப்பதாயிற்று. பதின்மூன்றும் நூற்றுண்டில் எழுந்த நம்மாழ்வார் சிறு நூல் விளக்கங்கள் இந்நடையின. திருவாய்மொழிக்கு மட்டும் ஆருயிரப்படி, ஒன்பதினுயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி, முப்பத்தாருயிரப்படி என ஐந்து காணலாம். நாலாயிர திவ்விய பிரபந்தங்களுக்கு உரையெழுதிய பெரியவாச்சன் பிள்ளையும் வடக்குத் திருவீதிப் பிள்ளையும் இந் நடையைக் கையாண்டுள்ளனர். கதைப் பொழிவு நடையில் இராமாயண நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டாகக்கூறிக் கண்ணிய பொருட்டொடராக எழுதிச்செல்வர்.

புகழேந்திப் புலவர் தீட்டிய அல்லியரசாணி மாலை, பவளக் கொடி மாலை, புலந்தரன் களவு ஆகியவை அகவற்பாவை யொத்து அமைந்திருந்தும் அவற்றையும் உரைநடையாகவே பலர் கருதுகின்றனர்.

ஐரோப்பியர் தொடர்பால் தமிழிலக்கிய வரலாற்றில் விரும்பத்தகு திருப்பங்கள் ஏற்பட்டன. உரைநடை புதியதோர் எழுச்சியுடன் மறுமலர்ச்சியுற்றது. பதினாறும் நூற்றுண்டின் இறுதியில் சேசு கழகச் செம்மலான [2] ஆந்திரிக்கசு அடிகளார் பதிப்பித்த [3] 'தம்பிரான் வணக்கம்', [4] 'கிரிசித்தி

1 திருமுருகாற்றுப் படை 106.
2 Rev. Fr. Antrique Antriquez, S. J.
3 தம்பிரான் வணக்கம்(Doctrina Christam]1578(கொல்லம்)
4 கிரிசித்தியானி வணக்கம் [Doctrina Christam] 1579 (கொச்சி)

யானி வணக்கம்', [1] 'புனிதர் வரலாறு' எனும் முதல் மூன்று அச்சு நூல்களும் தமிழாக்கம் செய்யப்பெற்றவை என்பது உண்மை. பதினேழாம் நூற்றாண்டில் தமிழகம் வந்த "தத்துவ போதகர்" எனும் இத்தாலிய நாட்டு இராபர்ட் தே நொபிலி அடிகளார் தமிழ் உரைநடையில் பல்வேறு நூற்களை எழுதலானார். 'ஞானோபதேசக் காண்டம்', 'தத்துவக் கண்ணாடி', 'சேசுநாதர் சரித்திரம்', 'ஆத்தும நிருணயம்' முதலியன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. வட சொற்கள் மிகையாகக் கலந்து எழுதப்பட்ட அக்கால நடைக்கு இவையே சான்றுகளாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழகம் வந்து திருத்தொண்டாற்றிய அறிஞர் வீரமாமுனிவர் தெளிந்த நடையில் நல்ல தமிழில் 'பரமார்த்த குரு கதை', 'வேத விளக்கம்', 'வேதியர் ஒழுக்கம்' 'பேதக மறுத்தல்' என்னும் செம்மை சான்ற நூல்களை ஆக்கி அளித்து உரைநடை வளர்த்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் புதுவையில் வாழ்ந்த ஆனந்தரங்கனார் எழுதி வைத்த இருபானைந்து ஆண்டு (1736-'61) நாட்குறிப்பு புதுவையில் வழங்கிய உரைநடை விளக்கமாகத் துலங்குகிறது. நேரில் கண்டதையும் கேட்டதையும் அவ்வப்பொழுது ஆனந்தரங்கனார் குறித்துவைத்த புத்தகமே இந் நாட்குறிப்பு. கொச்சைத் தமிழில் எழுதப்பட்டாலும் இதன் நடையில் வன்மையும் ஓட்டமும் இருக்கக் காண்கிறோம். "சாயங்காலம் நாலுமணிக்கு வெள்ளைக்காரன் ஒருத்தனைக் கோட்டைக்குத் தென்னண்டை இருக்கப்பட்ட வெளியிலே கொண்டுபோய்க் கண்ணைக்கட்டி முழங்காலிலே நிக்க வைச்சு நாலுபேர் துப்பாக்கியிலே இரட்டைக் குண்டுபோட்டு சமீபத்திலே நிண்ணு, நாலுபேரும் ஒருமிக்க துப்பாக்கியை மாருக்குப் பிடிச்சு, சுட்டுப்போட்டார்கள்" [1739 சூலை 8: சித்தார்த்தி ஆண்டு ஆனி 28 புதன்]. [2] 'கோன்சேல் பண்ணி', [3] 'சீர்ப்பா' [4] 'கப்பித்தான்', [5] 'காபினெத்', [6] 'சொலுதாதுகள்', [7] 'பிரசாஞ்சு' என்றாங்குப் பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்யாது தமிழ்மை செய்திருக்கின்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் செய்தித் தாள்களும் தாளிகைகளும் தமிழ் உரைநடையை வளர்க்கலாயின. என்றி ஆக்னசு துரையும், வேங்கடாசலனாரும் 1827 ஆம் ஆண்டு சென்னைக் கல்விக் கழகத்தில் பதிப்பித்த "அரிச்சுவடி" நூல்

1 புனிதர் வரலாறு [Flos Sanctorum] 1586 (புன்னைக்காயல்)

2 Consultation, 3 Special Dress,

4 Captain, 5 Cabinet,

6 Soldiers, 7 Presentation

பல்வகையான உரைநடைகளைச் சான்று காட்டுகிறது. முக்களாலிங்கர் எனும் பிள்ளைப் பெயரினரான சிவஞான முனிவர் மெய் கண்ட சாத்திரப் பேருரை விளக்கமாக எழுதியதை 'சிவஞான மாபாடியம்' எனப் போற்றுவர். தொல்காப்பியப் பாயிர உரையும் முதற்சூத்திரவிருத்தியும் இவர் வரைந்த பிறவாம். வைத்தியநாத தேசிகரின் இலக்கண விளக்கத்துள் கண்ட தவறுகளைத் தொகுத்து ''இலக்கணச் சூருவளி'' எழுதியவரும் இவரே. நன்னூலுக்கு மயிலைநாதர் உரையும் சங்கரநமச்சிவாயப் புலவர் விருத்தியுரையும் ஆறுமுக நாவலர் காண்டிகை உரையும் விளங்கக் காணலாம். கல்லாடத்தின் முதல் முப்பத்தேழு பாடல்களுக்கு மயிலேறும் பெருமாள் பிள்ளை உரையருளினர். மயிலாடுதுறை அறமன்றத் தலைவராய் விளங்கிய குளத்தூர் வேதநாயகர், மேனாட்டில் சாமுவேல் அரிச்சர்டுசன் போன்றோர் புதினம் படைத்தாற்போலத் தமிழ் உரை நடையில் முதன் முறையாக [1] ''பிரதாப முதலியார் சரித்திரம்'', [2] 'சுகுண சுந்தரி கதை' எனும் இரு புதினங்களை எழுதி வழி காட்டினர்.

நாட்டுக்கு எல்லை போலவும் வீட்டுக்குக் கூரை போலவும் மொழிக்குக் கட்டுப்பாடு வேண்டும். வரம்பின்றி வந்து புகும் பிறமொழிச் சொற்களைத் தடுக்காவிட்டால் தமிழ்ச் சொற்கள் வழக்கிழந்து மெல்ல மறைந்துபோகும். இவ்வுண்மை தெளிந்த தமிழ் மாமலை மறைமலையடிகளார் தனித்தமிழ் இயக்கம் தோற்றுவித்தார் கனியிருக்கக் காய் கவர்தல்போல உரிய சொற்கள் தமிழில் விளங்குங்கால் அரிய பிற சொற்களைக் கலந்து எழுதுதலைக் கைவிட்டு, நல்ல தமிழில் அனைவரையும் எழுதத் தூண்டினர். ''குமுதவல்லி', ''கோகிலாம்பாள் கடிதங்கள்'','சிந்தனைக் கட்டுரைகள்'போன்ற செவ்விய தமிழ்நூல்களை வழங்கியுள்ளார். இவரைப் பின்பற்றியவருள் பரிதிமாற் கலைஞர் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர். 'தமிழ் மொழி வரலாறு', 'மதிவாணன்' போன்ற அரிய நூல்கள் இவர் ஆக்கமாம். 1893-ஆம் ஆண்டிற்குப்பின் தான் நாடக மேடைகளில் பாட்டோடு உரையாடலும் இடம் பெற்று வளர்ந்தது. பம்மல் சம்பந்தனார் ''நாடகத் தமிழ்'' என்னும் நூலையும், பரிதிமாற் கலைஞர் ''நாடகவியல்'' என்னும் இலக்கணத்தையும், மறைமலையடிகள் ''சாகுந்தல நாடக ஆராய்ச்சி''யையும் எழுதி உரை நடை வளர்த்தனர் பாட்டில்லாமல் பேச்சாகவே நாடகம் முழுமையும் செல்லவியலும் என்பதைப் பம்மல் சம்பந்தனார் முதலில் உறுதிப்படுத்திக் காட்டினர். நாடகத் துறையில் தமிழ் உரைநடை கிளர்ந்தெழுந்து வளரலாயிற்று.

---

1 1876 பிரதாப முதலியார் சரித்திரம்

2 1877 சுகுண சுந்தரி கதை.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரை நடை பல்லாற்றானும் பரந்து பெருகி வளர்ச்சியுறலாயிற்று. புதினங்களும் சிறு கதைகளும் நாடகங்களும் செய்தித் தாள்களும் அரசியல், வரலாறு, பொருளியல், அறிவியல் என்னும் பல்துறை நூல்களும் உரை நடை மலர்ச்சிக்கு விளக்கமாகத் துலங்குகின்றன. உரைப் பாட்டும் (வசன கவிதை) பாரதியார் முதலியோரால் வழக்குப் பெறலாயிற்று. நாவலர் சோமசுந்தர பாரதியார், புலவர்மணி கதிரேசனார், சுவைமணி. டி. கே சிதம்பரநாதர், 'தமிழ்த் தென்றல்' திரு. வி. கலியாண சுந்தரனார், சொல்லின் செல்வர் இரா. பி. சேது ஆகிய செந்தமிழ்ச் செல்வர் பலரும் தமிழ் நடையில் புத்தொளியையும் முத்தமிழ் உணர்வையும் வித்தூன்றி மறு மலர்ச்சி கண்டுள்ளனர். எளிமையும் இனிமையும் தெளிவும் விரிவும் உரைநடையாக உருவெடுத்துள்ளன. நாவீறு படைத்த நா நலத்தார் நானிலத்தினர்க்குத் தம் சொற்பொழிவுகளால் புத்துணர்ச்சியையும் உள்ளக் கிளர்ச்சியையும் ஊட்டி வரக் காண்கிறோம். அரசியல் உணர்வு உரைநடையின் பொற்காலமாம் புதியதொரு நற்காலத்தை உருவாக்கியுள்ளது என்று கூறல் மிகையாகாது. *

இலக்கண வரம்பில்லாவிடின் மொழி அழிந்து படும்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, தஞ்சாவூர், சென்னை முதலிய நாடுகளிலுள்ள தமிழ் மக்கள் தமிழ் மொழியைத் தமக்கேற்றவாறெல்லாம் வழுப்படத் திரித்து வழங்குகின்றனர். இவர்கள் இங்ஙனம் வழுப்படத் திரித்து வழங்கும் சொற்கள் தொல்காப்பியம், திவாகரம், பிங்கலந்தை முதலிய நூல்களில் திருத்தமாக எழுதப்பெறாது விடப்பட்டிருக்குமாயின் நம் தமிழ்மொழி எவ்வாறும்! இதற்கெடுத்துக் காட்டாகத் '**தாசுமானியா**' என்னும் நாட்டில் வழங்கிய மொழி, அந்நாட்டு முது மக்களால் நூல்களில் எழுதி ஒழுங்குபடுத்தாது விடப்பட்டமையின், அவர்க்குப்பின் வந்த நாகரிகமில்லா மக்கள் தாம் விரும்பியவாறு அம் மொழியைப் பிறழ்த்தியும், திரித்தும், மாற்றியும் வழங்கி வந்தனர்; இறுதியில் அம்மொழி இறந்துபட்டது. இன்னும் சைபீரியா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளிலுள்ள நாகரிகமில்லா மக்கள் வழங்கிய மொழிகள் பலவாற்றானும் திரிந்து நாளடைவில் இறந்தொழிதலும் சான்றாம். கிறித்து சமயக் குரவர் ஒருவர் ஒரு திட்டிற்குச் சென்று ஆண்டு வாழ்ந்துகொண்டிருந்த நாகரிகமில்லா மக்களின் மொழியைச் சீர்திருத்தி அதற்கு எழுத்துகள் உண்டாக்கித் தமது மறைநூலையும் அதில் மொழி பெயர்த்து வைத்து, அம்மொழி அவர்களிடம் நிலைபெற்றிருக்கத் தக்கபடி பல ஆண்டுகள் அவரோடிருந்து உழைத்துப் பின் தம் ஊர்க்குத் திரும்பினர். திரும்பிச் சில ஆண்டுகள் கழித்து அந்நாட்டுக்குச் சென்று பார்த்த பொழுது, அந் நாகரிகமில்லா மக்கள், அவர் மிகவும் முயன்று கற்பித்த மொழியை அறவே மறந்து ஏதோ ஒரு நாகரிகமற்ற மொழியைப் பேசிக் கொண்டிருக்கக் கண்டார். இவ் வரலாற்றினைக் கற்றறிவுமிக்க **மாக்சுமுல்லர்** தமது மொழியாராய்ச்சி நூலில் எடுத்துக்காட்டி, நாகரிகமில்லா மக்களிடைப்பட்ட மொழியானது நிலைபெறாது அழிந்துபோம் என்பதை நன்றாக விளக்கியுள்ளார். — **திரு. தி. நீலாம்பிகையம்மை.**

பாட்டரங்கம்

பாரதிதாசன்

தாயாம் தமிழே! தனிச்சுடரே! வாழ்வியலே
தேயா மதியே! திருவிளைவே – ஓயாமல்
எட்டி உதைக்கும் இழிவடக்கர்க் கேவல்செய்
மட்டிகட்கு நல்ல மதியளிப்பாய் – அட்டியின்றிப்
பாலுண்ட மார்பைப் பறிக்கவரும் – பேயிந்திக்
கோலண்டி வாழ்வோர் குலைநடுங்க – வேலண்டிப்
பாயவரும் நாள்குறிப்பாய்! பாவேந்தன் பண்பாடித்
தீயவரும் நம்மீது தீண்டவரின் – மாயவரும்
நாள்விடுப்பாய்! நன்றே நமதிளைஞர் தோள்படைக்கும்
வாள்கொடுப்பாய் போற்றிஇவண் வந்து.

புதுவை. முதுகண்ணன்.

திரைகடலே தருகின்ற முத்தும், தேடித்
தேனீக்கள் தருகின்ற நறவும், என்றும்
தரைமகளே தருகின்ற பொன்னும், என்றன்
தமிழ்மகளே தருகின்ற குறளும், பூத்த
விரைமலரே தருகின்ற பயனும், நல்ல
வேர்ப்பலவு தருகின்ற சுவையும் போலக்
கரையில்லா இவ்வுலகில் வாழ்ந்து விட்டுக்
கலைவேந்தே, எமைவிட்டுச் சென்று விட்டாய்?

நம்மினிய தமிழ்மொழியைத் தாயாய்க் கொண்டாய்
நலமனைத்தும் இடைவிடுத்தா சென்றுவிட்டாய்?
செம்பொருளை அனைவர்க்கும் எடுத்துச் சொன்னாய்;
செயலினிலே கண்டிடவே சென்றுவிட்டாய்?
அம்புவியில் பாமகளைக் காத்தும் உன்றன்
அருமுயிரைக் காவாமல் சென்றுவிட்டாய்!
விம்முதுயர்ப் பேரிழப்பால் தமிழர் உள்ளம்
விதிர்விதிர்த்தல் உணர்கிலையோ? சென்றுவிட்டாய்!

– உதயை. மு. வீரையன்.

அமிழ்தினு மிக்க அருந்தமிழும், நந்தம்
தமிழ்நாடும் பாரில் தழைக்கத் – தமையளித்தே
ஓயா துழைத் துயர்ந்த பாரதி தாசனின்
வீயாப் புகழ்ஓங் குக.

– வீ. வீராச்சாமி, திம்மிநாயக்கன்பட்டி.

தமிழ்த் தொண்டே தம்மூச்சாய்க் கொண்டுநாளும்
தமிழ்ப்பாடல் கடலலைபோல் பெருக விட்டார்;
அமிழ்தமென இனிக்கும்நற் பாடல் நூல்கள்
அளித்திட்டார்; பாவேந்தர் மறைந்து சென்றார்.
இமிழ்கடல்சூழ் தமிழகத்தில் இவரைப்போல
இன்னொருவர் காண்பதுவும் அரிதேயாகும்
தமிழ்பேசும் வாய்மூடப் பாடல் பொங்கும்
தமிழ்நெஞ்சம் மறைந்ததுவே, துன்பந்தந்தே!

- புலவர். வே. அரசு, எளச்சிபாளையம்.

பாண்டியன் பரிசால் இந்தப் பாரிடைத் தமிழைப்பேணத்
தோன்றிய மறவன்; இங்குத் தூங்கிய மக்கள் ஆர்வம்
தூண்டிய மாறன்; கொள்கைத் துணிவையே கொள்பா
வேந்தன்.
ஊன்றிய பூக்கும் வேலை உழைத்தவன் மறைந்தான், அந்தோ!

அஞ்சாமல் உண்மைதன்னை அகல்புவிக் கெடுத்துரைத்தான்
கெஞ்சாது வாழ்ந்தான்; கொள்கைக் குன்றென நிமிர்ந்தே என்றும்
துஞ்சாது தமிழைக் காத்தான்; தோழனின் புகழைப்பாட
எஞ்சாதிவ் வேடு; வையத் தெழில்நிலா மறைந்த தந்தோ!

– இரா. அரசக்கண்ணன்.

'பாண்டியன் பரிசு' தன்னைப் பாங்குறத் தந்தாய் போற்றி!
காண்டக ஒளிர்'குடும்ப விளக்'கேற்றி வைத்தாய் போற்றி!
மாண்டகும் அழகையெல்லாம் சிரித்திடச் செய்தாய் போற்றி!
வான்தொடும் புகழைச்சேர்த்து வையத்துள் வாழ்வாய் போற்றி!

– வியாசை. சரவணக்குமார், சென்னை.

தமிழ்த்தாய் இந்நாள் ஒளியிழந்தாள்;
தமிழர் எல்லாம் நகையிழந்தார்.
தமிழ்த்தாய் அல்லல் உறுகின்றாள்;
தமிழ்தோய் சான்றோர் அழுகின்றார்!
தமிழ்த்தாய் பெற்ற தலைமகனே,
தாயின் பணியை நீ மறந்தால்
தமிழ்த்தாய் வாழ்வு சிறந்திடுமோ
தமிழை ஓரார் ஆட்சியிலே?

கொல்லும் வேங்கைப் புலிபோன்றும்,
கொலைசெய் கூர்மை வாள்போன்றும்,
அல்லல் செய்யும் பகையிருளை
அறவே போக்கும் பகலவனாய்
நல்லோர் செய்த தவப்பயனாய்
ஞாலமீதில் தோன்றிட்ட
எல்லை விரிந்த அறிவொளியே
ஏனோ எம்மைப் பிரிந்தனையே?

– த. ஆதனிளங் கீரன், ஆதனூர்.

பூவேந்தும் பொழிலெல்லாம் புலம்பத், திங்கள்
பொட்டேந்தும் விண்ணகமே கண்ணீர் சிந்த
பாவேந்தே! எங்கேநீ பறந்து சென்றாய்?
பசியேந்து வயிற்றினரும் உன்பாட் டென்றால்
நாவேந்தச் சுவையுணவு கேட்பா ராமோ?
நயமேந்தும் புலவோய்நின் தளரா மெய்யைச்
சாவேந்திச் சென்றிடவும் இயலு மாமோ?
தமிழேந்துங் கண்ணீரைத் துடைப்பார் யாரே?

ஊற்றிவிடில் தண்ணீரைப் பாலில், சீறி
உறுமிடுவர் ''கலப்படத்தை ஒழிப்போம்'' என்பார்
வேற்றுமொழி கலப்பதற்கே? தயங்கார்; வெந்நீர்
விடுவார்கள் தமிழ்வேர்க்கே! அன்னார் அஞ்சும்
கூற்றுவனே! தனித்தமிழாம் கொடியைக் காக்கக்
கூண்டமைத்த மறைமலையார் கொள்கை காத்தாய்!
தேற்றிடுவார் தமிழ்த்தாயை யாரே? மீண்டும்
திரும்பாயோ பூங்குயிலே! ஏங்கு கின்றோம்.

– அ. வேதாசலம், திருத்துறைப்பூண்டி.

ஒடிந்துவிழும் உடலுக்கே உணர்ச்சி தந்தாய்!
ஒளிபெற்ற தமிழர்க்கே உரத்தைத் தந்தாய்!
மடிந்துவந்த தமிழர்க்கு மலர்ச்சி தந்தாய்!
மாத்தமிழர் நெஞ்சத்தில் மறத்தை வைத்தாய்!
முடிந்துவிடும் அடிமைநிலை எனமு ழக்கி
முத்தமிழில் புரட்சியினை எழுப்பி நின்றாய்!
விடிந்தவுடன் நீயிருப்பாய் என்றே நின்றோம்!
விடுதலைக்கு முன்பறந்தாய் குயிலே அந்தோ!

மருட்சிகொண்ட தமிழினத்தைப் பாட்டால் தட்டி
மறுமலர்ச்சிப் புலியினமாய் வளரச் செய்தாய்!
வறட்சியுற்ற வேற்றுவரின் தலையில் ஏறி
வரலாற்றில் நம்புகழை அமைத்து வென்றாய்!

திரட்சிகொண்ட தமிழ்ப்படையை அணிவ குத்தே
திரட்டிவந்த பாரதிக்கு மேலோன் தாசன்!
புரட்சிவெள்ளம் புதுமையுள்ளம் எங்கே எங்கே?
போர்மறவன் பாட்டரசன் மறைந்தான் அம்மா!

— சுரா, உளுந்தூர்ப்பேட்டை.

தமிழ்த்தலைவா! புரட்சிப்பா வேந்தே! என்னைத்
தளர்ச்சிக்குப் புதுமருந்தே! இரும்பு நெஞ்சே!
கமழ்கின்ற மறுமலர்ச்சிப் பூவே! இந்தக்
காலத்தின் முத்தமிழே! புதுமைத் தேனே!
தமிழுக்கும் உரிமைக்கும் முழக்கம் செய்த
தன்மானப் பனிமலையே! கொள்கை மன்னா!
தமிழரசன் வள்ளுவரின் உறவில் வந்த
தண்டமிழே! ஓய்ந்தனையோ? இல்லை! இல்லை!

பிறந்தவர்கள் இறக்கின்ற சட்டம் உண்டு!
பிறந்தவர்கள் நின்போன்று வாழ வில்லை!
இறந்தவரை மறக்கின்ற உலகில், நீதான்
இறவாத மறுபுகழைச் சூட்டிக் கொண்டாய்!
புரந்தார்கண் நீர்மல்கச் சாக்கா டேற்ற
பூந்தமிழே! இசைக்குயிலே! இந்தக் கூத்தும்
அறந்தானே? தமிழ்க்குலத்தின் அறிவே! நெஞ்சம்
அலைகடலாய்ப் பொங்கவிட்டா பறந்து போனாய்?

— புலவர் முகிலன்.

தமிழுணர்வு:

கன்னலெனத் தித்திக்கும் இனிமை சாலும்;
கடல்போலும் பரப்பினிலே பெருமை விஞ்சும்;
தென்றலெனத் தெவிட்டாத மென்மை மேவும்
செங்கதிரின் ஒளிபோலும் செம்மை வீசும்;
தன்னிகரில் தனிமை மொழி; தளர்வேயில்லாத்
தகைசான்ற தூய்மை மொழி; என்றுமுள்ள
மன்னுலகின் அன்னை மொழி! மறைவேயில்லா
மாண்புமொழி எதுவென்னில் தமிழே யாகும்!

— நீ. தங்கவேலன், வேலூர், வ. ஆ.

அறப்பணி ஆற்றும் ஆசிரி யன்மார்
பொறுப்பற் றவர்எனப் புகல்கிலோம் இல்லை.
தொடக்கப் பள்ளியின் தொண்டின் செல்வரை
நடுக்கக் குரலில் நயந்து வேண்டுவாம்
''நெஞ்சைத் தொடுமின்! நேர்மை உணர்மின்
பிஞ்சுக் குழவி பேசுந் தமிழில்
நஞ்சை நீக்குமின், நாட்டின்
செஞ்சொற் பணியைச் சிறக்கச் செய்மினே!''

— அலைமணற்குழவி, தரங்கம்பாடி.

இந்தி எதிர்ப்பு:

ஏதடா இந்தி நமையாளல்? இந்நிலையும்
தீதடா நீடித்தல்; தேர்ந்தெழுந்தே – ஊதடா
உந்துந் தமிழுணர்வால் ஊழியெனும் காலக்கே(டு)
இந்திக்கிங் குற்றதெனச் சங்கு!

– "குறள்", கோவை 5.

தமிழ்நாடு தமிழர்க்கே! தமிழே மூச்சு!
தமிழ்மறவ, இடியென்ன முழங்கு! நந்தாய்
தமிழுக்கே செந்நீர்பெய்! தமிழ் மறந்தோன்
தமிழனெனின் கான்றுமிழ்வாய்; ஒழித்துக் கட்டு.
தமிழ்மகனே! வல்லுணர்வு நெஞ்சில் இல்லான்
தரைமீதில் மாந்தனல்லன்; உணர்க; இன்றே
தமிழின்றேல் தரைவீழ்ந்த மீன்போல் வாழ்வு
தாழ்ந்திடுமே! இதையுணர்ந்தே; எழுக, செல்க!

பழிவரினும், அழிவுநெருங் கிடினும், நந்தம்
பைந்தமிழ்த்தாய் நலம் ஒன்றே உயிர்மூச்சாகும்.
விழிகாக்கும் இமையாவோம் தமிழைக் காக்க!
வியனுலகில் தலைநிமிர்வோம்; வந்த வேற்கு
விழிமூடா மறவனே, உறக்கம் ஏனோ?
வெம்புலியாய், இன்றே,இப் பொழுதே நம்மை
ஒழிக்கவரும் மொழிவெறியை அழிப்போம்; பெற்ற
உயிர் நமக்குச் சொந்தமன்று; தமிழ்க்கே சொந்தம்!

– குராயூர், எழிலன்.

வெண்ணெய்என்று சுண்ணும்பை விலைக்குவாங்கி
விருந்தென்றே உண்ணுதீர்; புகுந்த இந்தி
வண்ணமிட்ட பொய்ப்பாவை; காதல் கொண்டால்
வாழ்வழியும்; மானம்போம்; மறைமலையார்
எண்ணத்தை உணர்ந்திடுமின்; தமிழ்ச் சான்றோரின்
ஏற்றவுரை ஆய்ந்திடுமின்; இந்திஏற்றால்
மண்மேடாய் மலர்ச்சோலை அழியும்; அன்பீர்
மொழிமானப் போர்தொடங்கித் தமிழ்காப்பீரே!

– சுரா, உளுந்தூர்ப்பேட்டை.

நன்மொழியில், பொன்மொழியில், அமிழ்தில், அன்று
நாடாண்ட முன்மொழியில், பேச்சில், மூச்சில்
தென்மொழியில், தேமொழியில் தெவிட்டா இன்பத்
திருமொழியில் ஒருமொழியில், தமிழில், யார்க்கும்

இன்மொழியில், மென்மொழியில், இன்றுவந்த
இழிமொழியைப் பழிமொழியை, 'இந்தி'என்னும்
வன்மொழியை, வடமொழியை ஏத்துகின்றார்
வழிமொழிந்து வணங்குகின்றார் நம்மில்சில்லோர்.

பேசுகின்றார் மேடையிலே; வாய்பிளக்கப்
பெருமுழக்கம் செய்கின்றார்; சொல்லெடுத்து
வீசுகின்றார் 'மொழிஇதனால் வளரு'மென்ற
விரிவுரையும் சொல்கின்றார்; வெறியன்என்றே
ஏசுகின்றார், தமிழ்வேண்டு மென்றால்;அன்றே
இடுகின்றார் வெஞ்சிறையில்; வாளெடுத்து
வீசுகின்ற வீச்சொன்றில் அவரைமண்ணில்
வீழ்த்திடுவோம்; வாழவைப்போம் தமிழைநாமே!

– வே. மா., பழையூர்.

வள்ளுவன் தமிழை வடவர்க்கு விற்று,
வளம்பல பெற்று வாழ எண்ணும்
மந்தி மதியினர் மனப்போக் கறிந்து
செந்தமிழ் அன்னை செந்நீர் வடிப்பாள்!
இந்நிலை தொடர்ந்தால் இந்தி நம்மைச்
சுரணை யற்ற பாவையாச் செய்திடும்.
மொழியினை இழந்து பழியுடன் வாழ்வதா?
மானம் அழிந்து மரமாய் நிற்பதா?
பார்வை யில்லாப் பாவைபோற் கிடப்பதா?
அந்தோ தமிழா, அன்னைநம் தமிழை
அழிக்க வரும்பகை வீழ்த்த வீறுகொள்!
ஆண்ட தமிழை அரியணை ஏற்றிட
மாண்புடன் விழைவாய் மண்ணில் இன்றே!

– கி. கந்தசாமி, நாச்சியார்கோவில்.

கருவிற் புகுந்தே உயிரை வளர்த்த
கவின்தமிழ் என்மொழியாம்;
உருவிற் செறிந்தே உடலை வளர்க்கும்
உயர்தமிழ் நன்மொழியாம்;
திருவிற் சிறந்த இலக்கியம் நிறைந்த
செந்தமிழ்த் தண்மொழியாம்;
தெருவிற் கிடந்த இந்தியும் வந்தால்
சிறக்குமோ இம்மொழிதான்?

– மொழிச்செல்வன், குளத்தூர்.

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

வள்ளுவர் தொகுத்த துறவறம்.

புலவர், வித்துவான். **ஒண். கி. சந்திரசேகரன்,**
எம். ஏ; பி. டி; பி. ஓ. எல்.

அன்றியும், துறவறத்து நின்று, நோற்போர் தம்மையுற்ற நோய் ஒன்றனையே பொறுத்தலுடையராவர். இல்வாழ்வார் போல் பிறரையுற்ற நோயையும் பொறுத்தல் வேண்டுவதிலர்.

"ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து"
"துறந்தாரிற் றூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்"
"உண்ணாது நோற்பார் பெரியார் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின்"

இவற்றான் நோன்புகளால் ஊனைத்தவிர்ந்து உற்ற நோயைப் பொறுக்கும் பெரியார் எல்லாரும் பிறர் சொல்லும் இன்னாச்சொல் நோற்கும் இல்லறத்தாரின் பின்னேயே அவ்வா றெண்ணப் படுதல் தோன்றுதலின், இன்னோரன்ன அருமைகள் உடைத்தா தலை நோக்கியே "அறமெனப் பட்டதே யில்வாழ்க்கை"யென்று பாராட்டிக் கூறினாரென்க அன்றியும்,

"நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி"

என்புழி, "யாதோ ருயிரையும் கொல்லாமையாகிய அறத்தினைக் காக்கக் கருதும் நெறியே மேல்நிலை வீடுபேறுகட்கு நல்ல நெறி யென்று சொல்லப்படும்" என்றுணரு நிற்றலின், கொல்லா நெறியே நன்னெறியாதலறிதும்; அந்நெறிதான் துறவறத்தார்க் கோதப்படுதலின் அத்துறவறமும் நனி சிறந்த அறநெறியாதல் விளங்கு மன்றே! இக் கொல்லாமையானது அறங்க ளெல்லா வற்றினுஞ் சிறப்புடைத்தாய், நூல்களுள் கூறுத அறங்களையுந் தன்னுள் அகப்படுத்துநிற்றலின் "அறவினை யாதெனில் கொல் லாமை" யென்றார். இதனால், கொல்லா நெறியைக் கொண் டொழுகுந் துறவற நெறி ஒன்றே தலையாய அறநெறி யென்ப தற்கு யாதோர் ஐயுறவும் இன்றாம்.

அன்றியும், உண்பதனைப் பசித்த வுயிர்கட்குப் பகுத்துக் கொடுத்துத் தாமும் உண்டு, ஐவகையுயிர்களையும் ஓம்புதல் அற நூலுடையோர் துறந்தார்க்குத் தொகுத்த அறங்களெல்லாவற்றி னும் தலையாய அறமாமென்பது பட,

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை"

என்று மொழிந்தாற்போல பழியஞ்சிப் பொருளையீட்டி, அப் பொருளை இயல்புடைய மூவர் முதலாயினார்க்கும், தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தானுண்டலை யொருவன் இல் வாழ்க்கை யுடைத்தாயின், அவன்வழி உலகத்து எஞ்ஞான்றும் நிற்றலல்லது இறத்தலில்லை யென்பதுபட

"பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்"

என்று இல்லறத்தார்க்கும் ஓதினார். இவற்றான், இருவகையறத் தார்க்கும் "பகுத்துண்ணுதல்" தலையாய அறமாதல் விளங்கும். அற நூலோர் தொகுத்தவற்றுளெல்லாந் தலையாய "பகுத்துண் ணுதல்" இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் ஒப்பவரையா தோதப்படுதலின் துறவறத்திற்கு இழுக்கு ஏற்பித்தல் எவனாயிற் றாம்? பல அறங்களுள் ஒவ்வொன்றனைப் பற்றிச் சிறப்பாக உரைக்கவருமிடத்தெல்லாம் அஃதொழிந்தவற்றிற்குக் கீழ்மை கற்பித்தல் சாலுமோ!

"தம்மையிகழ்வார்ப் பொறுத்தல் தலை"
"மனத்தானும், மாணாசெய்யாமை தலை"
"இகல்கருதி யின்னாசெய்யாமை தலை"
"ஐம்புலத்தா ரோம்பல் தலை"

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என வருவன வுளவாய விடத்து எல்லாவறங்களையும் கட்டளை நூல் நடையாய்க் கொள்ள வேண்டுவதல்லது ஒன்றையேற்று ஏனையவற்றை யொழிக்கப்படுமோ? அதைப்போலவே, "அற னெனப் பட்டதே யில்வாழ்க்கை"யென்றுழியும் துறவறம் வரை யப்படாது அதனோடு தொடர்ச்சியுடையதாகவே கொள்ளுதற் பாலதாம். அன்றியும்,

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று"

என்பதற்கு மணக்குடவர் "அறனென்று சிறப்பித்துச் சொல்லப் பட்டது இல்வாழ்க்கையே, அதுவும் நன்றாவது பிறனொருவனால் பழிக்கப்படுவதொன்றை யுடைத்தல்லதாயின்;

பழிக்கப்படுவதென்றது இழி குலத்தாளாகிய மனையாளை. இனி, வாழ்க்கைத் துணை நலங் கூறுகின்றாராதலின், இது கூறப்

பட்டது'' என்றுரைத்ததனை நோக்குமிடத்துத் துறவறத்தைச் சுட்டி இல்லறத்தின் இயல்பு இயம்பப் படாமை அறிகின்றோம். ''பிறன் பழிப்பதில்லாயி னன்று''என்பது,பிறன் பழிப்பதொன்று இல்லாயின் நன்று'' என்றேனும், ''பிறன்பழிப்பது இல்லாயின் அன்று'' என்றேனும் பிரித்துப் பொருள்கொள்ள விடந்தரும். பின்னதற்குப், பிறன் பழிப்பதாகியது இல்லாளாயின் (அற னெனப்பட்டது) அன்று'' என்று பொருள் கொள்ளலாகும். அவ்வழி

''புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை''

என்பது கருத்துற நிற்கும். எனினும், பிறன்பழிப்ப தென்பது கூடாவொழுக்கத்தை''யென்று பரிமேலழகர், துறவறத்தாரைச் சுட்டிக் கூறியதனையே குறிக்கொள்ளின், காமம் தன் கண்ணே தோன்றி நலியா நிற்கவும் அதனதின்மை கூறிப் புறத்தாரை வஞ்சித் தொழுகுவானது துறவறத் தோற்றத்தினும், மனைவி யோடுவாழ்வான் அவ்வாறு வஞ்சித் தொழுகாமையால் அவனது இல்வாழ்க்கைத் தோற்றமே சிறந்ததாமென்றும் கூடா வொழுக்கம்பற்றித் துறவற மிழிக்கப் படுதல் நோக்கித் தனக் கோதிய நெறியில் வழுவா தொழுகுவான் பிறனில் விழையாது ஓம்புதற்குரியனும் என்றும், துறவறத்தான் விட்ட காமத்தை உரனின்மையால் விரும்பின் பழியாம் என்றும், இல்லாளின் நலந்துய்ப்பானாகிய இல்லறத்தான் பிறன் மனையாளைக் கருதின் அறன் கடை நின்றானாகும் என்றும் அறிவுறுத்தியவாறும். ஆகவே, இல்லாளோடு வாழ்வான் அவளோடு நிற்றலும், அவ் வில்லாளையும், விட்டுத் துறந்தோன் மீண்டும் காமத்தான் நலிவுறு தொழுகலும் அவ்வவர் திறத்து நெறிக்குப் பழிக்கப்படா தனவாய், அவர்தம் அறநெறிகள் சிறந்து கடைபோதற்குக் காரணமாய் நிற்கும் என்பது கருத்தாகக் கொள்ளப்படும்.

அன்றியும்,

''அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்''

என்புழிப் புறத்தாறுவது இல்லைவிட்டுக் காடுறைதவம் (வானப் பிரத்தம்) ஆகிய மூன்றும் நிலையாகப் பரிமேலழகர் கொண்டார். ஈண்டு மணக்குடவர் ''சீலனைக் கொடுக்க வேண்டுமென்றார் அவ்வாறு செய்யின் தவப்பயனும் இதுதானே தருமென்றார்'' என்றலின் அவர்க்கும் புறநெறியென்பது தவஞ் செய்யும் மூன்று வது நிலையே கருத்தாதல் பெறுதும். இனி, ''அஃதும் பிறன் பழிப்பதில்லாயின்'' என்புழி, அஃது மென்பது இம் மூன்றுவ

தாகிய காடுறை தவநிலையையே குறிப்பதாகக்கொண்டு இல்லறம் துறவறம் என்னும் இரண்டே அறநிலையாம்; மனைவியோடு தீக்கைக்கொண்டு காடு சென்று தவஞ் செய்யுங்கால் மனையானது தோள் நசைந்தொழுகுமாயின் அது பழிக்கப்படுவதாம்; அவனதுநிலை துவரத் துறவாமையின் துறவறமாகாது; ஈகை செய்யாமையின் இல்லறமுமாகாது. மனைவியை நயந்துழி சென்றும் பயனில்லையாம்; அவ்வழி காடுறைதவமும் ஓர் அறநிலையாகக் கருதப்படவேண்டுமாயின் காம நசையின்றி யொழுகிய வழியே அங்ஙனமாம் என்பது கருத்தாகக் கொள்ளலுமாம்.

அன்றியும்,

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்று மனநலமே அறப்பயன் விளைக்குமென்று வள்ளுவர் கூறியபடியே, பொய், குறளை, வன்சொல், பயனில் சொல்லென்னும் மொழிக் குற்றங்கள் நீங்கிப், புலனைந்தும் கரிசு புகாமல் காத்தலாகிய மெய்யின்கண் நலன் பொருந்தி, அம்மொழி மெய்களினிகழும் குற்றங்களெல்லாம் மனக்குற்றம் அடியாக நிகழுமாதலின், மனமாசு அகன்ற நலமே நல்லா றெனப்படுமென்று நீதி நெறி விளக்க நூலுடையாருங் காட்டினார்.

"பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காத்து, - மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா றெனல்"

இதுபற்றியே,

"மனத்தது மாசாக மாண்டார் நீராடி,
மறைந்தொழுகு மாந்தர் பலர்"

என்று மனமாசகலாதார்க்குத் துறவறங் கைகூடாமையைக் காட்டினார். "மன நலம் மன்னுயிர்க் காக்கும்" என்றோதியதும் இருவகை யறநிலையினர்க்கும் ஏற்புடைத்தாதலறியப்படும். இதனான், மனம் மாசு நீங்கித் தூய தாம் நிலையளவும் இல்லற முளதாகவும், அஃது இருவகைப் பற்றுகளையும் அற்று நிற்கும் நிலைமைக் கண் துறவறமுளதாகவும் பேசப்படுமென்க. இது பற்றியே, அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்துக் கண்,

"ஒல்லும் வகையான் அறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்"

என்று இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் பொதுப்பட வோதியதூஉமாம் என்க. (தொடரும்)

எது மொழி வெறி?

(புலவர். வி. பொ. பழனிவேலன். பி. ஓ. எல்.)

மொழி என்பது மக்கட்கு மற்றுமொரு விழி போன்று சிறப் பளிக்கவல்லது. மொழிவழியே தாம் நாகரிகம்,பண்பாடு முதலிய வற்றைப் பிறர் அறியச்செய்ய வாய்ப்புண்டாகும். தமக்கென ஒரு மொழி இல்லாதார் மாந்தவினத்தில் வைத்து எண்ணப் பெறும் இயல்பில்லாதாரே. ஒவ்வொரு மாந்தர்க்கும் 'தாய் மொழி' என்று ஒன்று உண்டு. அதனிடத்தில் பற்று உடைமை எல்லா நாட்டு மக்கட்கும் இயற்கையாய் அமைந்த பண்பாகும். இதற்குப் புறம்பாக யாரும் இருத்தல் ஏலாது மொழிப்பற்றின் காரணமாகவே நாட்டுப்பற்றும் உண்டாகிறது. மொழிக்கும் நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஏனெனில், மொழி வழியே நாடு பெயரிடப்பட்டுள்ளது. இஃது உலக நாடுகள் யாவற்றிற்கும் பொருந்துவதொன்றும்.

இற்றை ஞான்று தமிழ் மொழியாகிய நம் தாய் மொழிக்கு வந்து கொண்டிருக்கின்ற கேட்டை அறியாதார் எவருமிலர். தாய்நாடாகிய தமிழ் நாட்டிற்கும் அதே நிலைதான். நாவலந் திட்டின் நடுவணரசு 'தமிழ் நாடு' என்று பெயர் பொறிக்கக்கூட இசைவு தர மறுக்கிறது. "Madras State", என்றே ஆங்கி லத்தில் எழுதச் செய்துள்ளது. ஆனால் தமிழில் எழுதினால் தமிழ்நாடு என்று எழுதிக் கொள்ளலாமாம் "Thamizh Nadu", என்று ஆங்கிலத்தில் எழுதக்கூடாதாம். இந்தியப் பாராளு மன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்களாயுள்ள 'இந்தி' மொழியைத் தாய் மொழியாக உடையவர்களும், அம்மொழி விரும்பிகளாகிய பேராயக் கட்சியினர்களும் பெரும்பான்மை யோர் இருக்கின்ற காரணத்தால் பண்படாத, இலக்கியம், இலக் கணமற்ற, கரடு முருடான மொழியாகிய இந்தியை இந்தியா முழுமைக்கும் பொதுமொழியாக்கப் பெருமுயற்சி செய்து வரு கின்றனர். இந்தி மொழியே தெரியாத தமிழ் மக்களிடையே திணிக்க அவர்கள் மேற்கொள்ளும் முறை மிகவும் துயர் தருவ தாகவே உள்ளது.

இருப்புப் பாதைத் துறை, அஞ்சல் துறை, முதலியவற்றில் அங்குள்ள நிலையங்களின் பெயர்களில் இந்தி மொழி இடம் பெற்றுள்ளது. இருப்புப் பாதை நிலையங்களின் பெயர்களில் தமிழும் இருக்கிறது. ஆனால், அஞ்சலக முத்திரைகளில் ஊர்ப் பெயர்கள் ஆங்கிலத்திலும், இந்தியிலுமே எழுதப்பெற்றுள்ளன. பணவிடைத் தாள்கள், அஞ்சலட்டைகள், அஞ்சல் உறைகள், முதலியவற்றிலும் அவ்வாறே எழுதப் பெற்றுளது. சுற்றறிக் கைகள் யாவும் இந்தியிலேயே வருகின்றன. பொதுமக்கட்கு

விளம்பரப் பலகைகளில் ஒட்டப்பெறுவதும் இந்தியில் அச்சிட்ட விளம்பரங்களே. நடுவணரசு அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்கள் யாவரும் இந்தியை விரைவில் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சுற்றறிக்கைகள் அடிக்கடி வருகின்றன. இலவசமாக இந்தி கற்றுக் கொடுக்கவும் ஏற்பாடாகி வருகிறது.

ஊர்தோறும், நகர்தோறும் இந்தி பரப்பு மன்றங்கள் நிறுவப் பெற்று வருகின்றன. மேலும் தனியாக எவரேனும் இந்தி கற்பிக்க முன்வந்தால் அவர்கட்கு நடுவண் அரசு பொருளுதவி செய்வதாகவும் வாக்களித்துள்ளது. பள்ளிகளில் பணிபுரியும் இந்தியாசிரியர்கட்கு மைய அரசே ஊதியம் வழங்குவதாகவும் அறிவித்துள்ளது. இந்தியில் இலக்கிய, இலக்கண நூல்கள் எழுதவும், அறிவியல் நூல்களை இந்தியில் பெயர்க்கவும் நடுவணரசு கோடிக் கணக்காகப் பணம் ஒதுக்கியும் உளது. அன்றியும், இந்தி பரப்பு மன்றங்களையெல்லாம் தேசிய உடைமையாக்க இந்தி பரப்பும் பணியை மேற்கொண்டுள்ளோர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுளது. அமைச்சர்களும் விரைவில் செயல்படுத்துவதாக உறுதியளித்துள்ளனர். வானொலி மூலம் பெருமளவில் இந்தி பரப்பப்படுகிறது என்பது தமிழ் மக்கள் அறிந்தவொன்றே. இந்திச் சொற்களை எந்த வகைகளில் பயன்படுத்த முடியுமோ அந்த வகைகளிலெல்லாம் முயன்று செயலாக்குகின்றனர். தமிழே சரியாகக் கற்காத மக்கட்கு இந்தியில் செய்திகள்; இந்திப் பாடம் முதலியன வானொலி மூலம் சொல்லப்பட்டு வருகின்றன.

பள்ளிகளில் உடற்பயிற்சியின் போழ்து இந்தி மொழியிலேயே பயிற்சிக் கட்டளைகள் இடப்படுகின்றன. பதினோராம் வகுப்புக்கு இந்தித் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுவிட்டது. இனிக் குறைந்த மதிப்பெண்ணும் வரையறுக்கப்படும் தப்படும். அடுத்த ஆண்டு என்ன செய்ய இருக்கிறார்களோ? யாம் அறியோம். இந்தியாவில் உள்ள எல்லா மொழிகட்கும் 'ஒரே எழுத்து முறை' கொணரவும் திட்டமிட்டுள்ளனர். தென்னகத்தில் கூடிய விரைவில் 'இந்திப் பல்கலைக் கழகம்' நிறுவவும் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. தில்லி வட்டார அலுவலகங்களில் பணிபுரிகின்றவர்கள் யாவரும் இனிமேல் இந்தியிலேயே கையெழுத்திட வேண்டுமென்று சுற்றறிக்கை விடப்பெற்றுவிட்டது. இங்குள்ள பிற நாட்டு அலுவலர்கள் அலுவலகங்களிலேயே இந்தி கற்றுக்கொள்ள வாய்ப்புகள் உண்டாக்கிக் காலையிலோ, மாலையிலோ ஒரு மணி நேரம் கற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறப்படுகிறது.

நடுவணரசு கல்வியமைச்சர் திரு. சாக்ளா தமிழ் நாட்டில் இந்தியைப் புகுத்தியே தீருவேன் என்று முழங்குகிறார். துறை

யற்ற அமைச்சர் திரு. இலால் பகதூர் சாத்திரி அவர்க்கு ஒத்து ஊதிச் சென்றுளார். (1965) கசுசுரு—க்குப் பிறகும் ஆங்கிலம் நீடிக்கப்பெறும் என்று அமைச்சர்களும் அரசியல் தலைவர்களும் அமைதி கூறித் திரிகின்றனர். இதன் உட்பொருள் என்ன? என்றேனும் 'இந்தி', ஆட்சிப் பொதுமொழியாக வந்தே தீரும் என்பதன்றோ? இந்த உண்மையைத் தமிழர் பலரும் உணர்வர்; ஆனால் உணர்ச்சியிலர். தமிழக அரசின் ஆட்சிப் பொறுப் பேற்றுள்ள அமைச்சர்கள் மக்களை இன்னும் மடமையில் ஆழ்த் தியே வருகின்றனர். வடநாட்டிற்குச் செல்லுங்கால் தமிழகத்து மக்களின் உள்ளக்கிடக்கையை ஒளித்தே கூறி வருகின்றனர். தி. மு. க. இந்தியை எதிர்ப்பதை அரசியல் சூழ்ச்சி என்றும், பொதுமக்கட்கு அதில் அக்கறை இல்லையென்றும் புனைந்து கூறு கின்றனர்

தமிழ் நாட்டில் உள்ள எத்தனைத் தமிழ் நெஞ்சங்களில் இந்தித்திணிப்புப்பற்றிக் கொதிப்பு ஏற்பட்டிருக்கின்றதென்பதை விரைவில் அரசினர் உணரும்வாய்ப்பு ஏற்படத்தான் போகிறது. மூடிமறைப்பதால் உணர்ச்சி வெள்ளம் பொங்கி யெழுவது புரை படாது. கரை புரண்டு ஓடத்தான் போகிறது. இந்தி மொழிக் காரர் அதனை விரும்பாத மக்களிடையே வலிந்து தகாத வழி களில் மேற்கூறியாங்குப் புகுத்தி வருவது மொழி வெறியா? தமிழர் தம் மொழி சீர்கெட்டுப் போகாது காக்கவேண்டுமென்று பாடுபடுவது மொழி வெறியா? அறிவுடையோர் ஆய்ந்து முடிவு கூறுக. பண்டு தொட்டு எம் செந்தமிழ் மொழி பிற மொழிக் கலப்பாலும், பிற மொழி ஆட்சியாலும் அடைந்துள்ள சீர் கேடுகள் போதும்; இந்திய நாடு விடுதலை பெற்ற இந்தக் காலத் திலாவது எம் மொழியைத் தூய்மை செய்து காக்க விரும்புவது மொழி வெறியாகுமா?

தம் மொழியைப் பரப்புவதன் பொருட்டு அயன் மொழிக்கு ஊறு விளைப்பதன்றோ 'மொழி வெறி' ஆகும்! அவ்வா றின்றி, தங்கள் மொழியைத் தக்க முறையில் ஏனைய புறம்பான மொழிகளின் கூட்டுறவின்றிக் காக்கமுயல்வது எங்ஙனம் மொழி வெறியாகும்? அங்ஙனம் தமிழர் காவாது வாளா விருப்பராயின் வருங்காலத் தமிழகத்தார் இற்றைத் தமிழர்களை மொழியை அழித்த மூடர்கள் என்று இழிமொழி கூறி ஏசுவர்; நாட்டுக்கும் மொழிக்கும் தீராப்பழியைத் தேடிவைத்த தீயோர் என்று வசை பாடித் தூற்றுவர். மொழி வெறி கூடாது என்று கூறி நம்மை அடக்கும் அரசியலாரும், அரசியல் தலைவர்களும் ஏதிலார்பற்றி யாதும் கூருதிருக்கும் கரவைத் தமிழர் உணர்வார்களா? மொழி காக்க முனைவார்களா?

— ❋ —

சிற்றுயிரி இயல்.

முகட்டுப் பூச்சி.

முகட்டுப் பூச்சி சுவர்களில் உள்ள சந்து பொந்துகளிலும், கட்டில், நாற்காலி முதலிய பலகைகளின் இடுக்குகளிலும், துணிகளின் தையல் மடிப்புகளிலும் ஒளிந்து கொண்டு தன் வாழ்க்கையை நடத்தினாலும், பெரும்பாலும் சுவரின் வழியாக ஏறிச் சென்று கூரையின் முகட்டிலேயே தங்கியிருப்பதால் இதற்கு முகட்டுப் பூச்சி என்று பெயர். இதுவே மூட்டைப் பூச்சி என்று திரித்து வழங்கப்படுகின்றது.

முகட்டுப் பூச்சிகள் பகலில் திரிவதில்லை. இரவிலேயே பெரும்பாலும் உலவுகின்றன. ஆனால் நல்ல பசியெடுப்பின் இவை நட்ட நடுப்பகலிலும் கூடப் புறப்பட்டு வெளிவந்து மாந்தரைக் கடிக்கும். சுவர்ப் புரைகளிலும், காரைப்பூச்சுகளின் அடியிலும், புத்தகத் தாள்களின் இடுக்குகளிலும் ஒளிந்துகொள்ளுதற்கு ஏற்றவாறு இவற்றின் உடல் தட்டையாக உள்ளது. மக்களோடு பல்லாயிரமாண்டுகளாகப் பழகி வருவதால், மாந்தனின் பழக்க வழக்கங்களை இப் பூச்சிகள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றன. கடித்தவுடன் மக்கள் தங்களைப் பிடித்துக்கொன்று விடக்கூடும் என்று எண்ணியே இவை உடனே ஓடி ஒளிந்து கொள்ளுகின்றன. முகட்டுப் பூச்சிகள் மக்களை மட்டும் கடிப்பதில்லை. இவ்வினத்தில் ஒரு வகையான பூச்சிகள் எலி, சுண்டெலி, வெளவால், பறவைகள் முதலியவற்றையும் கடித்து அவற்றின் குருதியை உறிஞ்சிக் குடிக்கும். இவை உலகெங்கும் பரவியிருக்கின்றன. இவை முகடுகளிலிருந்து பெரும்பாலும் சுவர் வழியாகவே இறங்கி வருகின்றன. அங்கிருந்து உதிர்வதில்லை. அவ்வாறு விழுகின்ற பூச்சிகள் தற்செயலாகவே விழுந்தவையாகும்.

முகட்டுப் பூச்சிகள் சிமிசிடே (Cimicidae) என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். இவற்றின் உடல் தட்டையாக, கருஞ்சிவப்பு நிறத்திலும், செம்பழுப்பு நிறத்திலும் கொள்ளுப் போலும் இருக்கும். இவற்றிற்குச் சிறகுகள் இல்லை. ஆனால் மிகப் பழங்காலத்தில் இவற்றின் முன்னினத்திற்குச் சிறகுகள் இருந்த அடையாளங்களாக இவற்றின் மார்பின் மேற்புறத்தில் இரண்டு சிறு நீட்சி உறுப்புகள் உள்ளன. வயிற்றின் பின்புறம் கூர்மையாக உள்ள முகட்டுப் பூச்சிகளே ஆண் பூச்சிகளாம். பெண் பூச்சிகளுக்கு பின்புறப்பகுதி சிறிது வட்ட வடிவமாக இருக்கும். இவற்றிற்கு உள்ளவை கூட்டுக் கண்களாகும்.

கண்கள் தலையின் இருபுறத்திலும் வெளிவந்து பிதுக்கமாக இருக்கும். இவற்றின் உடல் முழுதும் தடித்த குறு மயிர்கள் மூடியிருக்கும். இவற்றிற்கு ஆறு கால்களும், தலையில் இரண்டு உணர்வுக் கொம்புகளும் உள்ளன. வாய்க்குமேலே மூக்குப் பகுதியில் துதிக்கை போன்ற ஒரு தூம்பு உறுப்பு உண்டு. இவ் வுறுப்பு மாந்தனின் தோலைத் தொளைத்தற்கும், குருதியை உறிஞ்சுதற்கும் ஏற்ப உறுதியாக இருக்கும். இதன் கீழுதட்டுப் பகுதியில் நான்கு கூரான முள் போன்ற உறுப்புகள் உள்ளன. இவற்றின் இடையிலேயே உறிஞ்சு தூம்பு அமைந்திருக்கின்றது. உறிஞ்சு தூம்பு சிறிது நீளமாக இருக்கும். இதனினும் சிறிதாக வேறொரு தூம்பும் இதன் அருகிலேயே அமைந்திருக்கும். பெரிய தூம்பின் வழியாக முகட்டுப்பூச்சி, குருதியை உறிஞ்சும்பொழுது சிறிய தூம்பு வாயிலிருக்கும் உமிழ் நீரை வெளிப்படுத்துகின்றது. இவ் வுமிழ்நீர் மாந்தனின் உடலுக்குள் செலுத்தப்படும்.

முகட்டுப் பூச்சி தனக்கு வேண்டிய முழு அளவு குருதியையும் 4, 5 நிமையங்களில் உறிஞ்சிவிடும். அதன்பின் தட்டையாக இருந்த அதன் உடல் மணிபோல் உருண்டையாகிவிடும். ஒரு முறை குடித்த குருதி முழுதும் செரிக்க ஒரு கிழமை (ஏழு நாட்கள்) ஆகும். என்றாலும் முகட்டுப் பூச்சி அதுவரை வாளா விருப்பதில்லை. ஓரிரு நாட்களுக்குள் அது மீண்டும் குருதியை உறிஞ்ச வந்துவிடும்.

முகட்டுப்பூச்சியின் உடலின் கடைசிக் கண்டத்தில் இருந்து ஒரு வகை நாற்ற நீர் வெளிவந்து கொண்டே இருக்கும். எதிரிகள் இதன் அருகில் நெருங்காமலிருக்கும் பொருட்டும், தன்னை உண்ணாமல் இருக்கும் பொருட்டுமே இவ்வகை நீரை இது கசிய விடுகின்றது. ஆனால் இதுவே இதன் உயிர்க்கு ஏதம் விளைவிக்கின்றது. இப் பூச்சிகளின் இருப்பிடத்தை இதன் நாற்றமே காட்டிக் கொடுத்து விடுகின்றது. கரப்பான் பூச்சியும் சிவப்பெறும்புகளும் இப்பூச்சிகளைப் பிடித்துத் தின்னக்கூடிய எதிரிகளாகும். இருளில் வாழ்க்கை நடத்தும் இப் பூச்சிகள் தம் இனங்களைக் கண்டு அவற்றோடு பழகுதல் முதலான குமுக உறவாடல்களுக்கு இந்நாற்றம் ஒரு வகையில் உதவுகின்றது என்று சொல்லலாம்.

முகட்டுப் பூச்சி உணவே இல்லாமல் ஓர் ஆண்டு வரை உயிரோடிருக்கும். பல மாத காலத்திற்குப் பூட்டப் பெற்றுக் கிடக்கும் வீடுகளில்கூட இப்பூச்சிகள் சாகாமல் நிலைத்திருக்கும். முகட்டுப் பூச்சியால் கடிபட்டுக் குருதிக்கொடை செய்வதைவிட நமக்கு எந்தவகைக் கெடுதலும் ஏற்படுவதில்லை. எவ்வகையான நோயணுக்களையும் இது பரப்புவதில்லை ஆனால் உறங்குபவர்களின் குருதியைக் குடித்து உறிஞ்சித் தொல்லை கொடுப்பதில்

இதற்கிணையான பூச்சிகளே இல்லை. முகட்டுப் பூச்சி முட்டையிட்டு இனத்தைப் பெருக்கும். இதன் முட்டை மிகச் சிறியதாகவும் நீளமான உருண்டை வடிவத்துடனும், வெள்ளையாகவும் இருக்கும். முட்டையின் ஒரு முனை வளைந்து அதன் நுனி தலைக்கவிப்பு வைத்ததுபோல் இருக்கும். குஞ்சுகள் இந்தத் தலைக்கவிப்பைத் திறந்துகொண்டே வெளியில் வரும். முட்டைகள் தனித்தனியாகவோ குப்பல் குப்பலாகவோ இடப்பெறும். ஒவ்வொரு முகட்டுப் பூச்சியும் ஒவ்வொரு நாளைக்கும் 3, 4 ஆக ஏறத்தாழ 200 முட்டைகள் வரை இடும். முட்டைகள் சுற்றியுள்ள வெப்பத்திற்கேற்ப நான்கிலிருந்து எட்டு நாட்களுக்குள் பொரிக்கும். பொரித்த குஞ்சு ஏறக்குறைய தாயின் வடிவத்திலேயே இருக்கும். குஞ்சுகள் மிகவும் சிறியவையாகவும் வெளுப்பாகவும் இருக்கும். ஆனால் ஒரு முறை குருதியை உறிஞ்சிக் குடிக்கத் தொடங்கியவுடன் மிக விரைவில் நல்ல வளர்ச்சி எய்தும். இளம் பூச்சி 5, 6 நாட்களுக்கு ஒரு முறையாக 5 முறை தோலுரிக்கும் முகட்டுப் பூச்சியின் குஞ்சு முழு வளர்ச்சியடைய 6, 7 கிழமைகள் அல்லது 45-50 நாட்கள் பிடிக்கும் ஓராண்டிற்குள் ஐந்து தலைமுறைகள் இவ்வினத்தில் தோன்றுகின்றன.

முகட்டுப் பூச்சிகள் தோன்றிவிடின் அவை அற்றுப்போதல் என்பது அருமையே! பொருள்களைத் தூய்மையாகவும் அழுக்குப் படியாமலும் வைத்திருத்தலாலும், அவ்வப்பொழுது வீட்டிற்கு மருந்து கலந்த சுண்ணம்பால் வெள்ளையடிப்பதாலும் இப்பூச்சியை அறவே ஒழிக்கலாம். *

அடுத்த இதழிலிருந்து......!

ஆங்கில நாடக இலக்கியப் பேராசிரியரும்,
குமுகாய நுண்ணோக்குப் புலவரும் ஆகிய

பெர்னார்டு சா

அவர்களின்

Arms and The Man

என்னும் நகைநலம் பொதிந்த கருத்து நாடகம்
முழுக்க முழுக்க இனிக்கும் தனித்தமிழ் நடையில்

"போர் மறவனும் காதலும்"

என்ற தலைப்பில் மொழிபெயர்த்துத் தரப்பெறுகின்றது.
தென்மொழி அன்பர்கள் தவறாது சுவைப்பார்களாக.

அரசியல் சாராத

நடுநிலையாளர்தம் இந்தி எதிர்ப்பின் உரிமைக் குரல்.

— * —

செந்தமிழ்ப் புலவர்களே, தமிழாசிரியர்களே, தமிழன்பர்களே, தமிழ்த் தாய்மாரே, மாணவ மாணவியர்களே, தண்டமிழ் நாட்டின்கண் வதிந்து இந்தித் திணிப்பை விரும்பாத பிற திராவிட மொழியாளரே!

இந்திய அரசினரின் இந்தி மொழிக் கொள்கையையும், அக் கொள்கையின் அடிப்படையில் நடுவணரசு செய்து வரும் நேரடி மறைமுக, வலிந்த, இரக்கமற்ற இந்தித்திணிப்பையும், அவ்விந்தித் திணிப்பால் தென்னாட்டுப் பகுதிகளில், குறிப்பாகத் தமிழகத்தில் தமிழர்க்கும் பிற திராவிட மொழியாளர்க்கும் அவர்தம் மொழி, பண்பாடு இவற்றினுக்கு இன்று சிறிது சிறிதாக ஏற்பட்டு வருகின்ற குந்தகங்களையும், சொல்லொணாப் பெருங் கேடுகளையும் இனி நாளை ஏற்படப் போகின்ற மொழியும் செயலுமற்ற அடிமை வாழ்வினையும், அவ்வப்பொழுது உணர்ந்து உள்ளம் புழுங்கி வந்திருப்பீர்கள். வடநாட்டாரின் இம் மொழியடிமை வன்செயலுக்கு நம் மாநில அமைச்சர்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வகையாகத் துணை நிற்கும் தரகர்களாய் இருந்து இந்திய ஒருமைப்பாடு என்னும் பெயரால் நம் மொழிக்கும் பண்பாட்டுக்கும் கேடுகள் செய்து கொண்டு எட்டப்பர்களாய் இருந்து வருவதையும் அறிந்திருப்பீர்கள்.

இக் கூறவொண்ணா அடிமைச் செயலுக்கு மனம் இசையாமல் கிளர்ந்தெழுந்து தமிழக உரிமைக்குரலை முழக்கிய அரசியல் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அதன் பொறுப்பாளவர்களையும் உறுப்பானவர்களையும் அரசியல் கிளர்ச்சி செய்து இந்திய ஒருமைப்பாட்டுக்குத் தீங்கு செய்வோர் என்று குற்றஞ் சாட்டிக் கடுங்காவல் தண்டம் கொடுத்துச் சிறையில் இட்டு வருவதையும் நீங்கள் தெரிந்திருப்பீர்கள். இவ்வளவிருந்தும், தென்னாட்டுப் பேராயக் கட்சிப் பொறுப்பில் உள்ளவர்களும், நம் முதல்

அமைச்சரும் வடநாடு போகும்பொழுதெல்லாம், தில்லியமைச்சர் தம் உச்சியைக் குளிர்விப்பான் வேண்டியும், தம் முதுகுகளில் அவ்வமைச்சர்களின் கோல்பிடிக்கும் கைகள் தடவிக்கொடுக்கும் என்று எதிர்பார்த்தும், தென்னகத்தில் யாரும் இந்தியை எதிர்க்க வில்லை, அரசியல் நோக்கங்களுக்காகவே ஒரு சிலர் இந்தியை எதிர்ப்பதாகக் குழப்பம் விளைவிக்கின்றனர் என்றும், அவர்களும் நாளடைவில் அடக்கப்படுவார்கள் என்றும், தாங்கள் இதுபற்றிக் கவலை கொள்ள வேண்டாவென்றும் தமக்கே உரிய குழைவு நெளிவுகளோடு எடுத்துக்கூறிப் பாராட்டுகளையும் பெறுகின்றனர் என்பதும் மறைவாக நடக்கின்ற செய்திகள் அல்ல. இத்தகைய மானங்கெட்ட பிழைப்பைவிட ஒரு முழக் கயிறே அவர்களுக்கு உயர்வைத் தரும் என்று அவர்களும் அறியார்கள்.

கோழைகளுக்கு உரிமை வாழ்வை விட அடிமை வாழ்வே இனித்துக் கிடப்பதாகும். இத்தகைய இனிப்பை நாக்குத்தினவு அடங்க அடங்க உண்ணுகின்ற அவ்வடிமை நோக்கினரால் நமக்கு என்றும் உரிமை கிடைக்கப் போவதில்லை. பெரிய பெரிய திட்டங்களால் இந்திய நாட்டைத் துறக்க (சுவர்க்க) உலகமாக்கி விடப்போவதாக வான்முட்ட முழக்கிவரும் இம் முழங்கால் வீங்கி களால் நாம் என்றும் அடிமைவாழ்வே வாழவேண்டியிருக்கும். எல்லா உரிமைக்கும் அடிப்படையாக உள்ள மொழி உரிமைக்கே கேடு வருமதென்னின், நாம் இனி வாளாவிருந்து பயனில்லை.

ஆகலின், தென்னகத்தாரின் இந்தி எதிர்ப்புக்குரல் அரசியல் சார்ந்து வருவதாகமட்டும் இல்லை என்பதையும், அக் குரல் அரசியல் சாராத நடுநிலைமையாளர்தம் உரிமை முழக்கமும் ஆகும் என்பதையும், நாம் உடனடியாக அரசினர்க்குந் தெரிவித்தாகல் வேண்டும். நாங்கள் எவ்வாற்றானும் இந்தியை விரும்பவில்லை என்று நாம் எழுப்பும் இந்தத் தன்மான இடிக்குரல் நம் கருத்து களைப் புறக்கணித்துக் கிடக்கும் அமைச்சர்தம் செவிப்பறைகளை ஊடுருவிச்சென்று, அவர்தம் நெஞ்சங்களில் நம்மைப்பற்றிய நினை வலைகளை எழுப்பல் வேண்டும்.

ஆகலின், ஆங்காங்குள்ள தமிழ்க் கழகங்களும் மன்றங் களும், தமிழ்ப் புலவர்களும் ஆசிரியர்களும், தமிழ் நலம் கருதும் அன்பர்களும், தாய்மார்களும், தமிழ் நலம் காக்கத் துடிக்கும் மாணவ மாணவிகளும், தமிழ் நாட்டில் எவ்வகையானும் இந்தி

திணிக்கப்படுவதை விரும்பாத பிற மொழியாளர்களுமாகச் சேர்ந்து, கீழ்க்கண்ட அறிக்கையைப் படியெடுத்து அதன்கீழ் எல்லாரும் கையொப்பங்களிட்டு இந்தியத் தலைமை அமைச்சருக்கும், முதல் அமைச்சர் பக்தவத்சலத்திற்கும், பதிவஞ்சல்களில் ஆகஃச்டு மாதம் 14ஆம் நாள் கிடைக்கும்படியாக விடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றோம். அவற்றின் படியொன்றைத் தென்மொழிக்கும் தவறாமல் விடுக்க வேண்டுகின்றோம். இந் நல்வினையை ஆங்காங்குள்ள தமிழ் மன்றங்களும் தமிழ்க் கழகங்களும் தமிழன்பர்களும் மாணவர்களும் தப்பாமற் செய்தல், அவர்தம் மொழிக்கும் நாட்டுக்கும் செய்யும் தலையாய கடமையாகும் என்று கருத வேண்டுகின்றோம். சற்றே கண்ணயர்ந்தாலும் இந்தி எனும் வேண்டாத மொழி நம் மொழியையும் நம்மையும் மீளா அடிமைப் படுத்துவது பல்லாற்றானும் உறுதியாகையால் ஒருவர் தவறாமல் எல்லாருடைய கையொப்பத்தையும் திரட்டி நம் எதிர்ப்புக் குரலின் வலிமையை அவர்கட்கு உணர்த்துமாறு வேண்டிக் கொள்கின்றோம். அறிக்கையைத் தமிழிலும் அதன்கீழ் ஆங்கிலத்திலும் எழுதி விடுக்க வேண்டி இரண்டினும் வெளியிட்டுள்ளோம்.

உரிமைக் குரல் எழுப்பாத எந்த இனமும், தன்னை என்றும் காத்துக் கொண்டதில்லை.

அன்பன்,

பெருஞ்சித்திரன்.

நினைவிருக்கட்டும்!

○ **எழுத வேண்டியது: தமிழிலும், ஆங்கிலத்திலும்.**

○ **எடுக்க வேண்டிய படிகள் (Copies): மூன்று.**

○ **விடுக்கவேண்டிய முகவரி:**

1. **தலைமையமைச்சர், பாராளுமன்றம், புதுதில்லி.**
2. **முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம், அமைச்சரகம், சென்னை.**
3. **தென்மொழி, கடலூர்-2.**

○ **கிடைக்க வேண்டிய நாள்: ஆகஃச்டு 14.**

அமைச்சர்களுக்கு விடுக்கும் போலிகைப் படி.

அரசியல் சாராத நடுநிலையாளர்தம் இந்தி எதிர்ப்பின் உரிமைக்குரல்!

—*—

இந்திய அரசின் தலைமைப் பொறுப்பாளரே!

வணக்கம். நாங்கள் எங்கள் விருப்பமின்றியே உங்கள் ஆளுகைக்குட்பட்ட தென்னகம் வாழ் மக்கள். அத்துடன் நாங்கள் எவ்வகையான அரசியல் கொள்கையும் சாராத நடுநிலையாளர்கள்; எங்கள் மொழியையும், பண்பாட்டையும் எங்கள் உயிரினும்மேலாக மதிப்பவர்கள் மொழிவழியாகவும் அரசியல் வழியாகவும் வருகின்ற அடிமை வாழ்வை வெறுப்பவர்கள்.

அண்மையில் தங்களால் கொண்டு வரப்பெற்ற இந்தி மொழித் திணிப்பு என்னும் வலிந்த, விடாப்பிடியான, பிறர் நலங் கருதாத, இரக்கமற்ற ஒரு கொள்கையால், இன்றைக்கும், இனி என்றென்றைக்கும் ஊறு செய்யப் பட்டவர்கள். எங்கள் நல்வாழ்வும், உரிமை வாழ்வும் நீங்கள் திணிக்கின்ற இந்த இந்தி மொழியால் கெடும் என்று நாங்கள் திட்டமாய் நம்புகின்றோம். இந்திய ஒருமைப் பாட்டுக்கு இச்செயல் உகந்ததும் அன்று என்று உறுதி யாகக் கூறுகின்றோம் இவ்விந்தித் திணிப்பால் நீங்கள் எதிர்பார்க்கின்ற நன்மை கடுகத்துணையும் ஏற்படப் போவதில்லை.

ஆதலால் எங்கள் ஒரு முகமான குரலை, எங்களுக்குள்ள உரிமையின் பெயரால், உங்களிடத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். எங்கள் விருப்பமின்றியே நீங்கள் எங்கள்மேல் வலிந்து திணிக்கின்ற இந்திமொழியை நாங்கள் துளியும் விரும்பவில்லை என்று உங்களுக்கு இதன் வழி உணர்த்திக் கொள்ளுகின்றோம். **இவ் வேண்டுகோளைப் புறக்கணித்து மேன்மேலும் அவ்விந்தி மொழி எங்கள் மேல் திணிக்கப்பட்டு, எங்கள் உரிமைக்குக் கேடு செய்யுமானால், அதனால் எங்கள் உள்ளங்களில்**

கிளர்ந்துகொண்டிருக்கின்ற வெறுப்புக்கும், மறுப்புக்கும், எதிர்ப்புக்கும் இவ்வரசு தலைகொடுக்க வேண்டியிருக்கும் என்றும் முன்னடியாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

இதற்காவன செய்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இப்படிக்கு,

உங்கள் அரசியல் திறமையிலும்,
முன்னறிவுத் திறத்திலும் நம்பிக்கையுள்ள

தென்னகக் குடிமக்கள்.

ஆங்கிலப் பெயர்ப்பு:

Voice raised against Hindi from the South by Non-political people.

—*—

To The Head of Government of India,

We beg to tell you that we are people from the South who are unwillingly subjected to your domination. We are not party-people professing particular doctrines of any political party. Nor are we sympathisers of any such political parties. We are the general public. We are proud of our Language and Culture, and we value them more than our lives. We do not want to lead the life of slaves, being subjected to linguistic and political domination.

We are a great deal harmed, and will be harmed still more, by the recent Hindi Policy of the Government, which we look upon as an arbitrary, obstinate, inconsiderate and merciless one. We firmly believe that Hindi is

dangerous to our welfare and freedom. We would, with conviction, say that this policy of force is not good for the National and Emotional Integration of which you so highly speak. We are certain that you can never achieve what you aim at by forcing Hindi on us directly or indirectly against our wishes.

Hence, we from the South join together and, in the name of our political rights, raise our unanimous voice against Hindi. We want to impress on you most deeply that we in the South have no inclination at all for Hindi which you so arbitrarily and despotically compel us to learn, and that you are incurring our bitterness and displeasure on this account. If you ignore this earnest and genuine request of ours and go on with your scheme, and try to deprive us of our most cherished freedom, we warn you that your leadership will create unnecessary hatred in us, and will soon have to meet with our unanimous remonstrance and resistance Hope you will do what is needed,

Yours truly,

People of the South who believe in
your political wisdom and forethought.

உறுப்பினர்கள் கவனிக்க...

'தென்மொழி' இதழ் அனுப்பப்பெறும் சுற்றுத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களே அவரவர் உறுப்பினர் எண்கள். அவற்றுள் பு.உ.எண் 362 முதல் 381 வரை உள்ள அன்பர் அனைவர்க்கும் சுவடி 2-ஓலை 5 (ஆனி இதழ்) முடிய உறுப்பினர் கட்டணம் முடிவடைகின்றது. தொடர்ந்து தென்மொழிப் பயன் துய்க்க விரும்புவார் இம்மாதத்திற்குள் கட்டணத்தை அனுப்பிப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

– அமைச்சர், தென்மொழி.

உரிமை முழக்கம்.

— கவிமுத்தம் —

(கட்டளைக் கலித்துறை)

மானெனத் தேனென வண்ண மயிலென மெல்லணையில்
நானுனைக் கொஞ்சிட வின்பம் பயந்திடு நற்றமிழைக்
கானுறை இந்தியால் விந்திய மாமலைக் கங்குறைவர்
மானம் குலைத்திடல் கண்டினி யாற்றேன் மலர்க்குழலே!

வெய்யோன் குளிரினும், விண்மதி காய்ந்தும் வியப்பதிலோம்
பொய்யாற் புரந்திடு தில்லியோ ரிந்தி புகுத்திடுதல்
அய்யோ வதுவே வியப்பாம்! அறிவிலார் புன்மைவினை!
மெய்யே இவரினி வீழ்ச்சியைக் காணுவர் மென்குழலே!

ஆய உடல்பொய் அழிவது மெய்யென் றறிந்தனமே!
மேயநல் மெய்ப்புகழ் பெற்றிட இன்றே விழைந்தனமே!
வாயினைப் பூட்டி வுரிமை பறிக்கும் வடபுலத்தார்
தீயெனும் இந்தி புறமிடச் செய்வேன் செறிகுழலே!

கொல்லுவன் கூற்றென நண்ணிடு மிந்தியார் கொட்டமதை
நல்ல தமிழராய்க் கூடி யடக்கிடார்; நம்மிடையே
புல்லுரு விக்குழு தெவ்வரை நட்பெனப் போற்றிடுதே!
ஒல்லை யவரெலாம் மாய்வர் மலரணி வொண்குழலே!

மாட்டுதல் செய்வோரஞ் சிறையினி லிந்தி மறுப்பவரை;
சூட்டெஃகம் வைத்தே சுடுவேங்கொ லென்பர்; சுரணையிலார்!
ஓட்டுதல் செய்வே மெனச்சூ ளுரைத்தே வுடனெழுவேம்
காட்டணங்(கு) இந்தியை வேட்பவர்க் கொல்லுவேங்
கார்குழலே!

உள்நோக்கிச் செல்..!

விறகுவெட்டி ஒருவன் காட்டினின்று விறகு சுமந்து வருவதைக் கண்ட துறவி ஒருவர் ''உள்நோக்கிச் செல்'' என்று அவனை நோக்கி மொழிந்துவிட்டுத் தம் வழியே சென்றார். மறுநாள் விறகுவெட்டி காட்டில் மேலும் உள்நோக்கிச் சென்றான். அவனுக்கு நல்ல அகிற்கட்டைகள் கிடைத்தன. பின்பொருநாள் மேலும் உள்ளே சென்றான். செப்புக் கட்டிகள் கிடக்கக் கண்டு அவற்றை எடுத்துக் கொண்டான். மேலும் உள்நோக்கிச் சென்றான். வெள்ளிக் கட்டிகள் கிடைத்தன. சில நாட்களின் பின் மேலும் உள்நோக்கிச் சென்றான், பொன்னும் மணியும் கிடைத்தன. மாந்தன் தன் மனத்தினுள் உள்நோக்கிச் செல்லச் செல்ல அரிய பெரும் பொருட்களைக் கண்டடைவான்.

— இராமகிருட்டிணர்.

மொழி நுட்பம்.

ச. அகத்திலிங்கம், பி. ஏ. (ஆனர்சு).
தமிழ்த்துறை, அரசினர் கலைக் கல்லூரி, சென்னை.

—:—

தோற்றுவாய்: உலகில் தோன்றிய எல்லா உயிர்களிடத்தும்ஒரு பொதுத்தன்மையைக் காணலாம். கொடிய விலங்குகள் தம் குட்டிகளிடத்தும் குட்டிகள் தம் தாய் விலங்குகளிடத்தும் ஒரு வகைப் பற்றுடையனவாய் இருக்கின்றன. இப் பற்றினை விலங்கினத்தோடு தொடர்புடைய மக்களிடத்தும் காண்கிறோம். விலங்குகள் தம்குட்டிகளைப்பிரிந்து வேற்றிடங்களில்வாழும்நிலை ஏற்படும்பொழுது இப் பற்றுக் குறைகிறது; மறைந்தே விடுகிறது. ஆனால் மக்களினத்தில் மகனோ மகளோ தாயையோ தந்தையையோ பிரிந்து வேற்றுநாட்டில் வாழும் நிலை ஏற்பட்டால் இப் பற்றுக்குறைவதில்லை. மாறாக வளர்கிறது; தூய்மையுறுகிறது; சிறப்படைகிறது. பிரிந்தவர் கூடத் துடிக்கின்றனர். இப்பற்றினை அன்பு, காதல் என்றெல்லாம் போற்றுகின்றனர். மக்கள் எங்கு வாழினும் ஒருவரோடு ஒருவர் கலந்து உறவாடி வாழ்கின்றனர். மாக்களோடு ஒன்றாகத் தோன்றினும் அவற்றினின்றும் வேறுபட்டு வாழ்கின்றனர். அதனால் மக்களைக் **''கலந்துறை மாக்கள்''** என்று போற்றினர். மக்களுக்கு இத்தகைய சிறப்பினை அளிக்கும் அன்பினை இறைப் பண்புடையதாக மக்கள் கருதுகின்றனர். இவ்வன்பை வளர்ப்பது மொழி.

தன்மை: உள்ளத் தொடர்புடையது மொழி. அதனால் அது மக்கள் உள்ளங்களை எளிதில் தொடும் ஆற்றலைப் பெற்றுள்ளது. அன்பை வளர்க்கிறது; அறத்தை வளர்க்கிறது; மறத்தையும் வளர்க்கிறது. மறத்திற்கும் (தீமைக்கும்) துணையாகிறது. மொழி அன்பின் நுட்பத்தைக் கொண்டுள்ளது என்ற உண்மையை,

> ''அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை''

என்ற அருங் குறளின் கருத்து நினைப்பூட்டுகிறது. மக்கள் ஒற்றுமையை ஏற்படுத்துவது மொழி உரிமை வேட்கையை ஊட்டுவது மொழி. அடிமை நிலையை மாற்ற எழச் செய்வது மொழி. ஒற்றுமையைக் குலைத்து அடிமை வாழ்வை ஏற்படுத்துவதும் மொழியே. இது வரலாறு கூறும் உண்மை. வில்லினும் சொல் ஆற்றலுடையது; வேலினும் (எழுது) கோல் வலிமையுடையது. மொழியினது நுண்ணிய இயல்பை இவ்வுண்மை புலப்படுத்துகிறதன்றோ. இத்தகைய மொழியினது தோற்றம்,

வளர்ச்சி, பயன், அமைப்பு, முதலியவற்றை ஆராய்ந்து பார்ப்பது இன்றியமையாததாகும்.

வாழ்வு: உலகில் தோன்றிய மொழிகள் பல. அவற்றுள் பேச்சு வழக்கில் நின்றவை சில. பேச்சு வழக்கோடு எழுத்து வடிவம் (வரிவடிவம்) பெற்றவை சில. இலக்கிய வளம் பெற்றவை சில. பேச்சு வடிவமும் வரி வடிவமும் பெற்று இலக்கிய வளத்தில் சிறந்து செம்மொழியாக வாழ்ந்து, பல கிளை மொழிகளைத் தோற்றுவித்துப் பின்பு பேச்சுவழக்கில் ஒழிந்தவை சில. பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் நின்று இலக்கிய வளம் பெற்று, இன்றும் என்றும் சீரிளமை மாருச் செம்மொழியாக வாழும் மொழி சில. அத்தகைய மொழிகளுள் இந்திய நாட்டுத் தென்மொழியாகிய நம் தமிழ் மொழி ஒன்ருகும். இது மொழி அமைப்பின் நுட்பமாகும்.

பிறப்பு: மாந்தன் தன் மனத்தில் தோன்றும் கருத்துகளையும் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளையும் பிறர்க்குத் தெரிவிக்க விழைந்தான். முகக் குறிப்பின் வழியும், உடல் உறுப்புகளை அசைப்பதன் (நடிப்பு, மெய்ப்பாடு) வழியும், ஒலிக்குறிப்பின் வழியும் தெரிவித்தான். நாகரிகம் வளர வளரக் கருத்துகளும் எண்ணங்களும் குவிந்தன. கருத்து நுட்பமும் உணர்வு நுட்பமும் பெருகின. இவற்றைப் பிறர்க்கு வெளிப்படுத்தக் குறிப்பு மொழி (முகக் குறிப்பு, செய்கைகள்) குறையுடையதெனக் கண்டான். அதன் விளைவாக மொழி பிறந்தது. மொழியின் பிறப்பையும் தோற்றத்தையும் பற்றி மொழியியல் வல்லுநர்கள் பல்வேறு கருத்துகளை வெளியிட்டுள்ளனர். அவை அனைத்தும் சுவையுடையனவாய் இருந்தபொழுதிலும் முடிந்த உண்மையை உணர்த்தத் தவறி விடுகின்றன. காக்கை காகா என்று ஒலிப்பதைக் கேட்டு மாந்தனும் அதுபோல் ஒலித்தான். நாளடைவில் ''கா கா'' என்று அது பெயர் பெற்றது. மியா மியா என்ற ஒலியைக்கேட்டு அதுபோல் ஒலிக்கப் பழகிய மாந்தன் பூனைக்கு ''மியா'' என்ற பெயர் வைத்தான். இவை போன்றவை மொழியியல் வல்லுநர்களும் கற்பனையில் ஈடுபட முடியும் என்பதனை உணர்த்துகின்றனவே யல்லால் உண்மை காணத் தவறுகின்றன. பித்தகோரசு, பிளாட்டோபோன்ற அறிஞர்கள் மாந்தனுடைய தேவைக்கேற்ப மொழி இயற்கையாகப் பிறந்ததென்றனர். அரிசுடாட்டில் போன்றவர்கள் பலர் ஏற்றுக்கொண்ட, ஒப்புக்கொண்ட முறையில் மொழி பிறந்ததென்றனர். ஆயினும் மொழியின் பிறப்பு வியப்பாக, அறிய இயலாத உண்மையாகவே இருக்கின்றது. எனவேதான் மொழியும் இறைவனல் படைக்கப்பட்ட தென்றனர் சிலர் மொழியின் தோற்றம் காணமுடியாத் தொன்மை வாய்ந்துள்ளது.

தமிழ்மொழி: பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கி வாழும் மொழி நம் தமிழ் மொழி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய இலக்கியச் செல்வத்தையும் அதற்கு முன்பே தோன்றிய ஒல்காப்புகழ்த் தொல்காப்பியம் என்னும் இலக்கணத்தையும் பெற்றிருப்பினும் இன்றும் பல புதிய இலக்கியங்களையும் படைத்து வாழ்கின்றது. இதற்குரிய காரணம் இம்மொழியின் அமைப்பே யாகும். எனவே மொழியின் அமைப்பை ஒரு சிறிது கவனிப்போம்.

எழுத்து: மொழி சொற்றொடர்களால் அமைகிறது. சொல் எழுத்துகளால் அமைகிறது. அணுத்திறள் ஒலியே எழுத்து. ஆயினும் கடல் ஒலி, அருவியின் ஓசை, விலங்கின் குரல், தும்மல் ஒலி முதலியவை எழுத்துகள் ஆகா. எழுத்துகள் தனித்து நின்றோ, தொடர்ந்தோ சொற்களாகும். ''மொழி முதற் காரணம் அணுத்திறள் ஒலி எழுத்து'' என்றார் நன்னூல் ஆசிரியராகிய பவணந்திமுனிவரும். ஒவ்வோர் எழுத்தும் தனக்கென ஓர் ஒலி வடிவத்தினையும் வரி வடிவத்தினையும் பெற்றுள்ளது. ''எழுத்தென்பது யாதனை எனின் கட்புலனாகா உருவுங் கட்புலனாகிய வடிவமுடைத்தாகி வேறு வேறு வகுத்துக் கொண்டு தன்னையே உணர்த்தியும் சொற்கு இயைந்தும் நிற்கும் ஓசையாம் .... .. உருவென்பது ஈண்டு மன்னுணர்வாய் நிற்குங் கருத்துப் பொருளை '' என்று நச்சினார்க்கினியர் தொல்காப்பிய எழுத்ததிகார உரையில் குறிப்பிடுகின்றார்.

சொல்: எழுத்தினால் ஆக்கப்படுவது சொல். ஆசிரியர் நச்சினார்க்கினியர் ''சொல் என்றது, எழுத்தினால் ஆக்கப்பட்டு, இருதிணைப் பொருள் தன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசையை'' என்று தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை எழுதினார். அச்சொல், எழுத்துகள் தனித்து நின்றோ தொடர்ந்து நின்றோ தம்மை உணர்த்தாமல் பிற பொருளைச் சுட்டும்பொழுது அமைகின்றது. ''ஆ'' என்ற எழுத்து அவ்வெழுத்தையே உணர்த்தினால் எழுத்தெனப் பெயர் பெறும். அன்றி ''மாடு'' என்னும் பொருளைத் தரின் சொல்லெனப்படும். ''தன்னை உணர நின்றவழி எழுத்து எனப்படும்; தான் இடைநின்று பொருள் உணர்த்திய வழிச்சொல் எனப்படும்.'' என்றார் இளம்பூரணரும். ''ஆல்'' என இரண்டெழுத்துகள் தொடர்ந்து ஆலமரத்தைச் சுட்டும்பொழுது சொல்லாகும். ''ஆ'' ''ல்'' என்ற எழுத்துகள் மரத்தைச் சுட்டாமல் தம்மையே உணர்த்தினால் எழுத்துகள் எனப்படும். ''மிறிஞி'' என்பதில் மூன்றெழுத்துகள் தொடர்ந்து நின்றும் எப்பொருளும் தராமையின் சொல்லாகா. எழுத்துகளின் கூட்டே ஆகும். எழுத்துகள் தொடர்ந்து சொல்லாகும் பொழுது அவை ஒன்றோடு ஒன்று கலப்பதில்லை. நச்சினார்க்கினியர் ''ஒரு சொற் கூறுமிடத்து ஓரெழுத்துப் போக ஓரெழுத்துக்

கூறுவதல்லது ஒரு சொல்லாக முடியும் எழுத்தெல்லாம் சேரக் கூறல் ஆகாமையின், அவ்வெழுத்துகள் கூறிய அடைவே போயினவேனும், கேட்டோர் கருத்தின் கண் ஒரு தொடராய் நிலைபெற்று நின்று பொருளை அறிவுறுத்தல்'' என்று கூறும் உண்மையாலும், ஆசிரியர் சிவ ஞான முனிவர் ''அரிசனம் (மஞ்சள்) முதலியவற்ருல் சமைந்த சுண்ணம் போலாது மலரால் சமைந்த மாலைபோல்'' என்று கூறிய உவமையாலும் இவ்வுண்மை புலப்படுகிறது. சொல்லுக்கு, கிளவி, மொழி என்ற சொற்களும் உண்டு. இவை ஓசை, அரவம், இசை முதலிய வற்றினின்றும் வேறுபட்டவை.

தொடர்: சொற்கள் தனித்து நின்ரே தொடர்ந்து நின்ரே பொருளை உணர்த்தும். அவற்றை இலக்கண ஆசிரியர் தனிமொழி என்றும் தொடர் மொழி என்றும் கூறுவர். பெயர்ச் சொல், வினைச்சொல், உரிச் சொல், இடைச்சொல் ஆகியவை தனி மொழிகள். தொடர் மொழி, தொகைநிலைத் தொடராகவும், தொகாநிலைத் தொடராகவும் அமைகின்றது. இவையே மொழி யின் உறுப்புகள். மொழியின் கதையும், அமைப்பும் வியப் பான ஒன்று. இதை ஆராய்ந்தால் பலநுட்பங்களைக் காணலாம்.

(தொடரும்).

தெரிந்து கொள்ளுங்கள்!

குறும்பூழ் (பிலக்காடை) தன் இளங் குஞ்சுகளைப் பகையிட மிருந்து காக்க ஒரு விரகினைக் கையாள்கின்றது. குஞ்சுகள் பின் தொடர மேய்ந்து கொண்டிருக்கும் இப்புள், மாந்தனையோ அல்லது விலங்கினையோ கண்டுவிட்டால் உடனே, ஒற்றைச் சிறகினை ஒடிந்து போனதுபோல் ஆக்கிக்கொண்டு, பறக்கவும் நடக்கவும் முடியாததுபோல் நடிக்கின்றது. இதனைக் கண்ட குஞ்சுகள் உள்ளுணர்வால் ஏதோ ஏதம் வரவிருப்பதனை உணர்ந்து ஓடி, ஒளிந்து கொள்கின்றன. புதர்களில் பதுங்கி அசைவற்றுக் கிடக்கும் இவை எளிதில் கண்கட்குப் புலனுவதில்லை. இதற் கிடையில் தாய்ப்புள் தன் எதிரியின் கண் எதிரிலேயே சென்று கீழே விழுந்து விடுவதுபோல் தள்ளாடுகின்றது. தள்ளாடும் பறவையை எளிதில் பிடித்து விடலாம் என்ற எண்ணத்துடன், பறவையைப் பின் தொடர்கின்றது அதன் பகை. பறவையோ, மெல்ல மெல்லப் போக்குக்காட்டிப் பகையை நெடுந் தொலைவு அலைத்து இழுத்துச் சென்று விடுகின்றது. இனி, குஞ்சுகள் இருக்குமிடத்தைப் பகை அணுகாது என்று தெரிந்தவுடன், விரைந்து, கண்ணுக் கெட்டாமற் பறந்து, தன் கூட்டினை அடை கின்றது.

செய்தி

புதுவை முதலமைச்சர் தலைமையில்

புரட்சிப் பாவலர் நினைவுக் குழு.

— * —

புதுவை மாநில மக்களுக்குப் புகழைக் குவித்துத் தமிழ் மக்களின் தனிப்பெரும் பாவலராய்த் திகழ்ந்த பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நினைவு என்றென்றும் நிலைத்து நின்று வருங்கால மக்களுக்கு இலக்கியப் பெருநிலையமாய் விளங்கக் கூடியவாறு பாவேந்தருக்கு ஏற்றதொரு நினைவுப் படிமம் அமைக்கவும், அவர்தம் நூல்களை மக்கள் பதிப்பாக வெளியிடவும், பாவலரின் குடும்பத்தினருக்கு நல்வாழ்வு அளிக்கவும், கடனில் மூழ்கும் அவரின் இல்லத்தை மீட்டுத் தமிழ் மக்களின் பொதுச் சொத்தாக்கவும் பெரும் பொருள் திரட்டக் கீழ்க்கண்ட குழுவைப் புதுவை மாநில முதலமைச்சர் திரு. குபேர் அவர்கள் அமைத்துள்ளார்.

முதலமைச்சரின் தலைமையில்,

அமைச்சர்.	**திரு.**	**வி. வேங்கடசுப்பு அவர்கள்.**
,,	,,	**எம் கே. சீவரத்தினம்.**
வித்துவான்	,,	**கு. சிவப்பிரகாசன் எம். ஏ; எம். பி.**
	,,	**என் சேதுராமன், துணை நகராட்சித் தலைவர்.**
	,,	**ஏ. எசு. கந்தசாமி.**
	,,	**எச். எம். காசீம், முன்னாள் நகராட்சித் தலைவர்.**
	,,	**ந. கோவிந்தசாமி, வணிகர்.**
	,,	**ப. கனகலிங்கம், வணிகர்.**
	,,	**அ. சேனுபதி, வணிகர்.**
	,,	**துரை. முனுசாமி**

ஆகியவர்கள் இடம் பெறுகின்றனர்.

தமிழ் மக்கள்-குறிப்பாகப் புதுவை மாநிலமக்கள் தங்களின் தலையாய கடமையாகப் பாவேந்தருக்கு அனுப்பும் அன்பளிப்புகளை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

திரு. அ. சேனுபதி, அவர்கள்,
பொருளாளர், பாரதிதாசன் நினைவுக் குழு,
80, காந்திச் சாலை, புதுச்சேரி.

ஆங்கில மொழியாக்கம்

The Full Moon.

BARATHIDASAN.

The full moon rose; the full moon rose
    Lovely in the welkin vast!
Like a novel thought that flows
    'Gainst the pessimistic past,
Like a sorrow-stricken face
    Beaming happily so fast,
A water-lily blooming gay,
    A silver plate on heaven cast.
        The full moon rose; the full moon rose!

Driving darkness of the dusk,
    Like sightless eye regaining sight,
The moon, the skiey lantern shines;
    Let us sing and make delight!
The moonlight-spangled shades of trees
    Like a peacock's plumage bright;
Streets and lanes in moonlight bathed
    Cool and bright all through the night.
        The full moon rose; the full moon rose.

ஆங்கில ஆக்கம்: ம. இலெ. தங்கப்பா.

நிலா.

பாரதிதாசன்.

முழுமைநிலா! அழகுநிலா!
முளைத்தது விண் மேலே-அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெ ழுந்தாற் போல!
அமுதமுகம் சிரித்ததுபோல்!
அல்லி விரிந்தாற் போல்;-மேல்
சுழற்றி எறிந்த வெள்ளித் தட்டுத்
தொத்திக் கிடந் தாற்போல்!

குருட்டு விழியும் திறந்ததுபோல்
இருட்டில் வான விளக்கு!-நம்
பொருட்டு வந்தது பாடி ஆடிப்
பொழுது போக்கத் துவக்கு!
மரத்தினடியில் நிலவு வெளிச்சம்
மயிலின் தோகை விழிகள்!-பிற
தெருக்களெலாம் குளிரும் ஒளியும்
சேர்த்து மெழுகும் வழிகள்!

தென்மொழி, கடலூர் - 2.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்	50 காசு.	60 காசு.	75 காசு.
ஆண்டுக் கட்டணம்	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப்பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

மணிமொழிமாலை

மெய்யுணர்வு.

○ மெய்யுணர்வாளன் ஒருவன் தன் மெய்யுணர்வு நாட்டத்துக் கிடையூருக விருக்கும் உற்ருர் உறவினர்களைப் புறக்கணிப் பதில் குற்றம் ஒன்றும் இல்லை.

○ ஒட்டகம் முட்செடியைத்தின்று வாயினின்று குருதி ஒழுகிக் கொண்டிருக்கும். ஆயினும் முட்செடியைத் தின்பதனை அது நிறுத்துவதில்லை. அது போன்றே உலக மாந்தர் எத்தனை எத்தனை துன்பங்கட்காளாகியும் உலகப் பற்றினை விடுகின்ருரில்லை.

○ மீன் கொத்தியைப்போல் உலகில் வாழ்ந்திரு. அது நீருக்குள் மூழ்கி எழும்பொழுது சிறகுகளில் சிறிதுநீர் ஒட்டி யிருக்கின்றது. வெளியில் வந்து சிறகுகளைக் குலுக்கியதும் நீர் அகன்று விடுகின்றது. அங்ஙனமே நீயும் உலகிற் பற்றற்றிரு.

○ முதலில் கையில் எண்ணெயைப் பூசிக்கொள். பிறகு பலாப் பழத்தை அரிந்தெடு. இல்லையேல் அதன் 'பிசின் கையில் ஒட்டிக்கொள்ளும். முதலில் மெய்யுணர்வினை வளர்த்துக் கொள். பின்பு உலகியல் வினைகளில் ஈடுபடு. இல்லையேல் உலகப் பற்று உள்ளத்தில் ஒட்டிக் கொள்ளும்.

○ பொருள் கொடுப்பவர்களைப் போற்றுவதும், கொடுக்க மறுப் பவர்களைத் தூற்றுவதும் ஒரு சிலர் தம் இயல்பு. ஆதலின் அத்தகையார்தம் போற்றுதலையோ தூற்றுதலையோ பொருட் படுத்த வேண்டுவதில்லை

○ நீரில் மிதக்கும் நாணல் ஒன்றின் மேல் சிறு குருவி அமர்ந் தாலும் அது நீரில் அமிழ்ந்து போம். ஆனல் பெரிய மரக் கட்டையோ, தான் மிதப்பது மட்டுமல்லால் தன்மேல் பலர் அமர்ந்து ஆற்றைக் கடக்கவும் இடம் கொடுக்கின்றது. தம் சொந்த உய்தியைக் கவனித்துக் கொள்பவர்கள் நாணல்

போன்றவர்கள். உலகை உய்விக்க வந்த பெருமக்களோ மரக்கட்டை போன்றவர்கள். அத்தகையாரே தலைவராகும் தகுதி பெற்றவர்கள்

○ மெய்யறிவாளர்க்கு நன்மையும் தீமையும் ஒன்றே. தீமையைப் போலவே நன்மைக்கும் அவர்கள் அடிபணிதல் கூடாது. காலில் முள் தைக்கின்றது. மற்றொரு முள்ளைக் கொண்டு அதனை எடுக்கின்றோம். தைத்தமுள் என்று அதனைச் சினப்பதுமில்லை. முள்ளை எடுக்கப் பயன்பட்டது என்று மற்றொன்றைப் போற்றுவதுமில்லை இரண்டையும் எறிந்துவிடுகின்றோம். மெய்யறிவாளர் என்றும் பயனையே கருதுவர். பொருளின்மேல் பற்று வையார்.

○ இரவில் தென்படும் மின்மினிப் பூச்சிகள், உலகுக்குத் தாங்களே ஒளி கொடுப்பதாக எண்ணுகின்றன. ஆனால் விண்மீன்கள் தோன்றியதும் அவற்றின் செருக்கடங்கிவிடுகின்றது. விண்மீன்களோ, தாங்களே உலகுக் கொளி கொடுப்பதாகத் தருக்குகின்றன. நிலவு எழுந்ததும் அவற்றின் தருக்கும் அடங்குகின்றது. நிலவு செருக்கடைவதும் அப்படியே. கதிரவனின் பேரொளியில் அது மங்கி ஒளியிழக்கின்றது. பொருளைக் குறித்தோ அறிவைக் குறித்தோ செருக்குறல் வேண்டா. உன்னினும் மிக்கார் உலகில் பலர் உளர்.

○ மெய்யுணர்வாளர்கள் தேனீக்கு ஒப்பானவர்கள். தேனீ அழுக்கு எதிலும் போய் அமராது. ஒன்று, தேனை எடுப்பதற்காக மலர்மேல் அமரும்; இன்றேல், தேனைக்கொணர்ந்து சேர்க்கத் தன் அடைமேல் அமரும். ஆனால், உலகியல் பற்றினையும், மெய்யுணர்வினையும் ஒருசேரக் கடைப்பிடிக்க முயல்பவர்களோ வீட்டு ஈக்கு ஒப்பானவராயுள்ளனர். வீட்டு ஈ ஒரு வேளை இறைவனுக்குப் படைக்கப் பெறும் தூய உணவின் மேலும் அமரும் மறு வேளை மலத்தின் மேலும் அமரும்.

○ மலத்தில் தோன்றி மலத்திலேயே வளர்ந்து வரும் புழு ஒன்றை, ஆரக்குழைவில் (சந்தனத்தில்) எடுத்துவைத்தால் அது மடிந்துபோம் உலகப் பற்றுடையான் ஒருவனை நற்சான்றோர் இணக்கத்தில் சேர்த்துவைத்தால் அவன் பெருந் துன்புக்காளாவான்.

○ ஈரமான தீக்குச்சியை எவ்வளவுதான் கிழித்தாலும் அது தீப்பற்றாது. உலர்ந்த குச்சியோ ஒரு முறை கிழித்த அளவில் பற்றிக் கொள்கிறது. ஒருவன் உள்ளத்தில் சிறி

நாடலேனோ?

இளஞ்சித்திரன்.

காற்றுடும் பசியமணங் கமழும்பூங்
கொடியிலுடற் கவினும், பொய்கைச்
சேற்றுடுந் தாமரையில் சிவந்தொளிரும்
முகப்பொலிவுந் தெளிந்து பாயும்
ஆற்றுடுங் கெண்டையிற்கண் அமைப்பும்,முள்
அலரியில்வாய் அழகும் என்ன
ஏற்றுடும் படிஇருந்தும் என்னுளமுன்
அழகினுக்கே ஏங்க லேனோ?

வானுடும் மழைமுகிலில் வார்த்தடர்ந்த
குழல்வனப்பும், வண்டு குந்தித்
தேனுடும் முல்லையிற்பற் சிறப்பும்,மாந்
தளிரிலையில் செழுங் கதுப்பும்,
கானுடும் மான்மயிலுக் கமைந்துள்ள
மென்மையில்மெய்க் கவினும் என்ன
தானுடும் படிஇருந்தும் நானுன்றன்
அழகினையே நாட லேனோ?

பூப்பாடும் முகைக்கொத்தில் பொங்கிவரும்
மார்புயிர்ப்பும், பொழுது சாயத்
தோப்பாடும் தென்றலில்தோள் தொடுசுவையும்
காந்தளிற்கை வனப்பும், ஈர்க்கில்
கோப்பாடும் நுண்ணிடையும், ஊசிமல்லி
மொட்டில்மூக் கழகும் என்ன
நாப்பாடும் படிஇருந்தும் நானுன்றன்
அழகினையே நாடலேனோ?

தளவேனும் உலக நசை இருக்குமாயின் அவனுக்கு மெய்யுணர்வு வாய்க்காது.

○ ஒரு சல்லடை, நல்ல பொருட்களையெல்லாம் நழுவ விட்டு விட்டுப் பயன்படாதவற்றைத் தன்னுள் வைத்துக் கொள்கின்றது. கயவர்கள் சல்லடை போன்றவர்கள். நல்ல எண்ணங்கள் அவர் உளத்தில் தங்குவதில்லை. புல்லிய எண்ணங்களே இடம் பெறுகின்றன.

- இராமகிருட்டிணர்.

உயிரீரும் வாள்.

பேராசிரியர். கு. சுந்தரமூர்த்தி,
செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

வாள் உடலையோ பொருள்களையோ வெட்டும் தகைமைய தன்றிப் பிறவற்றை வெட்டும் தகைமையதன்று. ஏனெனில் உயிர் அருவப் பொருளாகலான். எனினும் அவ் அருவப் பொருளாகிய உயிரையும் ஈரும் ஒரு வாளினைத் திருக்குறளில் காண்கின்றோம். அவ்வாள்தான் யாது? அதுவே நாள் ஆகும்.

ஒவ்வொரு நாளும் உண்டும், ஊர்ந்தும், உறங்கியும் பொழுது கழிக்கின்ற நாம், பொழுது போதலை அறியாதே வாழ் கின்றோம். அப் பொழுது போதல் தானும் யாருக்கோ போய்க் கொண்டிருக்கிறது என்றும், அங்ஙனம் போதலும் பெரும் மகிழ்ச்சிக்குரியதே என்றும் நினைக்கின்றோம். ஆயினும் உலகப் பேரறிஞராகிய திருவள்ளுவர் அதன் உண்மையைத் தெளிவாக விளக்குகின்றார். அக் குறள் வருமாறு:

''நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்''.

ஒருவனுடைய வாழ்நாள் மிகச் சேய்மையதாயினும், அன்றி அணிமையதாயினும், ஒரு நாள் கழிந்தது என்றால் அவன்தன் வாழ்நாளில் ஒருநாள் குறைந்துவிட்டது என்பதே பொருளாகும் இவ்வுண்மை எல்லாருக்கும் பொதுவாயினும், புரிந்து கொள்ளக் கூடியதாயினும், அதனை அறிந்து அதற்கேற்ப ஒழுகுவார் மிகச் சிலரேயாவர். அவர்களுக்கு நாட்கள் எல்லாம் உண்மையான நாட்கள் ஆகா. தமது உயிரை அறுக்கின்ற வாள் என்றே தோன்றும். இதுவே இக் குறட்பாவின் பொருளாகும். இக் கருத்தினையே நாலடியார் ஆசிரியரும்,

''வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரா
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்;
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.''

எனத் தெளிவாக விளக்கினர்.

இக் குறட்பாவிற்கு மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிமேலழகர் ஆகிய நால்வர் உரைகள் உள்ளன. இவர்களில் முன்னைய மூவரும் ''வாளதுணர்வார்ப் பெறின்'' என்ற தொடரை,வாள் + அது + உணர்வார்ப் பெறின் எனப் பிரித்த னர். பரிமேலழகர், வாளது + உணர்வார்ப் பெறின் எனப்

பிரித்தனர். இங்ஙனம் முன்னையோரினும் பரிமேலழகர் வேறு பட்டுப் பிரித்தற்குக் காரணம், அவர் ஓர் இலக்கண நெறியைக் குறிக்கொண்டமையேயாகும். நிலை மொழியில் குற்றியலுகரம் நிற்க, வருமொழியில் உயிர்வரின் நிலைமொழியிலுள்ள குற்றுகரம் கெட்டு வருமொழியில் உள்ள உயிருடன் ஏறிமுடிதல் இயற்கை. இதனை "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" எனச் சுருங்க விளக்கினர் நன்னூலார். இந்நெறி பற்றியே பரிமேலழகர் வாள், அது என்னும் இரு சொற்களையும் "வாளது" எனக் குற்றியலுகரச் சொல்லாக்கி வாளது + உணர்வார்ப் பெறின்வாளது (த்+உ) + உணர்வார்ப்பெறின் = வாளதுஉணர் வார்ப் பெறின் எனப் புணர்த்தனர். இங்ஙனமன்றி வாள் + அது + உணர்வார்ப்பெறின் எனப் பிரிப்பின், அது என்பது முற்றியலுகரமாய், வருமொழி முதலில் உயிர்வர நிலைமொழி உகரம் கெடும் என்னும் முறையின்மையின், அது + உணர்வார்ப் பெறின் = அதுவுணர்வார்ப் பெறின் என வகர உடம்படு மெய் பெற்று வருதல் வேண்டும். இங்ஙனம் ஒரு வகர உடம்படு மெய் இன்மையே பரிமேலழகர் பிறர் உரையை மறுக்கவும், தன் கோளை நிறுவவும் காரணமாயிற்று. எனினும் "முற்றும் அற்று ஒரோ வழி" என நன்னூலார் கூறியிருத்தலின், அது (த்+உ) + உணர்வார்ப் பெறின் = அது உணர்வார்ப் பெறின் எனப்புணரினும் இழுக்கில்லை.

இங்ஙனம் வாளது + உணர்வார்ப் பெறின் என இக்குறளில் பிரித்த பரிமேலழகர்,

"உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்"

என்னும் திருக்குறளில் புண் + அது + உணர்வார்ப் பெறின் எனப் பிரித்துத் கொண்டனர். அங்ஙனம் பிரித்துக்கொள்ளினும் தம் மதி நுட்பத்தால் 77 குறட்பாக்களுக்குப் பின்னர் இருக்கும் இக் குறளொடு மாறுபடாமலும், இலக்கண நெறிக்கு மாறுபடாமலும், "அஃதெனல் வேண்டும் ஆய்தம் விகாரத்தால் தொக்கது" எனக் குறிப்பு எழுதினர். இவ் இலக்கணக் குறிப்பு இன்றேல், "நாளென ஒன்றுபோல் காட்டி" என்று தொடங்கும் குறளில், பிறர் கொண்ட கருத்தை மறுத்தற்கு இயலாமல் போயிருக்கும்.

எனவே பரிமேலழகர் இலக்கணக் குறிப்பை இடனறிந்து எழுதும் மதிநுட்பம் உடையவர் என்பதும், எத்தனையோ குறட்பாக்களுக்குப் பின்னால் தாம் பிறரை மறுக்க நினைப்பினும், அதற்குத்தக ஆங்காங்கு இலக்கணக் குறிப்புகளை எழுதிச் செல்லும் பான்மையர் என்பதும் அறியலாம். *

(இப்பகுதிக்கு நூல்களை விடுப்பார் கவனிக்க வேண்டியவை:

1 நூல்கள் ஆறு திங்கட்குள் வெளிவந்த முதல் பதிப்பாக இருத்தல் வேண்டும்.

2 ஒவ்வொரு நூலிலும் இரண்டிரண்டு படிகள் விடுக்கப் பெறல் வேண்டும்.

3 ஒருவாறு தகுதியான நூற்களே நிறை செய்யப்பெறுமாகலின், எவ்வகையான பரிந்துரைகளும் இதுகுறித்து ஏற்றுக் கொள்ளப் பெறா.

4 நாள், கிழமை, திங்கள் தாள்களாக இருப்பின் மிக அண்மை வெளியீடாக இருத்தல் வேண்டும். - ஆர்.)

தமிழில் தந்தி.

ஆக்கியோன்: வித்துவான். அ. சிவலிங்கம்.
(விலை: குறிக்கப்பெறவில்லை.)

ஆங்கிலக் குறியீட்டு முறையினை அடியொற்றித் தமிழுக்கே உரிய தொலைவரிக் குறியீட்டு முறை யொன்றை உருவாக்கி நடைமுறையிலும் வெற்றி கண்ட ஆசிரியர், தம் முறையினை இந் நூலில் விளக்கியுள்ளார். ஆசிரியர் பாராட்டுக்குரியர். உணர்வின்மை, மடி இவற்றின் அடியாகப் பிறந்த போலிக் கொள்கைகளைப் பிதற்றிக்கொண்டு, வேற்றுமொழிச் சொற்களையும் முறைகளையும் கையாள்வதால் தமிழ் வளர்ச்சி குன்றிவிடாது என்று கூறி, அவ்வளவானே அமைந்துவிடும் மொழிப் பற்றிலார்க்கு, முயன்றால் தமிழில் ஆக்கிக்கொள்ள முடியாத புதுத்துறை எதுவுமில்லை என்று விடை கூறுவதுபோல் அமைந்துள்ளது ஆசிரியரின் இத் தமிழ்த் தொலைவரியாக்கம்.

ஒரு முறையைத் தொடக்கி வைத்தலே சிறந்தது. ஒருசில குறைகள் இருப்பினும் அவை காலப்போக்கில் செப்பமுற்று விடும். முடிந்தால், ஒருசில நீண்ட குறிகளை ஆசிரியர் மேலும் சுருக்கிப் பார்க்கலாம். ஆயினும் இவ்வாறே இருத்தலில் ஏதும்

இழுக்கில்லை. 'எளிமை' என்ற சொல்லைக் கேட்டு எளிதில் ஏமாந்துவிடும் நாம், இது வரை நாம் கையாண்டுவரும் பல முறைகள் குறைபாடுடையவை, கடினமானவை என்பதை மறந்து விடுகின்றோம். புதிதாக வருபவற்றில்மட்டும் நம் ஆய்வுத் திறனை யெல்லாம் செலுத்திப் பார்க்கின்றோம். ஆயினும் அஞ்சல் துறையில் பணியாற்றிய ஆசிரியர் இத்தொலைவரிமுறை நடைமுறையில் சீரிய வெற்றி அளித்துள்ளது என்பது கேட்டு மகிழ்கின்றோம். ஆங்கிலச் சொற்சுருக்கங்கட்கு நேரான தமிழ்ச் சுருக்கங்கள் சிலவற்றை ஆசிரியர் தந்துள்ளார். இவைமுடிவானவை அல்ல. அவற்றை நல்ல தமிழில் அமைத்துக் கொள்வது கடினமும் அன்று.

குறள் நெறி. (திங்களிருமுறை இதழ்)

ஆசிரியர்: பேராசிரியர். சி. இலக்குவனார். எம். ஓ. எல்.

கருமுத்து அகம், மதுரை.

(ஐந்தாம் இதழ்) விலை 25 காசு.

திருக்குறள் நெறியினைத் தன் பெயருக் கடிப்படையாகக் கொண்டு மதுரையினின்று வெளிவரும் இதழ் இது. இந்தித் திணிப்பால் தமிழர்க்கு நேர்கின்ற பேரிடரினை எதிர்த்து முழக்கமிடும் முரசாக இவ்விதழினைக் கூறலாம். இந்தி எதிர்ப்புக் கருத்துகளும், திருக்குறள் பற்றிய கட்டுரைகளும், தமிழை வளப்படுத்த விரும்புவார்தம் கட்டுரைகளும் இடம் பெறுகின்றன. திரு. இலக்குவனார் அவர்களின் தொல்காப்பிய விளக்கத் தொடர் கட்டுரை பயனுடையதாகும். மொழித்திற முட்டறுத்தல் என்ற கட்டுரையில் தெளிவும் வரையறையும் காணேம். கருத்தரங்கில், இந்தி பற்றிய வினுக்கட்கு விடையளிக்கப் பெற்றுள்ளது. விடைகள் பொருத்தமே எனினும், மேலும் ஆணித்தரமாக, திட்டவட்டமாக இருப்பின், போலித் தமிழர்தம் வாய் அடைபடும். தமிழ் வளர்க்க விழையும் 'குறள்நெறி'யிற் பல வடசொற்கள் விரவியிருப்பது சிறப்பன்று. எதனை வரம்பாகக் கொண்டு பிறமொழிக் கலப்பினை நிறுத்திக் கொள்வது? எதுவரை பிறமொழிச் சொற்கள் கலந்திருந்தால் தமிழ் கெடாது என்று கோடிட்டுக் கொள்வது? ஆதலான் தனித்தமிழே கொள்கையாகக் கொள்வது இதழை மேலும் பயனும் சிறப்பும் உடையதாக்கும். மற்றும் திருக்குறள் நெறியைப் பின்பற்றும் இதழ் குலப் பட்டங்கட்கு இடம் தருவது எக்காரணத்தானும் பொருந்துவதாக இல்லை. அவரவர் போக்கில் இயங்கிக் கொண்டிருப்பார், ஒருவண்டியில் ஏறியமர்ந்துவிடின் வண்டியின்போக்கிற்கு இயைவதுபோல், பல்வேறு நெறிகளில் போவாரை ஒரு முகப்படுத்திக் குறள்நெறியில் போமாறு செய்யும் ஆசிரியர்,

அவரவர் போக்கிற்கே தம் போக்கை ஒழுகவிடுவது எவ்வாற்ருனும் உரனும் திறனும் பெற்றதாகாது; அப்போக்கு எய்தவிழையும் உண்மைப் பயனை ஒருநாளும் நமக்களிக்காது. இதழ், பெயரளவில் குறள்நெறியாக இல்லாமல் செயலளவிலும் அவ்வாறே இருந்து சிறக்குமாக!

எண்ணக் குவியல்.

எழுதியவர்: **இரா. கிள்ளிவளவன், இரும்புதலை.**

விலை: 50 காசு.

கூர் மழுங்கிய கத்தியால் பலாப்பழத்தை அறுத்துச் சுளைகளைச் சிதையாமற் பிரித்தெடுத்தல் இயலாது. ஒடிந்த சுள்ளியால் மண்ணைத் தோண்டி இனிய ஊற்றுநீரை அணுகல் இயலாது. கூர்மையும் தெளிவுமில்லாத சொற்களால் பாட்டுணர்வை வெளிப்படுத்துதல் முடியாது. பிறர் செய்யாத ஒன்றைத் தாம் ஏற்றுச் செயப் புகுவதுமட்டும் ஒருவர்க்குச் சிறப்பளித்து விடுவதில்லை. செய்யப் புகுவதனைத் திருத்தமாகவும் செப்பமுறவும் செய்தல் வேண்டும்; அதுவே சிறப்பாகும். மிக எளிய உண்மை இது. பாடலெழுதும் தமிழிளைஞர்கள் இதனைப் புரிந்து கொண்டால் தமிழிலக்கியம் எவ்வளவோ சீர்ப்படும். ஆழ்ந்த உணர்வில் திளைப்பதோடு அவ்வுணர்வை வெளியிடும் கருவியான சொற்களின் நுணுக்கத்திலும் கூர்மையிலும் கருத்தினைச் செலுத்தல் வேண்டும். முயற்சி எளிமை என்பது இன்று இளைஞரைப் பிடித்திருக்கும் ஒரு பெருங்கேடு. இளைஞர்க்கு வழிகாட்ட வேண்டிய பேராசிரியர்களாவது குறை காணுமிடத்துத் தயங்காமல் எடுத்துரைத்து அவர்களை நல்வழிப் படுத்தல் வேண்டும். அவர்களும் நமக்கென்ன என்ருே, அன்றி முகமன் கூறும் முறையிலோ, சற்றும் ஆய்வுக்குப் பொருந்தா வகையில், நூலின் தகுதிக்கு மீறி அதனை வானளாவப் புகழ்ந்து முன்னுரை வழங்கி விடுகின்றனர். நூலெழுதுவார்க்கு உண்மையறியும் வாய்ப்பே கிடைப்பதில்லை. எண்ணக் குவியல் என்ற பாடல் நூலும் இத்தகைய ஆழமில்லாத பாடல் நூலே. முன்னுரையில் திரு. அப்பாதுரையாரின் புகழ் மொழிகளைக் காண்கின்ருேம். மேனுட்டு இலக்கிய ஆசிரியர் எவரேனும் இம் முன்னுரையைப் படித்தால் என்ன கருதுவாரோ?

பாடல்களில் உயிர்ப்பில்லை உணர்வாழமின்மையும் கூற வந்த பொருளைத் தெளிவு படுத்தாமையும், கலப்பு உருவகக் குழப்பங்களும், பொருந்தாத, நுணுக்கமில்லாத சொற்களைக் கையாண்டுள்ளமையும், கணக்கற்ற ஒற்றுப் பிழைகளும் பாடல்கள் சிறவாமற் போனமைக்குக் காரணங்கள்.

— கல்லாடன்.

ஈரைந்தாண்டில் இரண்டிலொன்று!

மு. சாத்தையா எம். ஏ.

—*—

தமிழ் மொழியின் தற்கால நிலை அஞ்சத் தக்கதாக உள்ளது. எதிர்காலத்தில் தமிழ் வாழ்வுபெறுமா என்ற அவல நிலை உள்ளத்தைப் பிழிகின்றது. தமிழ், பழமை, முதுமை, இளமை, வளமை, இனிமை, தனிமை முதலிய பதினுறு பண்புகள் படைத்த அரியமொழியாக இருக்கலாம்; கழக இலக்கியங்களும், பாவியங்களும், தற்கால இலக்கியங்களும் சேர்ந்து தமிழ்க்கு உலகிலேயே சிறந்த ஓரிடத்தை ஒதுக்கித்தரும் சிறப்புப் பெற்ற தாகவும் இருக்கலாம்; ஏன், தமிழர்கள் அனைவரும் எண்ணிக் கொண்டிருப்பதுபோல் தமிழ் அழிக்க முடியாத ஆற்றல் பெற்ற தாகவும் இருக்கலாம்; ஆனுல், இந்தியாவில் தற்பொழுது மேற் கொள்ளப்பட்டிருக்கும் முயற்சி, தமிழ்க்கு உள்ளும் புறமும் மேலோங்கி வரும் நெருக்கடி. தமிழர்தம் அறியாப் புறக்கணிப்பு ஆகிய இவை விரைவில் தமிழை ஒடுக்கிவிடும்; தமிழ்க்கிருக்கும் பெருமையையும், அதற்கான சான்றுகளையும் ஆழக் குழி தோண்டி அதிற்போட்டுப் புதைத்து அதன்மேல் இந்திக் கள்ளி படர இடம் கொடுத்துவிடும்.

தமிழ் அழியாது, அழியாது என்று நமக்கு நாமே ஆறுதல் கூறிக் கொள்வதிலும், அழிக்கவே முடியாது என்று வீணுகத் தருக்கிப் பேசுவதிலும் இனிப் பொருளில்லை. நம் வீம்பும், பெருமையும் காற்றுக்கான படையலாகும்! 'ஆடுகாட்டி வேங்கை தன்னை அகப்படுத்துமாறு' நம் ஆற்றலை அடிக்கடி புகழ் வதன் வயிலாக நம்மைப் படுகுழி நோக்கி மெல்ல அழைத்துச் செல்வதில் வடநாட்டார் நல்ல வெற்றி கண்டு வருகின்றனர். திருட்டுப்போன மாட்டுக்குப் பக்கத்து வீட்டிலேயே உளவு ஆள் இருப்பது போல, வடவர்தம் நினைவுக்கும் செயலுக்கும் ஒத்து ஊதவும், உளவு சொல்லவும் தமிழர்கள் பலர் இருக்கின்றனர். நீரை எதிர்த்துக் கரையேறியதும், நெற்றிக் கண்ணரையே எதிர்த்து உண்மையை வலியுறுத்தியதும், மணிக்கதவம் திறக்கப் பாடியதும் தமிழின் ஆற்றலன்றோ என்று நினைத்து மனப்பால் குடிப்பவர், கண்ணைத்திறந்து தமிழ் மண்ணை நோக்க வேண்டும். இப்பொழுது உருவாகும் நிலை தமிழ்க்கு மிக மிக இக்கட்டானது என்பதைப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

தமிழரிடத்தில் ஏற்கனவே அமைந்து கிடக்கும் புறக்கணிப் புணர்ச்சி, தமிழ்த் துறைகளில் ஆவின் தோல் போர்த்து அமர்ந்து கொண்டிருக்கும் ஆணவலுவுள்ள 'அண்ணல்'களின்

சூழ்ச்சி அல்லது பொறுப்பின்மை, இந்திய ஒருமைப்பாட்டின் பெயரால், காந்தியின் பெயரைப் பொறித்துக் கழிநீரை மருந் தென விற்கும் கயமை படைத்த 'இந்தி'யரின் வெறி, வடவர் 'இரு' என இருந்து செய்யெனச் செய்யும் பெற்றி தவிர மற்றேதும் அறியாத தமிழக அரசின் நாணமற்ற போக்கு ஆகிய நான்கும் தமிழை இடுகாட்டுக்கு இட்டுச் செல்லும் வழிகள்!

தற்பொழுதைய நிலையில் தமிழுக்கு உடனடியாகத் தேவை யானது காப்பே தவிர வளர்ச்சியில்லை. இப்படிச் சொல்வதன் கருத்து வளர்ச்சியில் கருத்தூன்ற வேண்டா என்பதன்று; காப்பு அதனினும் இன்றியமையாததும், உடனடியானதும் ஆகும் என்பதேயாம். காப்பு நெகிழ்ந்து, அரண் தகர்ந்து காட்டெருமை கள் மேயும் களமாக இந்நிலம் ஆனால் வளரும் பயிரும், வளர்த்து நீரூற்றும் வல்லுநரும் எய்தப்போகும் நிலை என்ன? மொழி வளர்ச்சி கருதி முனைந்துள்ளார் அனைவரும் படைத் தளிக்கப் போகும் இலக்கியச் செல்வங்களின் பயன் துய்க்கும் கூட்டம் எய்தி வரும் இளக்கத்தையும் இறக்கத்தையும் இப் பொழுதே கண்டு கொள்ளல் வேண்டும். படைத்து முடிக்கும் வரை பாராமுகமாக இருந்துவிட்டால், உருவாக்கிக் கையி லெடுத்து உலவவிட வெளி வரும்பொழுது பேசும் வாயிழந்து, கூவும் குரல், கேட்கும் செவியிழந்து செத்துக் கொண்டிருக்கும் தமிழினத்தையே காண நேரும். வளர்ச்சி தரும் வல்லவர்களைக் கலக்கி இழுக்க வேண்டிய காலம் இது.

'தமிழ் நெடுங்காலமாகவே அகப் பகையாலும், புறப் பகை யாலும் மறையுண்டும், குறையுண்டும் வந்திருக்கிறது.' இன்றும் அதே நிலைதான். வெளிப்பகை நாளும் நாளும் மேவிக்கொண்டு வருகின்றது. அதுவும் சட்டத்துணைக்கொண்டு, சரியானநேரமும் இடமும் பார்த்து மெல்லப் புகுந்து தமிழின் கழுத்தை முறிப்பது புரிகின்றது இப்பகைக்கு வருகை கூறவும், விருந்து வைக்கவும் இங்கு என்றே பலர் அணியமாகி விட்டனர். பிழைப்பு, வேலை, சோறு, வயிறு எனும் பெயர்களுக்குப் பின்னால் தமிழின் பால் அக்கறையற்ற புறக்கணிப்பும், இந்தியின் பால் நாட்டமும் உருவாகிவிட்டன. ஓரிரு எடுத்துக் காட்டுகளில் தமிழின் கை கால்கள் தளர்ந்து, கண்கள் இருண்டு, மூலையில் தள்ளப் பட்டு வருவதை அறிந்து கொள்ளலாம். பேச்சில், எழுத்தில் பிறமொழிக் கலப்பும், பெயர்களில், ஊர்களில் பெரும்பாலும் எல்லா ஆட்சித் துறைகளிலுமே தமிழ் மறக்கப்பட்டு வந்துள் ளமையும், ஏற்கனவே அறிவோம். தமிழ் வளர்ச்சி என்பது பல்துறை நூற் படைப்பும், பயிற்சியும், கல்வித் துறையில் விரிந்த ஆழமான தேர்ச்சியும் ஆகும்.

தமிழ் நூற்பயிற்சி தமிழ் நாட்டில் மிக மிகக் குறைவு என்பதை யாரும் மறுக்க முடியாது. காசு கொடுத்து நூல்

வாங்கவும், நல்ல நூற்களை வாங்கித் தாமே சேர்த்து வைக்கவு மான விருப்பமும் மிகப்பெரும்பாலார்க்குஇல்லை. கல்விகற்றுள்ள ஒரு சிலருள்ளும் தமிழ் நூல் வேட்கை அருகியே காணப்படு கின்றது. உண்மையைச் சொன்னால் தமிழுக்குப் பெருமை தரும் கழக இலக்கியங்களைப் பயில்வார் மிகமிகக் குறைவு. அது போக, கழக இலக்கியங்களில் பெயர்கள் என்னென்ன என்ப தையே அறியாத 'பட்டம் பெற்ற' பலர் உண்டு. நூற்பயிற்சி யில் விருப்பின்மை தமிழரிடைப்பரவலாக மேலோங்கி நிற்கிறது. தமிழ் நூற்பயிற்சிக்கு வேண்டிய உணர்ச்சியை உருவாக்க வேண்டிய இந்நிலையில் உள்ளதும் தீய்ந்து போக முயற்சிகள் நடக்கின்றன.

கல்லூரிகளில் தமிழ்த் துணைப்பாட நூற்களைப் பலர் விலை கொடுத்து வாங்குவதில்லை. நூல் வாங்குவது தேவையற்றது எனும் ஊக்கத்தைக் கொடுத்தவை 'அங்காடி உரை நூற்கள்' ஆகும். தேர்வுக்கு முதல் நாள் உரை நூலில் சுருக்கித் தரப் பட்டுள்ள துணைப்பாடப் பகுதியைப் படித்துவிட்டுக் கதை யடித்துவிட்டோம் என்று வெட்கமின்றிக் கூறும் தமிழன்பர்கள் பலர். செய்யுட் பகுதிக்குக்கூட உரைநூல்தரும் பொழிப்புரையே பலர்க்குப் பட்டம் தருகின்றது. பட்டம் பெறுபவர்கள் தமிழில் கொண்டுள்ள ஆழமான (!) பயிற்சி இது. உரை நூற்களின் பெருக்கம் தமிழறிவு வளர்ச்சியில் பெரும் சரிவை உண்டாக்கி விட்டது. மாணவர் பலர் கருத்தூன்றிப் பாடமும், பாட்டும் பயிலும் நிலை போய்விட்டது. தமிழ் நாட்டில் இந்த நிலை தமிழுக்கு என்றால் தமிழறிவு எப்படி வளரும்? தமிழ் வளர்ச்சியில் தமிழர்க்கிருக்கும் அக்கறைதான் என்ன? இக்கேடு கெட்ட தாழ்நிலையில் நெய் வார்ப்பதுபோல் அரசினர்தம் போக்கும் சேர்ந்து கொண்டது. 1956-ஆம் ஆண்டில் 9, 10, 11-ஆம் வகுப்புகளில் சிறப்புத் தமிழ், பொதுத் தமிழ் என இரு பிரிவுகள் இருந்தன. இரு பாடங்களாதலின் பிரிவேளை (*Period*) களும் மிகுதி. அந்த நேரத்தில் இந்திக்குத் தரப்பட்ட இடம் நம் கவனத்துக்குரியது. இந்தி – நெசவு (*Weaving*) – நூற்கட்டடம் (*Binding*) ஆகிய மூன்றுக்கும் சேர்த்து ஒரே பிரிவேளைதான். விரும்பியவர் விரும்பிய இடத்தில் இருந்து கொள்ளலாம். இந்தித் தேர்வு நேரத்தில் இறுதி வகுப்பு மாணவர்களைத் தேடி அழைத்து வந்தால்தான் உண்டு.

ஆனால் 1964-இல் தமிழுக்கிருக்கும் சிறப்பை ஒழிப்பது போலச் சிறப்புத் தமிழை அகற்றிவிட்டார்கள். இப்பொழுது 9-ஆம் வகுப்பில் தமிழுக்கு மொத்தம் 6 பிரிவேளைகள்மட்டுமே! இந்திக்கோ நான்கு. இந்திக்கு என்ன தகுதியோ, அதுவே தமிழ்க்கும். இந்தியும் மாணவரின் தரத்தைக் (*Rank*) கணிக்கும் அளவுக்குக் கட்டாயமாகிவிட்டது. தேர்வுக் கட்டாயமும் வந்து

விட்டது. தமிழ் இருந்த இடத்தை இழந்து தளர்ந்திருக்கிறது. இந்தி புதிய இடங்களைக் கைப்பற்றி வளர்ந்திருக்கிறது. அறிவுள்ள சான்றோர் இந்த எட்டாண்டுக் காலத்திற்குள் நேர்ந்துள்ள பெரும் மாற்றங்களை எண்ணி உணர்ந்து கொள்ளல் வேண்டும். மேலும், சில தனியார் பள்ளிகள் அரசினரைவிட அறுபதடி மேலே பாயக்கூடியவை. அரசினர் அடுத்த ஆண்டு செயலாற்ற விரும்பும் சிலவற்றை இந்த ஆண்டே கட்டாயப் படுத்தி நல்ல பெயர் வாங்க விரும்பும் 'நரி'ப் பண்பு சில கல்வி நிறுவனத் தலைவர்களிடம் உண்டு.

இந்தியின் வரவால் தமிழ் வளர்ச்சி குன்றுது என்று மனச் சான்றை விற்று மடமை கொழுத்துப் பேசும் மாண்பிலிகள் மேற் கூறிய நிலைகளை எண்ணிப் பார்க்கட்டும். தவிரவும் இன்று தமிழாசிரியர்களிடத்தில் காணப்படும் ஒரு வகையான சோர்வு இந்தியாசிரியர்களிடத்தில் இல்லை. தமிழாசிரியர்கட்கு எதிர் காலம் பற்றிக் கனவு காணவும் முடியாத ஊக்கமின்மையும், நம்பிக்கையின்மையும் வளர்ந்திருக்கின்றன; எதிர் காலத்தில் சிறப்பது இந்தியாசிரியர்—பறப்பது இந்திக் கொடி என்று இந்தி யாசிரியர்கட்குப் புதிய ஊக்கம் தோன்றியிருக்கிறது. சோர்ந்து துயர்உறும் தமிழ் ஆசிரியர், மாணவர், தமிழ் மக்கள் அனைவருக்கும் உள்ளச் சோர்வு மீளாத் துயர் நோக்கி இட்டுச் செல்லும் காலம் இதுதான். தமிழ் பாதுகாக்கப்பட வேண்டிய செயலில் தமிழர் உடனடியாக முனைய வேண்டிய நேரம் இது. 'இந்தியா இன்னும் பத்து ஆண்டுக்காலம் பல துன்பங்களையும், தொல்லைகளையும் ஏற்க வேண்டியிருக்கும்' என்கிறார் அசோக் மேத்தா. இந்தியா பொருளியற்றுறையில் முன்னேற்றமடையும் கால எல்லை என்று கருதுகிறார் போலும்! இந்திய அரசு உரு வாக்க நினைக்கும் இந்தி (ய) ஒருமைப் பாட்டுக்குரிய கால எல்லையும் ஏறத்தாழ இதுதான்.

'பத்து ஆண்டுகளுக்குப்பின் நாம் இந்தி படிக்காமல் போனோமே என்று பிள்ளைகள் வருத்தப்படாமல் இருக்குமாறு இப்பொழுதே எல்லா ஆசிரியர்களும் இந்தி சொல்லிக் கொடுப் பதில் கருத்துச் செலுத்தவேண்டும்'என்று கல்வி மேலாளர்களே பேசுகின்ற நிலை வந்துவிட்டது. இஃது, இந்தித் திணிப்பால் இந்தியா முழு வெற்றி காணத் துடிக்கும் கால எல்லை. கல்வித் துறையின் திட்டமும் தமிழ் நாட்டில் பத்து ஆண்டுக்குள் புது மண் பரப்பிவிட வேண்டும் என்பதுதான் போலும்! எல்லாரும் எதிர்நோக்கியிருப்பது இந்தப் பத்து ஆண்டுக் காலம் தான். தமிழ் அன்னைக்கே பிறந்து அவள் அருமை பெருமைகளால் வளர்ந்து, வயிறும் மனமும் நிறைய வாழ்கின்ற எந்தத் தமிழ்க் குடிமகனும் கருத்தில் இருத்திக் கவனத்துடன் செயலாற்ற வேண்டிய காலம் இந்தப் பத்து ஆண்டுகள்தாம். தமிழ்க்கு

உரிய துறைகளை யாரும்பறிக்காமல், தானே செழித்து வளரவும் வளர்ச்சிக்குத் துணை சேர்க்கும் தகுதியும் செல்வாக்குப் பெறவும் தமிழ் ஆற்றல் பெறவேண்டிய காலம் இது. ஒருவாய்ச் சோற்றுக்கு அங்காந்து, வீசும் காசுக்குக் கையேந்தி, வயிற்றுப் பாட்டுக்கு வழி கிடைத்தால் எந்தப் பெருமையையும் தீய்க்கத் துணியும் தமிழினத்தின் போக்குமாறித் தமிழால் வாழ்வு காணும் நிலை அமைந்தே தீரவேண்டிய காலம் இந்தப் பத்து ஆண்டுகள் தாம்.

இந்தப் பத்து ஆண்டுகளில் இந்தியா மொழிச் சிக்கலில் தீர்வு ஒன்றைக் காணும். இத்தீர்வு, ஒன்றால் தமிழ் நாட்டுத் தன்னுரிமை, தமிழ் ஏற்றம் ஆகியவற்றைக் கணிக்கும். அன்றால் தமிழர் என்றென்றைக்கும் தலைநிமிர முடியாமல் பித்தேறிப் புலம்பிக் கொண்டிருக்கும் அவல நிலை திட்டவட்டமானதாகி விடும். வெற்றி எந்தப் பக்கம் என்பதைக் கணிக்கும் காலக் கட்டம் தொடங்கிவிட்டது. எடுத்துக் கொண்ட முயற்சியில் எவ்வாறேனும் வெற்றி காண்பதென்று இந்தி வெறியரும், துணைப் போவாரும் இறங்கிவிட்டனர் தொடுக்கப் போகும் போரில் இன்னுயிர் ஈந்தும் நன்னிலை வாய்ப்பச் செய்ய நாம் உடனே இறங்கியாக வேண்டும். ●

தென்மொழித் தொகுப்பு.

முதல் சுவடி.

முதல் சுவடியின் பன்னிரண்டு ஓலைகளும் சேர்ந்த தென்மொழியின் புதிய தொகுப்பு விற்பனைக்கு அணியமாயுள்ளது. மிகவும் குறைந்த தொகுப்புகளே கையயம் உள்ளமையால் தேவையான தமிழன்பர்கள் உரிய முழுத் தொகையையும் அனுப்பி, விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டுகின்றோம். படிகள் எஞ்சாமற்போமாயின் பின்னர் வருந்தநேரும். இலக்கிய இலக்கண அறிவியல்பற்றிய பல்துறை ஆராய்ச்சிக் கட்டுரைகள் 63ம், ஆங்கில மொழியாக்கங்கள் 12ம், 16 நூல் நிறைகளும், 73 இன்சுவைப் பாடல்களும், முழு இலக்கியம் ஒன்றும், 27 சொல் விளக்கங்களும், 31 துணுக்குகளும், 106 கருத்துரைகளும், 62 வினு விடைகளும், 8 சிறுகதைகளும், 3 நூற்சுருக்கங்களும், 6 கற்பனை ஊற்றுக்கட்டுரைகளும் 7 அறிஞர் வரலாறுகளும் கூடிய அறிவுப் பெட்டகம்! உயர்ந்த அழுத்தமான கட்டடம் பதிவு அஞ்சல் செலவும் சேர்ந்து விலை 10 உருபா. உங்கள் படிகட்கு உடனடியாக எழுதுங்கள்.

—அமைச்சர், தென்மொழி.

கலைப்பகுதி:

(திரைப்படங்கள் நமக்குப் புறம்பானவை அல்ல. நம் வாழ்வில் ஊடுருவி நிற்கும் அளவிற்கு அவையும் வளர்ந்து விட்டன. அவை பற்றி நாம் கருதுவது என்ன என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டாமா? அதற்காகவே இப் பகுதி! குறிப்பிட்ட சில படங்களே இதிற் கண்ணோட்டம் செய்யப்பெறும். – ஆர்.)

படம்: **காதலிக்க நேரமில்லை.**

இயக்குநர்: **சிரீதர்**

சிரிப்புக்காகவே இந்தப் படம் பிடிக்கப்பெற்றது என்றால், அதற்குக் காதலை இலக்காக்கியிருக்க வேண்டியதில்லை; ஏனெனில் உண்மைக் காதலில் காதலர் தங்களுக்குள்ளாகவே சிரித்துக்கொள்ள இடமுள்ளதே யன்றி, அவர்தம் காதலைப் பார்த்துப் பிறர் சிரிக்கும்படி கதையிருத்தல் கூடாது. ஆதலின் காதலுக்காகவும் இப்படம் பிடிக்கப் பெற்றது என்று சொல்வதற்கில்லை. பின் கலைக்காகவே இந்தப் படம் எனின், அஃது உடல் வனப்பில் மட்டுமே பொதிந்திருக்கவில்லை. வெறும் உடலைப் பிடித்த உடைகளா கலை? நம் நாட்டின் உயர்ந்த உள்ளச் சீர்மையையும் பண்பாட்டையும் மேனாட்டார் கண்டு வியந்து அவற்றைப் போற்றிப் பின்பற்ற முற்படுங்கால் அவர் தாம் கண்டு ஒன்றுமில்லை என்று கைவிட்டு வருகின்ற நாகரிகப் போலியை நோக்கி நாம் நடையிட வேண்டியதில்லை. நடிப்பும் வண்ணமும் படப்பிடிப்பும் கலை நுணுக்கங்களும் மிக மிக உயர்ந்தனவாக இருந்தால் மட்டும் படம் பார்க்கத் தகுதியுடையதாகாது. அவ்வுயர்வான பொருள்கள் சேர்ந்து அவற்றினும் உயர்வான நல்லுணர்வை வழுக்கி வழுக்கி வீழும் மக்கள் கூட்டத்திற்கு ஊன்று கோலாகத் தருதல் வேண்டும்.

படம் பிடித்தவர்க்கு ஒரு சொல்! ''உயர்ந்த வண்ணங்களையும் தூரிகைகளையும் வெள்ளிய திரைகளையும் வைத்திருக்கின்றீர்கள். போதுமான கற்பனை ஆற்றலும் உங்களிடம் இருக்கலாம்.

அவற்றால் சிறந்த ஓவியங்களை வரைய எண்ணுகின்றீர்கள். அவ்வோவியங்கள் மக்கள் வாழ்க்கையை ஒரு படியாவது உயர்த்துவனவாக இல்லாவிடின், அவற்றால் நீங்கள் எதிர்பார்க்கும் பயன் – விளைவுதான் என்ன? உங்கள் கைக்குக் காசா? வயிற்றுக்குச் சோறா? மக்கள் வாழ்க்கைக்கு உயிர்ப்பா? நீங்களே சொல்லுங்கள்: இத்தப் படத்தைப் பார்ப்பதால் மக்கள் மனத்தில் ஏற்படும் மாறுதல்கள் எவையாக இருத்தல் கூடும்? கல்லூரிப் பெண்ணாக இருந்தால் இப்படியும் காதலிக்கலாம்; உடை உடுத்தலாம் என்று நினைக்கலாம்; கல்லூரிக் காளையாக இருந்தால் இப்படியும் ஏமாற்றிச் செல்வ நிலையில் உயர்ந்த பெண்களை அடையலாம் என்று நினைக்கலாம். செல்வர்களாக இருந்தால் எச்சரிக்கையாக -ஆனால் உண்மையையும் போலி என்று கருதி ஒதுக்குபவராகவும் ஆகலாம். இவையன்றிப் படம் பார்ப்பவர்களின் உள்ளம் ஒருபடியாவது உயருமா? எங்களைப் பொறுத்தவரை 'இல்லை' என்றே சொல்வோம்."

சிறந்த கலையழகோடு கூடிய உயர்ந்த மாளிகை! உள்ளே வெறிநீர்க் குடியாட்டம்! நெளித்தும் நீட்டியும் தம் உடலின் வாளிப்பை காட்டுவதே கலையென்றால், விலைமகள் வீட்டைவிட உண்மையான கலைக்கூடம் வேறெங்கும் இருத்தல் முடியாது. கலை உடலை வளர்க்கும் ஊட்ட மருந்தன்று! உள்ளத்தை உயர்த்தும் தெய்வ அமைப்பு! அதில் ஆடலும் இருக்கலாம்; பாடலும் இருக்கலாம்; ஆனால் ஆடலில் உடல் ஆடக்கூடாது; உயிர் ஆடல் வேண்டும்; பாடலில் குரல் குழையக் கூடாது; உள்ளம் குழைய வேண்டும். படத்தில் பாராட்டப்பட வேண்டிய நுணுக்கங்கள் பல. ஆனால் அவை உடலுக்கிட்ட வண்ண உடைகள் போன்றவையே! ஆழமான கடலுக்குள் மூச்சுப் பிடித்து இறங்கி மண்ணையா அள்ளிக்கொண்டு வருவது, முத்துகள் இருக்க? வெறும் பொழுது போக்கிற்காக அரிய கலைப் பொருள்களை வீணடிப்பதா?

இப் படத்தைப் பொதுமக்கள் இரு கை நீட்டி வரவேற்கின்றனர் என்று கூறலாம். உண்மையான உலகியல் முன்னேற்றம் கருதும் எவரும் இதை வரவேற்றல் முடியாது. பொதுமக்கள் தாம் உண்மைக் கலையின் உரைகல் என்றால், உடையில்லாக் காட்சிதான் உயர்ந்த கலையாக இருத்தல் முடியும். பாடல்களைப் பற்றிக் குறிப்பிட ஒன்றுமில்லை. உரை நடையில் நகை உள்ளது; சுவை இல்லை. பின்னணி இசை, படப்பிடிப்பு மிக நன்று! இயக்கம் (Direction)அவற்றினும் நன்று! முகத்தைச் சுளிக்க வைத்து உள்ளத்தைக் கசக்க வைக்கும் பல ஆடல் பாடல்களையும், உடற் புனைவுகளையும் நீக்கியிருந்தால் படம் வரவேற்புக்குரியது! ஏணியைப் படுக்கப்போட்டு ஏறுவதால் என்ன பயன்?

– தொலைநோக்காடி.

செய்தி வட்டம்.

கென்னடியைப்பற்றி...

அண்மையில் மறைந்த அமெரிக்க நாட்டின் 35-ஆவது குடியரசுத் தலைவர் சான் பிட்ஃசெரால்டு கென்னடியின் பிறந்த நாள் மே 29. அவர் நினைவாகச் சில குறிப்புகள்:

குடியரசுத் தலைவராக அவர் வரும்பொழுது அவருக்கு அகவை 43. இவ்வளவு சிறு அகவை உடையவர் அமெரிக்காவில் யாரும் மக்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதில்லை. நாட்டின் மாபெரும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கத்தோலிக்கரும் அவரே. அவரது வாழ்நாட்கள் சில; அவர் செயல்கள் பல. ஒன்பது குழந்தைகள் உள்ள குடும்பத்தில் இரண்டாவதாக மசாசூசெட்சு மாநிலத்தில் பாசுட்டன் நகரை ஒட்டியுள்ள புருக்ளின் என்ற இடத்தில் 1917 மே 29-இல் கென்னடி பிறந்தார்.

வறுமைக்கும் பஞ்சத்துக்கும் தப்பி அயர்லாந்திலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள், அவரது முன்னோர்கள். தந்தை சோசப் பி. கென்னடி தம் தனி முயற்சியால் பெரும் செல்வர் ஆனவர். பொது வாழ்க்கையில் அவர் ஈடுபட்டு, 1937 முதல் 1940 வரை பிரிட்டனில் அமெரிக்கப் பன்ன(தூத)ராகப் பணியாற்றினர். தாயார் ரோசு, மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர். பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு வாழ்க்கையில் ஒழுங்கு, போட்டியில் அன்பு-இவற்றையே ஊட்டி வந்தனர். 'செய்வன திருந்தச் செய்' என்பதும், "தோட்டியாகப்போனாலும் சரி; உலகிலேயே சிறந்த தோட்டியாக இரு" என்பதும் அவர் தந்தை அவர்க்குக் கற்றுக் கொடுத்த தலையாய அறிவுரைகள்.

பாசுட்டன் நகரில் உள்ள 'ரிவர்டேல் கவுண்ட்டி' பள்ளியில் கென்னடி முதன் முதலில் படித்தார். ஒல்லியான தோற்றமும் பணிவும் உள்ள சிறுவனாக அவர் இருந்தார். எப்போதும் சிந்தித்தவாறு இருப்பார். வரலாற்றுப் பாடமும் விளையாட்டு நேரமும் அவருக்குக் கற்கண்டு. 18-ஆவது அகவையில் ஆர்வார்டு பல்கலைக் கழகத்தில் கென்னடி சேர்ந்தார். கல்லூரியில் படிக்கையில் மாணவர் வெளியீடு ஒன்றின் ஆசிரியர் குழுவில் பணியாற்றினர்.

தந்தை கென்னடி இங்கிலாந்தில் பன்ன(தூத)ராக இருக்கையில் மகன் கென்னடி, இலண்டன் பொருளியல் கல்லூரியில் சேர்ந்து, புகழ் பெற்ற பொருளியல் அறிஞர் ஓரால்டு லாசுக்கியின் கீழ்ப் படித்தார். மீண்டும் ஆர்வர்டு திரும்பி, 1930–இல் "இங்கிலாந்து படைக் கலங்களைப் பெருக்கிக் கொள்ளத் தவறியதேன்" என்று ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினார். அடுத்து, இக் கட்டுரையை விரிவாக்கி, "இங்கிலாந்து தூங்கியதேன்?" என்ற தலைப்பில் ஒரு நூலாக வெளியிட்டார். இந்நூல் ஏராளமாக விற்பனையாயிற்று; கென்னடி ஒரு நல்ல எழுத்தாளர் என்று புகழ் பெற்றார். பின்னர், "துணிந்தவர் வாழ்க்கை" என்னும் புத்தகத்தை எழுதி, புலிட்சர் பரிசு பெற்றார்.

1941-இல் சான் கென்னடி அமெரிக்கக் கடற்படையில் பொறுப்பான பணியில் சேர்ந்தார். கடற்படையில் அவர் ஆற்றிய பணி வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. கென்னடி பொறுப்பில் இருந்த பி. டி. 109 என்னும் 'தொலைவெடி'ப் படகைச் சப்பானியப் போர்க் கப்பல் ஒன்று பசிபிக் பெருங்கடலில் சாலமோன் திட்டுகள் அருகில் இரு கூறுகப் பிளந்து விட்டது. ஊனமுற்ற முதுகு, உழைத்த களைப்பு, எதிர்பாராத இன்னல் இவற்றிடையே கூட, மறவர் கென்னடி தன்னந் தனியராகத் தம்முடனிருந்தவரில் பலரைக் காப்பாற்றினார். மூழ்கிக் கொண்டிருந்த படகிலிருந்த படுகாயமுற்ற மீகாமன் ஒருவருக்கு உயிர்காக்கும் பட்டையை இடுப்பில் மாட்டி, அதைப் பல்லால் கடித்து இழுத்த வண்ணம் பல கற்கள் கடலில் நீந்தி, ஒரு நிலத்திட்டில் கொண்டு போய்ச்சேர்த்தார். அவரது மறமும், துணிச்சலும் அவருக்கு அமெரிக்கக் கடற்படையின் சிறப்புப் பரிசைப் பெற்றுத்தந்தன.

போருக்குப் பின்பு சிறிது காலம் சான் கென்னடி தாளிகைச் செய்தியாளராகப் பணியாற்றினார். 29-ஆம் அகவையில் (1946) அவர் அமெரிக்க ஆள்நர் அவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952-இல் அவர் பாராளுமன்ற உறுப்பினரானார்; 1961-இல் அமெரிக்காவின் 35–வது மக்கள் தலைவரானார்.

கென்னடி 1953-இல் சாக்குலைன் புவியர் என்னும் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டார். வெள்ளை மாளிகை அரியணையில் அமர்ந்த கென்னடி விரைவில் உலகப் புகழ்பெற்றார். வேலை பார்ப்பதென்றால் அவருக்குத் தேன் குடிப்பதுபோல; அனைத்திலும் மேலாக, மக்களிடம் அவருக்குக் கொள்ளை விருப்பம்! நிற, சமய வேற்றுமைகள் அவர் அறியாதவை. அச்சமே அறியாத துணிச்சல் படைத்தவர், கென்னடி. தனக்கென வாழாதவர்; "ஏழைகளாகவுள்ள பலருக்கு உரிமையுள்ள மக்கள் உதவ முடியாவிடில், செல்வர்களாயிருக்கும்

சிலரை அவர்கள் ஒருபோதும் காப்பாற்ற முடியாது." என்பது அவர் குறிப்பு. கென்னடி நெடுநாள் வாழ்ந்து விடவில்லை; 46-ஆம் அகவையில் அவரது வாழ்க்கை முடிந்துவிட்டது. பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகள் மகள் கரோலின் அகவை 7; மகன் சான் அகவை 4. இருவரையும் வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு, திருமதி கென்னடி மீது விழுந்தது. 1963 நவம்பர் 22-ஆம் நாள் குடியரசுத் தலைவர் கென்னடி கொலையுண்டார்.

● உட்புறக் கடலாய்வு!

கடலில் ஆராயப்பட வேண்டிய இடங்களும், அறியப்படவேண்டிய செய்திகளும் இன்னும் ஏராளமாக உள்ளன. அடுத்த சூலை மாதம் புளோரிடா கடற்கரைக்கப்பால் இவ்வகையான ஆராய்ச்சி ஒன்று நடைபெற இருக்கின்றது. ஆராய்ச்சிக் குழுவைச் சேர்ந்த கடலாய்வறிஞர்கள் பலர், சூலை மாதம் ஆறும் நாள் இக் கடற்பகுதியில் உள்ள ஆழமான நீர்க்குள் 192 அடி ஆழத்திற்கு 40 அடி நீளமுள்ள கடலடி ஆய்வுக் கூடம் ஒன்றில் வைத்து இறக்கப் பெறுவர். இக் குழுவில் விண்வெளிப் பயணி காட் கார்ப்பெண்டர் உட்பட எழுவர் இருப்பர். அவர்கள் கடலுக்குள் இருந்து ஆராய்கின்ற ஆய்வுக் கூடத்திற்குச் 'சீ லாப்' என்று பெயர். இவர்கள் 21 நாட்கள் கடலுக்கடியில் இவ்வாய்வுக் கூடத்தில் தங்கியிருந்து ஆராய்ச்சி நடத்துவர். அறிவியல், உயிரியல், உடற்கூற்றியல், உளவியல் முதலிய துறைகளில் மிகவும் தேர்ச்சி பெற்ற அறிஞர்கள் இக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

● 'சாட்டர்ன்-1' ஏவுகணை !

மே திங்கள் கடைசி கிழமையில் அமெரிக்க வானாய்வுக் கூடம் 'சாட்டர்ன்-1' என்ற ஏவுகணையை வான்வெளிக்கு விடுத்தது. இந்த ஏவுகணையின் முன்புறத்தில் செயற்கை நிலவுக் கூண்டு ஒன்று பொருத்தப்பெற்றிருந்தது. இதுவரை செலுத்தப்பெற்ற ஏவுகணைகளில் "சாட்டர்ன்-1" மிகவும் ஆற்றல் வாய்ந்ததாகும். இது விடுக்கின்ற செயற்கை நிலவு, இயக்குநர் உதவியின்றியே விண்வெளியில் செலுத்தப்பெறும். இப்படிப்பட்ட 'அப்போலா' என்ற செயற்கை நிலவுக் கூண்டில்தான் 1970-ஆம் ஆண்டில், அமெரிக்க விண்வெளிப் பயணிகள் நிலாவுருண்டைக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளனர். 'அப்போலா'வின் எடை பதினெட்டரை 'டன்' ஆகும். இவ்வளவு நிறை கொண்ட செயற்கைக் கோள் இதுவரை விண் வெளியில் செலுத்தப் பெறவில்லை. ஏவுகணையின் முகப்பில் உள்ள இந்த செயற்கைக்கோள், நிலவுலகிலிருந்து 110-140 கற்கள் உயரத்தில் விண்வெளியில் எய்யப்

படும். அது தரையிலிருந்து பார்ப்பவர்க்கு இந்த 'அப்போலா' கோள் விடிவெள்ளியைப்போல் காட்சி தரும். இதில் வைக்கப்பெற்ற திரைப்படப்பிடிப்புக் கருவிகள் வான்வெளித் தோற்றத்தைத் தொடர்ந்து படம் எடுக்கும். இக் கருவிகள் செயற்கைக்கோள் எரிந்து போகும் பொழுது காப்பாக 'அட்லாண்டிக்' பெருங் கடலில் இறக்கப்பெறும்.

முசாபர்பூர் விண்வீழ் கொள்ளி.

சென்ற மாதத்தில் புதுதில்லிக்கு வட கிழக்கில், 60 கற்கள் தொலைவில் உள்ள 'முசாபர்பூர்' என்ற ஊரில் பெரிய விண்வீழ்கொள்ளி ஒன்று வந்து விழுந்தது: இது 153 'கிராம்' எடையுள்ளது. இது விழுந்த வுடனேயே கண்டு எடுக்கப் பெற்றதால் இதன் மூலகங்களான எஃகு முதலிய மாழை (உலோக)ப் பொருள்கள் ஆராய்ச்சிக்கு மிகவும் உதவு வனவாக அமைந்துள்ளன என்று இதனை ஆராய முற்பட்டிருக்கும் வாசிங்டன், மித்சோனியன் கழக அறிவியலறிஞர் பர். எண்டர்சன் குறிப்பிட்டுள்ளார். ஏறத்தாழ 500 கோடி ஆண்டுகட்கு முன் கதிரவன் மண்டிலம் தோன்றிய பொழுது ஏற்பட்ட கோள் சிதைவுகளினின்று வெளிச்சிதறிய துண்டுகளில் ஒன்ருகும் இது என்று ஒரு சிலர் கருது கின்றனர். தொடக்கத்தில் மிகமிகப் பெரிய அளவினதாக இவை இருந்திருக்க வேண்டும் என்றும், விண்வெளியின் உராய்வால் இப் பெரிய பகுதிகள் எரிந்து சிதைந்து இச்சிறிய உருவினதாக வந்து விழுந் திருக்க வேண்டும் என்றும் கருதப்படுகின்றன. இதில் உள்ள கூட்டுப் பொருள்கள் அவை அமைந்துள்ள முறை, மூலகங்களின் செறிவு இவற்றை விரிவாக மித்சோனியன் ஆராய்ச்சிக் கழகம் ஆராய்ந்து வருகின்றது.

முகவர்கள் கவனிக்க!

ஒவ்வோர் ஆங்கில மாதத்திலும் 5-ஆம் நாளுக்குள் முந்திய மாதப் பட்டியல் தொகையை அனுப்பி வைப்பதே விரைந்தும் விரும்பிய படியும் இதழ் பெறுவதற்கு வாய்ப் பாகும். பட்டியல் தொகை நெடு நாளுக்குப்பின் வருவதால் இதழ் பெருவதில் தொல்லை நேரும் என்பதை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டுகின்ருேம். மிகுதியான படிகள் தேவைப்படுவோர் முட்கூட்டியே தெரிவிக்கவும். காலம் கடந்து தெரிவித்தால் இதழ்கள் அனுப்பவியலாத நிலையிலிருக்கின்ருேம் என்பதை அறிக.

– அமைச்சர், தென்மொழி.

பெயர்ப்பட்டியல் 6.

பாவாணர் பொருட் கொடைத் திட்டம்:

(6—5—64 முதல் 3—6—64 வரை
அலுவலகத்திற்குப் பணம் விடுத்தவர்கள்.)

திரு. ம. துரைராசன், தலைவர் தமிழ் மன்றம், பெங்களூர் அவர்கள் வழி: தலைக்கு ஓர் உருபா கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: ம. துரைராசன், சி. சந்திரசேகரன் மு. வேணுகோபாலன், இரா. இராமகிருட்டிணன், ஆ. ஞானப்பிரகாசன், ம. செ. குருநாதன், ப். இராமச்சந்திரன், வெ செ. இராசமாணிக்கம், க. ச. தெய்வ சிகாமணி, செ. திருவேங்கடம், சி. இராமசாமி, பாரத் - தினகரன், மா இரா. பாலகிருட்டிணன். 13 00

தலைக்கு 50 காசு மேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: ம. விநயகம், நசீர் உத்தீன், டி. சாம்ராசு, திருவாட்டி சிங் அம்மையார், மு. செகந்நாதன், திருவாட்டி சம்பங்கி, பெ. முருகேசன், பால சுப்பிரமணியன். 4 00

சோமையனூர் திரு. வே. அரங்கன் வழி:

திரு. ஆ. பிழைபொறுத்தான் 1 50

திருவாளர்கள்: வே. அரங்கன், கலியாணசுந்தரம், நமசிவாயம் (தலைக்கு ஓர் உருபா) 3 00

திருவாளர்கள்: கு. அரங்கசாமி, இராமச்சந்திரன், கருப்பையா, வெள்ளைத்துரை, சந்திரசேகன், இராம கிருட்டிணன் (தலைக்கு ஐம்பது காசுமேனி) 3 00

குளத்துப்பாளையம் ந. முத்துக்குமரன் வழி:

திரு. பன்னீர்செல்வம் 3 00

திரு. நடராசன் 2 00

திருவாளர்கள்: நெல்லியான், க கோபால கிருட்டிணன், சின்னத்தம்பி, கா. அப்துல் சலாம் (தலைக்கு ஓர் உருபா) 4 00

திரு. செ. இராசு, சென்னை-6. 5 00

கண்ணத்தங்குடி அ. கோவிந்தராசன் சென்னை 17. 2 00

திரு கு. வெள்ளைச்சாமி, பனையப்பட்டி. 4 00

காரைக்குடி பொறியியற் கல்லூரி மாணவர்கள்:

திரு. சங்கர பாண்டியன்	2	00
திரு. சந்திரசேகரன்	1	00
திரு. வீரபாண்டியன்	2	00
திரு. சீனிவாசன்	3	00
காடுவெட்டி திரு. க. சே. சாத்தப்பிள்ளை பி. எசி.	5	00
மலேயா அன்பர் திரு. சி. பி. எழிலன்	24	40
அவர் வழி: திரு. நெடுஞ்சேரி நா. சு. க. மூர்த்தி	54	00
திரு. பேட்டை ப. குமணன்	24	40
திரு. இரெ. இராமச்சந்திரன்	14	60
திரு. தெ. குப்புசாமி	14	60
திரு. கு. தியாகராசன்	12	20
திரு. வே. வேணு	12	20
திரு. இ. சின்னத்தம்பி	12	20
திரு. வி. நாகராசன்	12	20
திரு. கு. மாரியப்பன்	12	20
திரு. சொ. சாமிநாதன்	12	20
திரு. எம் கே. முத்து	7	30
திரு. கோ. கனகராசன்	2	50
திரு. இரா இருசப்பன்	10	00
திரு. புதுவை சுப்பிரமணியம்	4	00
பெங்களூர் திரு. ந. சீனிவாசன் அவர்கள் வழி:		
சிதம்பரனார் நூல் நிலையத்தின் சார்பாக	7	00
மொத்தம்	293	50
முன் மொத்தம்	1701	71
தொகு மொத்தம்	1995	21

* அடுத்த இதழில் திட்டத்தின் முடிவு அறிவிக்கப் பெறும் *

அடுத்த இதழில்..!

மொழிப் பெரும் புலவர்

ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ.

எழுதும்

" என் அண்ணாமலை நகர் வாழ்க்கை "

என்ற கட்டுரை தொடர்கின்றது! இதில் உண்மைத் தமிழ்த் தொண்டர்களாக நாட்டுக்கு அறிமுகமாகியிருக்கும் தமிழ்ப் பேராசிரியர் சிலரின் போலித் தொண்டுகளை அரங்கத்திற்குக் கொண்டு வருகின்றார் பாவாணர்!